Free Circulation I Germany I England I Swiss
ஆடி.July 2018

# வெற்றிமணி

ESTD 1950

Vettimaniy

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck

தொடர் மலிவு விற்பனை!

தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை



Tel:0231 162377
Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Germany
Fax:0231 147836

## தமிழினம் அழியும் இனமல்ல, மறையும் இனமாக உள்ளது!

Dr IN






S.K.Silks & Gold Paraadise

16th ANNIVERSARY

ஆடி சேல்! மலிவோ மலிவு!

திருமணப் பட்டு சேலைகள், சிறியவர் பெரியவர்களுக்கான பஞ்சாபிகள்,பாட்டி சாறிகள், எதுவானாலும் அதிக தெரிவும், தரமும், மலிவும் கண்டு மகிழ்வும் பயனும் பெற நாடுங்கள்

மாபெரும் ராஜமுத்திரை

Mr.P.Sritharan.Proprietor

Tel:0231 9501 647 Adler str 33 - 44137 Dortmund

U.K
செல்வராஜா
Selvaraja Gold House & Textiles

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Germany
Page.10

Gopara Gnanam GMBH
Tel:0231 5450028 Mob:0171 330 6542
Rheinische str.81 - 44137 Dortmund
Page.02

StaR-Impex
Kipper Str.03
44147 Dortmund/ Germany
Tel:0231 860 26 96
S.29

# எங்கு நட்டாலும் மாமரம் மாமரம்தான் வேறு மரமாக மாற முடியாது.



## யேர்மனி நாட்டின் அதிபர் அங்கெலா மேர்க்கல் முன்னிலையில் உரையாற்றிய நம்மவர்

**டாக்டர் உமேஸ்வரன் அருணகிரிநாதன்**






யேர்மனியின் பேர்லின் மாநிலத்தில் ஜனாதிபதி அங்கெலா மேர்கல் முன்னிலையில் நடைபெற்ற அகதிகளுக்கான அரசியல் மாநாட்டில் கலந்து கொண்டு மருத்துவரும் எழுத்தாளருமான டாக்டர் உமேஸ்வரன் அருண கிரிநாதன் அவர்கள் சென்ற மாதம் உரையாற்றினார். இவர் தனது உரையில் எதற்காக யேர்மனி வந்தடைந்தார் என்பதையும் தற்போது அகதிகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியத்தையும் தன்னை மையப்படுத்தி எடுத்துரைத்தார். இவர் தன்னைப் பற்றிக் கூறுகின்றபோது போர்ச்சூழலில் பாடசாலைக்குச் செல்ல முடியாது பயந்து வாழ்ந்தமை பற்றியும், இலங்கையிலிருந்து எவ்வாறு ஜேர்மனியை வந்தடைந்தார் எனவும் தனது தாயிடம் செய்த சத்தியவாக்கின் படி தற்போது யேர்மனியில் டாக்டராக வாழ்கின்றமை பற்றியும் எடுத்துக் கூறினார். ஒரு மாமரத்தை இலங்கையிலிருந்து பிடுங்கிக் கொண்டு வந்து யேர்மனியில் நடுகின்ற போது அந்த வேர் யேர்மனி நாட்டு மண்ணுடன் வேர் விட்டு வளரும் அதற்கான தண்ணீர் உணவுகளை யேர்மனியிலிருந்துதான் பெறும்.

ஆனால், அந்த வேர் இலங்கையினுடையதே. மாமரம் வேறு மரமாக மாற முடியாது. மாமரம் மாமரம் தான். ஆனால், இங்கு பெற்ற சத்துக்களையும் நீரையும் பெற்று வளர்வதுபோல் இந்த ஜனநாயக நாட்டின் அடிப்படையினை மாற்றக் கூடாது. இது எமது கடமை. நான் இங்கு வந்து ஒரு டாக்டராக தற்போது இருப்பது போல் தற்போது வருகின்ற அகதிகளும் எதிர்காலத்தில் இந்த நாட்டுக்கான தகுதி பெற்றவர்களாக வரக்கூடும். அதனால், அவர்களை ஊக்குவிக்க வேண்டியதும் அவர்களைப் பக்கத்தில் வைத்து வாழாது அவர்களுடன் சேர்ந்து வாழ வேண்டியது எமது கடமை என்றும் எடுத்துக் கூறினார்.

புலம்பெயர்ந்து அகதிகளாக வாழுகின்ற ஒவ்வொரு மனிதர்களும் தமது நாட்டை விட்டு பல சோகச்சுமைகளுடனுமே வந்தடைகின்றார்கள். அகதிகளாக வருகின்றவர்கள். அதனாலேயே இவர் Der fremde Deutschen என்னும் புத்தகத்தையும் எழுதி வெளியீடு செய்திருக்கின்றார். அகதிகள் அவர்களை ஏற்றுக்கொள்ளுகின்ற நாட்டின் வளங்களைப் பெற்று வாழ்வதைப்போல் அந்த நாட்டின் அடிப்படை உரிமைகளைச் சிதைத்துவிடாது. எதிர்காலத்தில் அந்த நாட்டுக்குப் பெயர் சொல்லும் நல்ல பிரஜைகளாக வாழ வேண்டியது கடமையாகும். ஆயினும் அவர்கள் தமது வேர்களை மறந்துவிட மாட்டார்கள் என்பதை டாக்டர் உமேஸ்வர் வலியுறுத்தி யுள்ளார்.

அவர்களுடைய உரையிலிருந்து அறியக் கூடியதாக இருந்தது. கிடைக்கும் அரிய சந்தர்ப்பங்களை நழுவவிடாது நமது வலிகளையும் பதிவுசெய்தல் நன்றே. வெற்றிமணி விழா 2015 ஆண்டு யேர்மனியில் டோட்மூண்ட் நகரில் நடந்தவேளை டாக்டர் உமேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தமை வாசகர்கள் அறிந்ததே.

# அழகியல் பத்திரிகைக்கான விருதை வெற்றிமணிக்கு வழங்கலாம்.



வெற்றி மணி என்னும் அழகிய பத்திரிகையை நீண்ட காலத்துக்கு பிறகு இன்று நேரில் தரிசித்துப் பரிசித்து உருசித்து வாசித்தேன்.

கலாநிதி சிவகுமாரன் அவர்கள் இப் பத்திரிகையை ஜெர்மனியிலிருந்து கடந்த 24 ஆண்டுகளாக அற்புதமாகவும் தவம் போலும் செய்து வருகிறார். அவர்தம் தந்தையார் அமரர் மு.க.சுப்பிரமணியம் (முன்னாள் அதிபர் பொன்பரமானந்தர் வித்தியாலம் குரும்பசிட்டி) அவர்களால் 1950 இல் இலங்கை நாவலப்பிடியில் தோற்றம் பெற்றது இப் பத்திரிகை.
கலையும் இலக்கியமும் காதல் கொண்டு பிரசவிக்கிறது வெற்றிமணி.
பக்கங்கள் ஒவ்வொன்றும் அழகிய குழந்தையின் மண்தொடாத பாதங்கள் போல் மிருதுவாயிருக்கிறது வெற்றிமணி.
அழகிய பத்திரிகைக்கு என்று விருது வழங்கினால் கண்ணை மூடிக்கொண்டு வெற்றிமணிக்கு வழங்கலாம்.
வெற்றிமணி வரலாற்றில் வெற்றி மகுடம் பெற வாழ்த்துகிறோம்.

-கல்லாறு சதீஷ்- சுவிஸ்









வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க
ஓசை 263



ஆரம்பம்:1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com

**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd
Company No: 8876276

# முன்னாள் போராளிகளுக்கான உதவியில் மைத்திரிகாட்டும் "நல்லிணக்கம்" இதுதான்!

இலங்கையில் இருந்து பாரதி



முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவது தொடர்பில் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனால் கொணடுவரப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்திருக்கின்றார். ஒரு தடவையல்ல இரண்டு தடவைகள் இது குறித்த அமைச்சரவைப் பத்திரம் நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிராகரிப்புக்கு ஜனாதிபதியே காரணம் என அமைச்சரவைப் பேச்சாளர் பகிரங்கமாகத் தெரிவித் திருக்கின்றார்.

முன்னாள் போராளிகளுக்கு நிதி நிவாரண உதவிகளை செய்வது விடுதலைப் புலிகளை ஆதரிப்பதற்கு சமமானது எனவும் ஜனாதிபதி அமைச்சரவையில் வெளிப்படையாக தெரிவித்தார் எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் குறிப்பிட்டிருக்கின்றார். ஜனாதிபதியின் இந்த அணுகு முறை, அரசாங்கம் சொல்லிக்கொள்கின்ற நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு முற்றிலும் விரோதமானது. பேரினவாதி களைத் திருப்திப்படுத்து வதற்கே ஜனாதிபதி முற்பட்டிருக் கின்றார் என்பதையும் இது உறுதிப்படுத்து கின்றது.

யுத்தத்தின் போது காணமால்போனோரின் குடும்பங் களுக்கும், யுத்தத்தில் உயிரிழந்தோரின் குடும்பங் களுக்கும், யுத்தத்தில் உபாதைகளுக்கு உள்ளான நபர்களுக்கும் மற்றும் முன்னாள் விடுதலைப்புலி போராளிகளுக்கும் என அனைவருக்குமான வாழ்வாதார நிவாரண தொகை வழங்கப்படுவது குறித்து அமைச்சர் சுவாமிநாதன் அமைச்சரவையில் அமைச்சரவை பத்திரம் ஒன்றினை தாக்கல் செய்திருந்தார். அமைச்சர் சுவாமிநாதனின் இந்தச் செயற்பாடு காலத்தால் பிந்தியது என்றாலும் கூட, அவசியமான ஒன்றுதான். போர் முடிவுக்கு வந்து ஒன்பது வருடங்களின் பின்னரே அமைச்சர் இது குறித்துச் சிந்தித்திருக்கின்றார். ஜெனீவாவில் வரக்கூடிய அழுத்தங்களைச் சமாளிப்பதற்கு இவ்வாறான நகர்வு ஒன்று அரசுக்கு அவசியமாகியிருக்கலாம்.

முன்னாள் போராளிகளின் குடும்பங்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகள், மருத்துவ - உளவியல் ரீதியான பிரச்சினைகள் குறித்த செய்திகள் ஊடகங்களில் தொடர்ச்சியாக வெளிவருகின்றன. இந்த நெருக்கடி களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக தற்கொலை செய்துகொண்ட முன்னாள் போராளிகள் குறித்தும் செய்திகளில் பார்த்துள்ளோம். இந்த நிலை தொடர்வது போரால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில். நம்பிக்கை யீனத்தையே அதிகரிக்கும். இந்த நம்பிக்கையீனம் இப்போது அதிகளவில் இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இந்தப் பின்னணியில் சுவாமிநாதனால் முன்மொழியப்பட்ட பிரேரணை முக்கியமானது.

அமைச்சர் சுவாமிநாதனின் அமைச்சரவைப் பத்திரத்தை ஜனாதிபதி நிராகரிப்பது தொடர்பில் தனது கடுமையான அதிருப்தியை வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனும் வெளியிட்டிருந்தார். "விடுதலைப் புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டுவிட்டது என்று அரசாங்கம் கூறிக்கொண்டிருக்கும் நிலையில், அவ் அமைப்பில் அங்கத்தவர்களாக இருந்தவர்களுக்கு வாழ்வாதாரங் களைக் கொடுக்காமல் விடுவது மனித உரிமைகளுக்கு அப்பாற்பட்ட எதிரான ஒரு செயற்பாடாகும். அமைச்சர் சுவாமிநாதன் கொண்டுவந்த அமைச்சரவைப் பத்திரமானது மிகச் சரியானதாகும். அதற்கேற்றவாறு அரசாங்கம் உரிய நடவடிக்கைகள் எடுக்காமையானது மிகவும் பிழையான ஒரு நடவடிக்கையாகும்" எனவும் வடக்கு முதல்வர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

நல்லிணக்க முயற்சிகளில் மிகவும் முக்கியமானது, போரில் ஈடுபட்ட முன்னாள் போராளிகளை சமூகமயப் படுத்துவதும், அவர்களுக்கான வாழ்வா தாரத்தை ஏற்படுத்திக்கொடுப்பதும் என்பது மனித உரிமைகள் அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. தொடர்ச் சியாக இடம்பெற்ற இன ஒடுக்குமுறையிலிருந்து தாம் சார்ந்த சமூகத்தையும் பாதுகாக்கப் போராடியவர்கள்தான் அவர்கள். அவர்களுடைய போராட்டத்தில் ஒரு அரசியல் இருந்தது. அவர்களுக்கு வழங்கப்படும் உதவிகள் அவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுப்பதாகவும், சாதாரண வாழ்க்கைக்கு அவர்கள் திரும்புவதற்கு உதவுவதாகவும் அமையும். அதேவேளையில், அதனை மறுப்பது, தாம் ஒதுக்கப்படுகின்றோம் என்ற உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்துவதாக அமையும்.

ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் பௌத்த - சிங்களத் தேசியவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்கே இப்போது முற்படுகின்றார். கட்சிக்குள் அதிகரித்துவரும் ராஜபக்ஷக் களின் ஆதிக்கத்தை எதிர்கொள்வதற்னான ஒரு உபாயமாக இந்த அணுகுமுறையை அவர் கையாள் கின்றாரா என்ற சந்தேகமும் உள்ளது. அதாவது, தன்னுடைய அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கு கடும் தேசியவாத நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டிருக்கின்றது. நாட்டின் தலைவராக நிறைவேற்று அதிகாரங்களைத் தன்னிடம் வைத்திருக்கும் ஜனாதிபதி, தேசிய முக்கியத் துவம் வாய்ந்த இவ்வாறான விடயங்களில் கடும் போக்கை எடுப்பது இலங்கை அரசியலில் வழமையானதுதான்.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 9 வருடங்கள் கடந்துள்ளன. இந்தக் காலப்பகுதியில் வடக்கு - கிழக்கில் அமைதியான நிலைதான் காணப்படுகின்றது. மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டம் வெடிப்பதற்கான நிலைமைகள் எதுவும் இல்லை.

**தொடர்ச்சி 4ம் பக்கம்.**



## வீட்டு நிகழ்வுகளும் வீடியோ கலாசாரமும்

அனித்தா பூஷன்



# நிஜம்கூட இன்று நிழலே!

இன்றைய நமது வாழ்வில் வீடியோவும் ஓர் பகுதியாக பின்னிப்பிணைந்துள்ளது. இதன் முக்கியத்துவமும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. நடைபெற்ற நிகழ்வுகளை உயிரோட்டமுள்ளதாக மீண்டும் பார்த்து மகிழ்வதற்கும், நிகழ்வுகளை தவறவிட்டவர்கள் பார்ப்பதற்கும், எமது அடுத்த சந்ததியினர் பார்த்து மகிழ்வதற்குமான சிறந்த பதிவே வீடியோவாகும். ஆயினும் நடைபெற்ற நிகழ்வை பதிதலே வீடியோ என்ற நிலை மாறி, வீடியோவிற்காக நிகழ்வா என்ற குழப்பமும் ஒருசில சந்தர்ப்பங்களில் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது.

எமது பண்பாட்டைப் பொறுத்தவரை எந்தக் காரியத்தையும் நாள், நட்சத்திரம் பார்த்து ஆரம்பிக்கும் வழக்கம் காணப்படுகின்றது. ஆனால் வாழ்வின் மிக முக்கியமான நிகழ்வாக அமையும் திருமணநிகழ்வில் வீடியோவின் வருகைக்காக சுபநேரத்தை தவறவிடத் தயாராக இருக்கும் மக்களை இன்று காணமுடிகின்றது. இதைவிட சிலசமயங்களில் திருமண வீட்டிலோ அல்லது பூப்புனித நீராட்டுவிழாவிலோ வருகை தரும் விருந்தினர்கள்கூட நேரடியாக வருகை தந்திருந்தும் நிகழ்வுகளை பார்க்க முடிவதில்லை. ஏனெனில் வீடியோவுக்கான பல்வேறுபட்ட உபகரணங்கள் மற்றும் நபர்களால் நிகழ்வுகள் மறைக்கப் படுகின்றது. ஒரு சில இடங்களில் திரையில்தான் நிகழ்வுகளை பார்க்க முடிகின்றது.



உண்மையில் திரையில் நிகழ்வுகள் போடப்படுவது பின்னால் அமர்ந்திருப்பவர்களும் தெளிவாக பார்க்க வேண்டும் என்பதற்காகவே. ஆனால் முன்னால் இருப்பவர்களும் திரையில்தான் நிகழ்வுகளை பார்வையிடும் நிலையும் சில இடங்களில் இன்றுள்ளது. நிஜம் கூட இன்று நிழலாகிவிட்ட நிலை!

சில சிறுசிறு சம்பிரதாய நிகழ்வுகள் மாற்றப்பட்டும், ஒருசில எமது பண்பாட்டு வழக்கத்தில் இல்லாததும் இன்று வீடியோவிற்காக நிகழ்வுகளில் சேர்க்கப் படுகின்றது.

அனித்தா செல்வராஜா பூஷன்

முக்கியமாக திருமண நிகழ்வில் தென்னிந்திய சினிமா கலாசாரம் என்பதற்கும் மேலாக வட இந்திய பண்பாட்டு முறைமையும் புகுத்தப்படுகின்றது.

இதைவிட நிகழ்வுகளை நடாத்துபவர்கள் வீடியோ படப்பிடிப்பாளரின் விருப்பு, வெறுப்புகளுக்கேற்ப நடந்து கொள்ள வேண்டியும் உள்ளது. அதேவேளை சினிமா படங்களில் வரும் காட்சிகளின் பின்னணிக்கு ஏற்ற வகையில் பாவனை செய்ய வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

வளர்ந்து வரும் உலகின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப நாமும் எம்மை மாற்றிக்கொள்வது இன்றியமையாததாகின்றது. ஆயினும் நம் தமிழ்வழி மரபுக்குரிய சில பண்பாட்டு அம்சங்களையும் பேணிபாதுகாக்க வேண்டியதையும் மறந்துவிடலாகாது.

இன்றும் தமிழர் பாரம்பரியத்தில் மதக்கோட்பாடுகளுடன் நெருக்கமான உறவினைக் கொண்டுள்ள மரணச்சடங்குகளிலும் வீடியோ படப்பிடிப்புக்கள் கேலிக்கிடமான முறையில் நடக்கின்றன. உணர்வு பூர்வமாகச் செய்யப்படும் இத்தகைய சடங்குகளும் வீடியோ மோகத்தால் வெறும் பாவனையாகிவிட்ட நிலையையே காணப் படுகின்றது.

அதாவது ஒரு நிகழ்வின் பண்பாட்டின் உள்ளார்ந்த வல்லமை என்பது ஒப்பீட்டு அளவில் உண்மை நிலையை இழந்துள்ளது. இது புலம்பெயர் நாட்டில் மட்டுமல்ல தாயகத்திலும் இந்நிலைதான் என்பது வேதனைக்குரியது. இருப்பினும் சமுதாயத்தில் வீடியோவின் செல்வாக்கு மிகப்பலமாக இருப்பதும் மறுக்க முடியாத ஒன்றாகும்.

## முன்னாள் போராளிகளுக்கான ... 3ம் பக்கத் தொடர்ச்சி

ஆக, முன்னாள் போராளிகளுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்குவது விடுதலைப் புலிகளை ஆதரிப்பதாகிவிடும் என்ற கருத்து ஏற்று பௌத்த - சிங்கள கடும் போக்காளர்களைத் திருப்திப்படுத்துவதை மட்டும் இலக்காகக் கொண்ட தாகவே இருக்கும். இது தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியையும் விரக்தியையும் அதிகப்படுத்துவதாக மட்டுமே இருக்க முடியும் என்பதுடன், நல்லிணக்க முயற்சிகளுக்கு முற்றிலும் விரோதமானது.

இந்த சட்டமூலத்தைத் தடுப்பதற்கு தான் முற்படவில்லை எனவும், தமிழ் மக்கள் மத்தியில் தனக்குள்ள செல்வாக்கைக் குறைப்பதற்கான ஒரு சதியே இந்தச் செய்தி எனவும் ஜனாதிபதி சொன்னதாக பிந்திய செய்தி ஒன்று வெளிவந்திருந்தது.

அவ்வாறாயின் குறிப்பிட்ட சட்டமூலத்தைக் கொண்டுவருவதில் தனது நிலைப்பாடு என்ன என்பதையும், அதனைத் தடுப்பவர்கள் யார் என்பதையும் ஜனாதிபதி பகிரங்கமாக வெளிப்படுத்தியிருக்க முடியும். சர்வதேச அரங்கில் கொடுக்கும் வாக்குறுதிகளுக்கு விரோதமாகச் செயற்படுவதற்குத் தான் அரசாங்கம் முற்படுகின்றது. முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்துக்கான வசதிகளையே செய்வதற்கு விரும்பாத ஒரு அரசாங்கம், தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் என எவ்வாறு நம்பமுடியும்?




விநாயகா ஜோதிட நிலையம்



இந்தியாவிலிருந்து பாங்காக், சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, கனடா, அமேரிக்கா போன்ற பல நாடுகள் சென்று இம்முறை ஜேர்மன் வந்திருக்கும் பிரபல பரம்பரை சோதிடர் சர்வதேச பிரபல்யம் வாய்ந்த

பண்டித் துர்க்கா பிரசாத்

எல்லித பிரச்சினைகளுக்கும் 09 நாட்களுக்குள் தீர்வு பெற்றுத் தரப்படும்..!

குடும்ப, காதல் விடயங்கள், மனை விவகாரங்கள், குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள். படிப்பு, திருமண யோகம், தொழில், மனை, அபிவிருத்தி, லட்சுமிகடாட்சம் வாகனம், வீசாப் பிழச்சினைகள், நீதிமன்ற வழக்குகள், ஆரோக்கியம், பாக்கியம், வியாழ முன்னேற்றம் செய்வினை கோளாறுகள், பேய், பிசாசுத் தொந்தரவுகள், கண்திருஸ்டி, நாக தோஷம் மற்றும் உங்களது அனைத்துப் பிரச்சினைகளுக்கும்

உடனடித் தீர்வுகளுக்கு எமது சாஸ்திரியை நாடுங்கள் வெற்றி நிச்சயம்....!

பேசும் மொழி - ஆங்கிலம், ஹிந்தி, ஜேர்மன் மற்றும் தமிழ்
பார்வை நேரம் - வாரத்தின் 7 நாட்களும்
காலை 08.00 மணி முதல் மாலை 09.00 மணி வரை

Tel: +49 1512 95 88 372 +49 1521 33 58 655

PRABA SUPERMARKT
Hindenburgstraße 212, 41061 Mönchengladbach





ESTM Jewellery Dortmund

E.S.T

எங்கள் சேவை
திருமண ஆபரணங்கள்
ஓடர் நகைகள்
திருத்த வேலைகள்
தாலிக்குப் பொன்னுருக்குதல்
காது முக்குக்குத்தல்

500€ தங்க நகை வாங்குவோருக்கு
லக்ஷ்மி பென்ரன்
1000€ வாங்குவோருக்கு
1 தங்க நாணயம் வழங்கப்படும்
7 தங்க நாணயம் சேர்த்து வருவோருக்கு
1 பவுண் தங்க நகை
அன்பளிப்பாக வழங்கப்படும்
முடிவு திகதி 31.12.2018



பழைய நகைகளுக்குப் பதிலாக சிங்கப்பூர் நகைகள் மாற்றிக் கொடுக்கப்படும்

ESTM Jewellery | Rheinische Str. 73a | 44137 Dortmund | Tel.: 0231 / 1899023 | Mobil: 01633642642




25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்


TKS BEST FOODS
TKS Best Foods
5வது ஆண்டில் கால்பதிக்கும்
எமது நிறுவனம்
06.10.2018
சனிக்கிழமை
என்றும்,
எங்கேயும்,
எப்போதும்....
கண்டிராத மாபெரும் மலிவு விற்பனையும்
குலுக்கல் முறையில் பரிசில்களும்
TRS
Rabeena
Tilda
Maliban
Maggi
Elephant House
Nestle
PERFIT
இன்னும் பல நிறுவனத் தயாரிப்புக்கள்....
மளிகை உலகின்
BIG BOSS
எமக்கு ஆதரவு வழங்கிய, வழங்கிக் கொண்டிருக்கின்ற
வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகள்...
பரிசில்கள்
வெகு விரைவில்!
0049 231 950 468 83
0049 231 950 468 82
tksbestfoods
tks-bestfoods@web.de
www.tks-bestfoods.de
Rheinische Str. 79, 44137
Dortmund Germany



# தமிழினம் அழியும் இனமல்ல, மறையும் இனமாக உள்ளது!

## நாம் நாமாக இருப்பது அசிங்கம் அல்ல

ராம் பரமானந்தன்

சில மாதங்களுக்கு முன் ZARA எனும் மேற்கத்தேய கலாச்சார ஆடை உற்பத்திநிறுவனம் „Check Skirt" என்று எமது ஆண்கள் அணியும் சாரத்தை விற்பனை செய்ததது, நேற்று ஒரு வெள்ளைப்பெண், ஒரு பார்ட்டியின் போது, நெற்றியில் எம்மவர் திருமணப் பெண்களின் அலங்காரங்களைச் சூடியிருந்தார். இவற்றை இனவியற்கல்வியில் „cultural appropriation" என்பர். இது என்ன எனப் பார்ப்போம்.

எமது ஆடை, அணிகலங்களை, முடிந்தவரை வெள்ளை உலகுடன் ஒத்துப்போகும்வண்ணம் மாற்றிக்கொள்கிறோம். அவர்கள் கட்டுப்பாடுகளுக்கு இணங்கி, எங்கள் கலாச்சார அம்சங்களை மறைத்துக்கொண்டு, நாம் எம்மை நாம் அறியாமலே தரத்தில் குறைத்துக்கொள்கிறோம். எங்களது சொந்தப் பெருமைகளைப் பேணாமல் இருப்பதுடன், வெள்ளையர் எம்மேல் காட்டிய துவேசத்தை நாம் உள்வாங்கி நமக்குள் நாமே எம்மினத்தின்மீது ஒரு வித துவேசத்தை பேணிக்கொள்கிறோம். இதை இனவியற்கல்வியில் „Internalised Racism" என்பர். அதே நேரத்தில், எமது மக்களிடையே, எம்மவர் கலாச்சார அம்சத்தையோ, மொழியையோ வெள்ளையினத்தவர் பேணும்போது நாம் அதை மிகப்பாரிய சிறப்பு என்கிறோம்.



ஒரு வெள்ளையினத்தவர் தமிழ் பேசும்போதும், எமது ஆடைகளை அணியும்போதும், நாம் அதை கொண்டாடும்வண்ணம், புலம்பெயர்நாட்டில் பல இனவாத சிக்கல்களுக்குள்ளும், இன்னொருவன் நாட்டில் வளர்ந்து வரும் எம் இளைஞர்களின் கலாசாரச்சிறப்பையும் மொழியியல்பையும் சாதரணமாக எற்றுக்கொள்கிறோம். நாம் இத்தனை இடர்களுக்குள்ளும், பல இனங்களின் தலையீடுகளிடையும், எமது இனச்செல்வாக்கை பேணி வருவதை சிறப்பென மதிப்பது, சற்று குறைவேதான் என்பது எனது கருத்து. இதனாலும் பல இளைய தமிழர் தமிழ்க்கலாச்சாரத்தை விலகிச்செல்கின்றனர்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னே ஐரோப்பாவில் ஒரு வெள்ளைப்பெண் மிகச்சுத்தமான ஈழத்தமிழைப் பேசியதை ஊடகங்கள் மிகப் பெருமையாக கொண்டாடின. அவரது முயற்சி நிச்சயம் போற்றிக்கொள்ளவேண்டியதுவே. எம்மவர் கலை நிகழ்ச்சிகளில் தமிழ் பேசக்கூடிய வெள்ளை மக்களை இன்றும் சிறப்புவிருந்தினராக அழைக்கின்றனர். இதுவே நான் ஈழத்தமிழை பேச: „ராம் கனக்கா கதைக்கும்" என்கின்றனர். இதை இனவியல் (Ethnologie) ஆராய்ச்சியில் „White Praising" (வெள்ளையைப்- போற்றுதல்) என்பர். இந்தச் சொல்: வெள்ளை இனத்தையும், அது செய்வதையும் சிறப்பென போற்றுவதை குறிக்கும்.

வெள்ளையினத்திடம் தற்காலகட்டத்தில் இருக்கும் அனுகூலத்துடன் („White Privilege"), அது எந்த கலாச்சாரத்தினுடைய செல்வாக்குகளையும் எடுத்துக் கொண்டாடலாம், அதே நேரத்தில் எனது கலாச்சாரத்தையோ எனது மதத்தையோ சிக்கலின்றியும், இழிவான பார்வைகள் இன்றியும் கொண்டாட புலம்பெயர் நாட்டில் என்னால் முடிவதில்லை.

விபூதி அணிந்து நான் சென்றால், „என்ன உன் நெற்றியில் ஊத்தை?" என கண்மூடித்தனமாக கேட்கின்றனர், ஆனால் ஐரோப்பிய நாகரீக ஆடை அங்காடிகள், பொட்டுக்களையும், மருதாணியையும் வியாபரம் செய்ய, அவற்றை வெள்ளையினத்தவர் வாங்கி, Festival களிலும் இரவுப்பார்ட்டி களிலும் அணிந்து எமது புனிதமான கலாச்சாரச் செல்வாக்குகளை இழிவு செய்கின்றனர். இதையே „Cultural Appropriation" அதாவது இன்னொரு இனத்தின் அடையாளங்களை தவறாக பயன்படுத்துவதென குறிப்பர். இவர்கள் இப்படியான கண்மூடித்தனமான செயல்களில் இறங்க, நாம் எமது கலாச்சாரத்தை மேற்கத்தேயர் மத்தியில் கொண்டு செல்ல தயங்கி, அவர்கள் எமது கலாச்சாரத்தை பல விதங்களில் அவமதிக்க, அதற்கு நாமும் அவர்கள் மறைமுகமாக காட்டும் துவேசத்திற்கு இடம் கொடுக்கிறோம்.

இன்றுவரை சாரம், வேட்டி அணிவதர்காக தமிழ் மக்களை வெள்ளையினம் கேலி செய்ய, Colonialism நடைபெற்றபோது போர்த்துக்கேய, ஒல்லாந்த மற்றும் ஆங்கில ராணுவங்கள் எமது ஆண்களை சாரத்தின் அடிப்படையில் கேலிச்சித்திரவைதை செய்வது இன்றுவரை ஐரோப்பியர் இடையே தொடர்கிறது. இத்தனை நடந்தும் இந்த வருடம் Spain நாட்டு நிறுவனம் அதாவது இன்னுமொரு, பல இன அழிப்புகளுக்கும், Colonial ஆட்சிகளுக்கும் பெயர்போன நாட்டு நிறுவனமான ZARA „Check Skirt" என்று எம்மவர் 3 யூரோக்களுக்கு வாடிக்கை செய்யும் சாறத்தை ஒன்றிற்கு நுருசு 69.99 விற்கு விற்பனை செய்தது பெரும் சர்சையானது.

இப்படியே வெள்ளையினத்தவர், தமது அனுகூலத்தை பயன் செய்து எமது இயற்கைவளங்களில் இருந்து கலாசாரவளங்களைக்கூட பணமாக்கி முதாளித்துவத்தைப்பேணுகையில், எம்மை நாமே அடக்கிகொண்டு அக்கிரமங்களுக்கு இடம் கொடுக்கின்றோம். இதனால் வெள்ளையினத்தை வெறுக்க வேண்டும் என்பது எனது கருத்து அல்ல, இனவாதத்தை தூண்டுவதும் எனது நோக்கம் அல்ல.

தமது அனுகூலத்தைப்புரிந்து கொண்டு, வெள்ளைமக்கள் ஏனைய கலாச்சாரங்களை கண்மூடித்தனமாக பார்க்காதிருக்க, முதற்கண் எமது சொந்த சில விழுமியங்களை நாமே பெருமையாக கொண்டு செல்ல வேண்டும். நாம் வெள்ளைமக்களைவிட குறைந்தவர்கள் அல்ல என்பதையும், அவர்களது வாழ்வுமுறையே மிகப் புதுமையானது எனவும், உயர்வானது எனவும் நினைப்பதை மீழ யோசிப்போம். நாம் நாமாக இருப்பது அசிங்கம் அல்ல என்பதை, இளைய சமுதாயம் ஏற்றுக்கொள்ளட்டும்.



# ஈழத்தில் பழந்தமிழர் நகரமே ஒன்று புதைந்து கிடக்கிறது

பால.சுகுமார், முனாள் முதன்மையர், கலை கலாசார பீடம் கிழக்குப் பல்கலைக் கழகம்

## ஈழத்தில் ஒரு கீழடி : திருக்கரசை





திருக்கரசை மண்ணை, கிளிவெட்டி கிராமத்திலிருந்து பத்து மைல் தூரத்திலும் கங்குவேலி கிராமத்திலிருந்து இரண்டு மைல் தூரத்திலும் மாவலி கங்கையின் கரையோரம் வளமான காடுகளுக்குள் பல நூற்றாண்டுகள் மறைந்து போன நாகரிக தொட்டிலாக நாம் அடையாளம் காண முடியும்.
ஈழத் தமிழர்களின் தொன்மை நாகரிகத்தின் முடிச்சு அவிழும் இடமாக அமைவதற்கான எல்லா ஆதாரங்களும் இங்கு புதைந்து கிடக்கின்றன.

திருக்கரசை புராணம் இந்த நிலத்தை இப்படி வர்ணிக்கிறது.

"காடெலாங் கரிநல் யானை கரையெலாம் பவளக் குப்பை
நாடெலா மிரத்ன ராசி நகரெலாம் நல்லோர் சங்கம்
வீடெலாஞ் செம்பொற் கூரை வெளியெலாஞ் செந்நெற் குன்றங்
கோடெலாம் மஞ்ஞை யீட்டம் குழியெலாங் கழுநீர்ப் போது. 13

காவெலாம் மதன பாணங் கரையெலாஞ் சங்கச்சங்கம்
பூவெலாம் வண்டின் சாலம் புறவெலாம் நிரையி னீட்டம்
மாவெலா மன்னக் கூட்டம் மலையெலாங் காள மேகம்
நாவெலா மமிர்த கீத நதியெலா முதுநீர்த் தீர்த்தம். 14

தண்ணமர் சாலி முத்தும் தடங்கட லிப்பி முத்தும்
வண்ணவொண் பணில முத்தும் வரையறா வோல முத்தும்
கண்ணமர் கரும்பின் முத்துங் ககனமஞ் சீன்ற முத்தும்
வெண்ணில வில்லாப் போது மிகுநிலாக் கொழிக்கு மன்றே. 15

பணிலம்வெண் டிரையி னார்ப்பப் பவளமுந் தவள முத்தும்
மணிகளுஞ் சாந்தும் பூவும் மாலையும் பிறவும் வேய்ந்தும்
திணிமதிக் குடைக வித்துத் திரைக்குழாங் கவரி காட்ட
அணிமணி வீதி தோறு மாழியு முலாவு மாமால். 16

கொஞ்சிய கிள்ளை மென்சொற் கோதையர் சிலம்பி னார்பும்
வஞ்சியின் காஞ்சி யார்ப்பும் வாயறாத் தமிழி னார்ப்பும்
விஞ்சிய மள்ள ரார்ப்பும் விழாவெழு முழாவி னார்ப்பும்
அஞ்சிறை வண்டி னார்ப்பு மன்றியோ ரார்ப்பு மின்றால். 17

தெளிவுறு கிரணக் கற்றைச் செம்மணிப் பத்தி சேர்ந்து
குளிர்புனல் நதிக ளெல்லாங் குருதியி னாறு போலு
மொளிர்தரு மிப்பி யீன்ற வொண்ணிறத் தவள முத்தின்
வெளிநிலா வீங்கி யுப்பு வேலைபா லாழி யொக்கும். 18

ஊட்டு செஞ்சுடர் மணியினைத் தடியென வுகந்து
காட்டுத் தம்மிரு பதங்காளற் கவர்கின்ற கங்கந்
தோட்டுத் துண்டங்கொண் டுண்பதற் காமெனத் துணிந்து
கூட்டில் வைத்தன பறந்தன வாதரங் கூர்ந்து. 19

மடைகி டந்தவொள் வளவயற் றொளியறா வரம்பின்
கிடைகி டந்தசங் குதவிய முத்தெலாங் கண்டு
புடைகி டந்ததம் மண்டங்க டம்மொடு புகட்டி
யடைகி டந்தன சிறையகத் தடக்கியே யன்னம். 20

மாறில் பாளைகண் மலரிளங் கமுகினல் வாளை
யேறு பாய்தர வயலெலா முகுவன விளங்கா
யாறு பாய்வதென் றதிசய மெனக்கரும் பாலைச்
சாறு பாய்தர வளாவன கழனியிற் சாலி. 21

இன்ன லின்றியே யிணர்த்ததா ளிப்பனை யெவைவும்
பொன்னின் வீதியுட் பொலிநிலைத் தேர்க்குழாம் போலுங்
கன்னி மார்குழல் கூந்தலங் கமுகுகள் காட்ட
வன்ன பாளைக ளளிப்பன கமுகுக ளனந்தம். 22



கண்ணி லாவிய நறுந்தொடைக் காளையர் தங்கள்
வண்ண மாதர்கள் வதனமேற் புணர்கின்ற வைரம்
மண்ணி லாவிய வெண்ணிறக் கலைமதி யெழுச்சி
யுண்ணி லாவிய புனலிடைக் கண்டபி னொழிப்பார். 23

மஞ்சின் முத்தமு மரந்தையின் மரகத மணியும்
விஞ்சு செம்பொனும் வலவயிற் செம்மணி வேய்ந்தும்
மஞ்சொற் கம்பலை யாற்றினன் னீலமு மவிர்ந்தும்
பஞ்ச வன்னமே யிரவினும் பகலினும் பயிற்றும். 24"

ஈழத் தமிழர்கள் புராதன நாகரிகத்துக்கு சொந்தக் காரர்கள். ஈழதேசத்தின் கிழக்கின் தொல்லியல், களஞ்சியமாய் விளங்கும் கொட்டியாரம் நம் முன்னோர்கள் வழி வரலாற்றை பறைசாற்றும் பல ஆதி கால சான்றுகள் நிறைந்து காணப்படுகிறது. சேனையூர், கட்டைபறிச்சான், சம்பூர், பள்ளிக்குடியிருப்பு, நல்லூர், மல்லிகைத்தீவு, மூதூர், இலங்கைத்துறை, கிளிவெட்டி, ஈச்சலம்பற்று, மேங்காமம், கங்குவேலி, வெருகல் என விரிந் திருக்கும் கிராமங்கள் தோறும் வரலாற்றுத் தடங்கள் விரவிக் கிடக்கின்றன. சிந்து சமவெளி நாகரிகமாக மொகஞ்சதாரோ ஹரப்பா தமிழர் முது நாகரிகத்தை சொல்கிறது. தென்னக வைகைக் கரையில் நாம் சங்க இலக்கியத்தில் படித்த நாகரிகம் மிக்க தமிழர் வாழ்வை அண்மைக்கால கீழடி ஆய்வுகள் நிருபிக்கின்றன.

ஈழத் தமிழர் தொன்மை வாழ்வு மாவலி நதிக்கரையில் செழிப்போடு இருந்ததற்கான சான்றுகள் நமக்கு திருக்கரசை திருமங்கலாயில் ஆழப் புதைந்த பதிவுகள் கட்டிட இடிபாடுகளாய் நம் கண் முன் திருக்கரசை புராணம் இலக்கியமாய் ஈழத் தமிழர் தொன்மை நாகரிகத்தை எடுத்தியம்பும். இன்று கல்வெட்டுகளும் அடித்தள கட்டுமானங்களும் திருக்கரசையில் புதைந்து கிடக்கும் அந்த நாகரிகத்தை மீட்டெடுக்க வேண்டும்.

ஒரு பெரும் பழந்தமிழர் நகரமே இங்கு புதைந்து கிடக்கிறது.

இலங்கையில் பொலநறுவையும், அனுராதபுரமும் புராதன நகரங்களாக எந்த அளவுக்கு கொண்டாடப்படுகின்றனவோ அந்த அளவுக்கு திருக்கரசை நகரும் கொண்டாடப்பட வேண்டும். ஒரு செழிப்பு மிகு நாகரிகம் இங்கு இரண்டா யிரம் வருசங்களுக்கு முன்பிருந்தே தொடர்கிறது என்பதை ஆரம்ப ஆய்வுகள் நிருபிக்கின்றன. இன்னும் நாம் மேலும் மேலும் அகழ்வாய்வுகளை மேற்கொள்கிற போது நம் நாகரிகத்தின் பழமையயை ஆணித்தரமாக உறுதிப்படுத்த முடியும்.
உலக வரலாறு நதிக்கரைகளையும் ஆற்று படுக்கைகளையும் அண்டியே வளர்ந்திருக்கிறது. திருக்கரசை பெரும் கங்கை சமவெளியாய் நீண்டு கிடக்கிறது. மணல் படுக்கைகளாய் உறைந்து கிடக்கும் பெரு நகரம் ஒன்று மறைந்து கிடக்கும் திருக்கரசையின் பண்டைப் பண்பாட்டை நாம் மீட்டெடுக்க வேண்டும். கீழடி ஆய்வுகள் எப்படி இந்திய வரலாற்றின் பக்கங்களை திருப்பிப் போட்டிருக்கின்றனவோ, அதே போல திருக்கரசையிலும் அதனைச் சூழ உள்ள மகாவலி ஆற்றுப் படுக்கையிலும் அகழ்வாய்வு சரியான முறையில் மேற்கொள்ளப்படுகிற போது ஈழத் தமிழர் வரலாற்றின் புதிய அத்தியா யங்களை எழுத முடியும்.
நன்றி: அரங்கம் பத்திரிகை


Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளளோம்

NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf



www.Nandys.de
e.mail:info@nandys.de

# மணல் வீடு



**தனசேகர் பிரபாகரன்**

இரண்டாம் வேனிற்காலம் என்று வியக்கும் அளவிற்கு சுட்டெரிக்கத் தொடங்கி விட்டான் ஆதவன்..கர்கிடகம் என்றும் ராமாயண மாசமென்றும் புகழப்படும் ஆடியின் கடை ஞாயிற்றுக்கிழமை அது...இதே மாதத்தில் தான் வந்தியத்தேவன் வீரநாராயண ஏரியை பார்த்து வியந்து தனது பயணத்தை தொடங்குவதாக பொன்னியின் செல்வன் புதினம் உரைக்கிறது...பொன்னியின் செல்வனை படித்தவர் அனைவர்க்கும் இயல்பாய் வரும் பிரமை இது..எங்கும் கல்கியின் கற்பனையும் கதாநாயகன் என்றால் வந்தியதேவனுமே கண் முன் நிழலாடும்....

இப்படி பிரமையால் பீடிக்கப்பட்ட பல முகங்களுள் யானும் ஒருவன்..அன்று சிறிது காற்று வாங்க கடற்க்கரை பக்கம் செல்லலாம் என்று எண்ணம் மேலிட...நெய்தல் நிலம் நோக்கி சென்றோம்...சென்னையும் கடற்கரையும் பிரிக்கமுடியாத இரட்டைகள்...உலகிலேயே மிக நீளமான இரண்டரவது கடற்கரை என முகநூலிலும்...நுனிநாவிலும் பெருமை பேசுவோர் நாம்...

எல்லியாட்ஸ் கடற்க்கரை மணற்புரம்...கூட்டம் சற்று அதிகமே...ஜோசியம் பார்ப்பாரும்...துப்பாக்கி விளையாட்டும்...சுண்டலும் மீனும் கடற்க்கரை காட்சிகளில் நிறைந்திருந்தன...

கண்ணில் பட்டது ஒரு குடும்பம்..கணவன் மனைவி மற்றும் ஒரு குழந்தை...கணவனும் மனைவியும் அவரவர் கைபேசியில் ஏதோ சம்பாஷணையில்...குழந்தையோ மணலில் விளையாட புதுப்புது நவீன நெகிழி ( பிளாஸ்டிக்) பொருட்களுடன் சிறு வீடு கட்டிக் கொண்டிருந்தது... அருகிலும் சில குழந்தைகள் இருந்தாலும் ஏனோ இக்குழந்தை தனியாக விளையாடிக்கொண்டிருந்தது...தாய் தந்தையர் சிறுது நேரம் கழித்து தம் கைபேசி கொண்டு நிழற்படம் எடுக்க ஆரம்பித்தனர்..கடைசியாக ஒரு தற்படம்.ஃதாமி என்கிற செல்பியை எடுத்துக்கொண்டு...குழந்தையை தூக்கி நடைவண்டி இயந்தரத்தில் வைத்துக்கொண்டு தர தரவென இழுத்துக்கொண்டு செல்வதை காணமுடிந்தது...குழந்தை உதட்டை பிதுக்கி கண்கள் கலங்கி தான் கட்டிய மணற் வீட்டை பார்த்தவாறே அழுதுகொண்டு சென்றது....

நாம் பெரிய பெரிய விடயங்களைத் தேடி சென்று வாழ்கையின் சிறிய சிறிய இன்பங்களை தொலைத்து விட்டோமோ? அகம் புறம் என்று இருந்த தமிழர் வாழ்க்கை இன்று அக வாழ்க்கை ∴ முகநூல் வாழ்க்கை என மாறியதோ ?

இத்தலைமுறையில் அனேகமாக எல்லா குழந்தைகளின் இளமைப்பருவமும் தொழில்நுட்பக் கருவிகள் ஆட்சி செய்கின்றன..கதை கேட்டு வளர்ந்த காலம் மலையேறி போனது...கதை சொல்ல ஆளில்லை....கேட்டகவும் காதுகள் தயாராக இல்லை...

உதாரணம் இந்த மணல் வீடு...தமிழனுக்கும் மணல் வீட்டிற்க்கும் அப்படி ஒரு உறவு...2000 ஆண்டுகட்கு முன்பே வீதியில் எம் தமிழ் குருந்துகள் மணலில் வீடு கட்டி வியந்தனர் தனியாக அல்ல...ஊரிலிருக்கும் அனைத்து பிஞ்சுகளுடனும் சேர்ந்து...பெண் பிள்ளைகள் மணல் வீடு கட்ட ஆண் பிள்ளைகள் அதை இடித்தும் விளையாடுவர்..இன்று இதெல்லாம் ஒரு உளறலாக பார்க்கபடுகிறது...

ஏன் சற்று ஏற் 1200 ஆண்டுகட்கு முன் எம் ஸ்ரீவில்லிபுத்தூர் விஷ்ணுசிட்டன் சிறுமி ஆண்டாள்...குழந்தை தமிழில் இந்த மணல் வீட்டை பாடுகிறாள்....

வண்டல் நுண்மணல் தெள்ளி யாம் வளைக்
கைகளால் சிரமப்பட்டோம்
தெண் திரைக் கடல் பள்ளியாய்! எங்கள்
சிற்றில் வந்து சிதையேலே

உன்னை அடைவதற்காக மிகவும் கடுமையான விரதமிருக்கிறோம்.. அதனால் உடலில் சக்தியின்றி மெலிந்த கைகளால் வளையல்களின் எடையைக்கூட தாங்கும் திறனின்றி இருக்கிறோம்.

இத்தனை சிரமத்திலும் வண்டல் மணலைச் சலித்து. அதைக் கொண்டு மணல் வீடு கட்டி அழகு செய்கிறோம். கோலங்களும் இடுகிறோம்.

வெண்மையான அலைகள் வெகுண்டு வீசினால் கூட, அசையாமல், பள்ளி கொண்டுள்ள பரந்தாமா...! காற்றின் வீச்சிற்கே தாங்காத, எளிமையான எங்கள் மணல் வீடுகளைச் சிதைக்காதே..

இன்றும் சிலவிடங்களில் வீடுகள் கட்ட மணல் குவிக்கும் பொது சிறுவர் சிறுமியர் அதின் மீதேறியும் மணல் வீடு கட்டியும் விளையாடுவர்...விளையாட்டு என்பது கூடி விளையாடவேயன்றி...தனித்து கருவியுடன் விளையாட அன்று...

பண்டைக் கால விளையாட்டுகள் இன்று ஏற்ப்புடையவை அன்று என கருதுதல் நியாயமன்று...

மணலை கொள்ளையடித்து நதியை மலடாக்கும் காலத்தில் மணல் விளையாட்டு மூலம் நம் குழந்தைகட்கு மண்ணின் பெருமையை எடுத்துரைப்போம்..!

சென்னையாயிருந்தலும் குமரியாயிருந்தலும் நம் வீட்டு குழந்தைகளை சுற்றத்து குருந்துகளுடன் கூடிவிளையாட வைத்து அகமகிழ்வோம்...

கைபேசி , கணினியெல்லாம் சிறிது நேரம் புறத்திருத்தி...செல்வங்களோடு செல்வமாய் சிறிது நேரம் கழிப்போம்...!

தனிமை என்பது கொடுமை... ஒற்றுமையே உயர்வு...!

வாட்சப்பும் , முகநூலும் எந்நேரமும் இனிமை தாரா...

குழந்தைகளின் பெற்றோருக்கு எம் பாட்டன் மயிலாப்பூர் காரன் சொல்லி வாய்த்த இந்த ஒரு குறள் போதுமே...

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்



25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்



# அன்பு நிறைய உள்ளவர்கள் மேலோர் !!!

சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்த மதி கல்வி அன்பு
நிறைய உள்ளவர்கள் மேலோர்.

என்றான் பாரதி

**"ஜாதி மனிதனை சாக்கடையாக்கும்".** என்றார் பெரியார்.
ஆனாலும் இன்றும் ஜாதியை மட்டுமே பார்த்துப் பழகும் மக்கள் வாழ்ந்துகொண்டேதான் உள்ளார்கள்.

இவ்விடயத்தைப் பற்றி வெளிப்படையாக உரையாடமாட்டார்கள். ஜாதி என்றாலே மூடி மறைத்துவிடுவார்கள். மனம் திறந்து உரையாட முடியாத நிலை. தமிழர்கள் நாங்கள் இதைப் பற்றி பேசுவதற்கு வெட்கப் படுகிறோம். பிழை, தவறு என்பதனால் தானே! இந்த வெட்கம் கௌவிக்கொள்கிறது.
சரியான, நன்மையான விடயம் என்றால் வெளிப்படையாகப் பேசிக் கொள்ளலாம்.
மனிதனை மனிதனாக மதிக்காமல் கேவலமாகப் பார்க்கும் அனைவரும், ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்! நீங்கள் நடந்து கொள்வது சரியா? ஏன் இப்படியான பாதையில் செல்கிறீர்கள்? எதற்காக ஒவ்வொருவரின் மனதை ஈட்டியால் குத்துவது போல் துன்புறுத்துகிறீர்கள்?

வெளிநாட்டவர்கள் தமிழர்களுடன் சரியான முறையில் உரையாடவோ அல்லது பழகவில்லை என்றால் சினம் கொள்கிறீர்கள். அவர்களை விட நிறம் குறைவாக இருப்பதனால் எங்களுடன் நன்றாகப் பழகுறார்கள் இல்லை என்பீர்கள். நீங்கள் மட்டும் எங்கள் தமிழர்களுடன் வேற்றுமை காட்டலாமா? ஒரே மொழி, ஒரே இனம், ஆனால் வேற்றுமை?!
மனிதன் உருவாக்கிய உயர்ந்த ஜாதியில் பிறக்காது, கீழ் ஜாதியில் பிறந்தது அவர்களின் தவறா?
ஆதிகாலத்தில் வேலை அடிப்படையில் ஜாதிகளாகப் பிரித்து வந்தார்கள். தற்பொழுது எல்லோரும் அந்த வேலைகளைச் செய்வதில்லை. ஆனால் தாய்நாட்டில் இந்நிலமை தொடர்ந்தும் இருந்து வருகின்றது.

உலகம் பல வளர்ச்சிகளைக் கண்ட பின்னும் ஜாதி என்ற ஒரு விடயத்தைத் தலைக்கு மேல் தூக்கி வைப்பது சரியா? நீங்கள் ஒவ்வொருவரும் உங்களைப் பார்த்துக் கேட்கவேண்டிய கேள்விகள்!
வெளிநாட்டுக்கு வந்து உங்களின் பழக்கவழக்கங்களை மாற்றிக் கொண்ட நீங்கள், ஏன் ஜாதிக் கொடுமையை மாற்றிக் கொள்கிறீர்களில்லை?

எங்களின் பெற்றோர்கள் ஜாதியினைப் பார்ப்பது ஓரளவுக்கு விளங்கிக் கொள்ளமுடிகின்றது. ஆனால் வெளிநாட்டில் பிறந்து வளர்ந்து வருகின்றவர்கள் ஜாதியினால் பிரிவினைக்க காட்டுவது மனதுக்குத் துன்பத்தைத் தருகின்றது. இப் பிரச்சினையை அழிப்பதற்கு முன் வரவேண்டாமா?
தாயகத்தில் இருக்கும் ஒருவரை மணம் செய்து கொள்ள வினாவினால், கூறுவார்கள் நாங்கள் வெளிநாட்டவர் எங்களுக்கும் அவர்களுக்கும் ஒத்துப்போகாது என்று! ஆனால் ஜாதி எண்ணம் மட்டும் அவர்களின் மனதிலும் இருந்துகொண்டே இருக்கும்.
சிலர் நன்றாகக் கதைப்பார்கள். நாங்கள் ஜாதியை வெறுக்கிறோம் என்பர். ஆனால் அடுத்த கணமே ஜாதியைப் போற்றியும் பேசுவர்.



றஜினா தருமராஜா

தனக்குள் தானே முரண்படும் கருத்துகளைக் கூறுவார்கள்.
அந்நேரங்களில் சிரிப்பதல்லாது என்ன செய்ய முடியும்.
சிலர் ஒரு படி மேல் சென்று, கீழ் ஜாதியைச் சேர்ந்தவர்களின் வீடுகளுக்குக் கூட செல்ல மாட்டார்கள். அவர்களின் தங்கப் பாதங்கள் அழுக்காகி விடுமோ? அவர்களின் வீட்டுக்குள்ளே வர விடமாட்டார்கள். தவறுதலாக வந்தாலும், அவர்கள் சென்ற பின் வீட்டினை கழுவித் துடைப்பார்களாம். என்ன கொடுமை.
ஆனால் வெளிநாட்டவர்களை வீட்டுக்குள் அழைத்துச் செல்வார்கள். அவர்கள் என்ன ஜாதியோ? நகைப்புக்குரியது!

வெளிநாட்டவர்களிடமும் வேலையும் செய்வார்கள். அவ்வேளைகளில் ஜாதி எண்ணம் காற்றில் பறந்து போய்விடுமா அல்லது வீட்டில் பூட்டி வைத்து விடுவார்களோ?! கீழ் ஜாதி மக்களை ஒதுக்கி வைத்தபின் ஆலயங்களுக்குச் சென்று கடவுளை வணங்கி என்ன பயன். கடவுளுக்கு முன்னால் நின்று கூட உரையாடுகிறீர்கள்.

சிறுமி ஒருவர் தனது நண்பிக்குக் கூறுகிறாராம், என் அம்மா கீழ் ஜாதிப் பிள்ளையுடன் உரையாடாதே என்று கூறினார். சிறியவர்களின் மனதிலும் நஞ்சை விதைக்கின்றீர்கள்.
குழந்தைகளின் மனம் தீய எண்ணங்கள் இல்லாது இருக்கும். அழகானது! பெரியவர்கள் ஆகிய நீங்கள் நல்லதைச் சொல்லிக் கொடுக்கவேண்டும். தீய செயல்களின் விளைவுகளையும் எடுத்துக் கூறவேண்டும். வரும் காலங்களில் இப்பிரச்சினை வரக்கூடாது என்று நினைக்கிறேன்.

ஆனால் சில நேரங்களில் சில சம்பவங்களைக் கேள்விப்படும் பொழுது, இப்பிரச்சினை அழியாது என்றே சிந்திக்கத் தோன்றும்.
ஒன்று மட்டும் புரியவில்லை. நாங்கள் அனைவரும் தமிழர்கள் அல்லவா! அனைவரின் உடலில் ஓடுவது ஒரே இரத்தம் அல்லவா!

முக்கியமாகத் திருமணங்களில் ஜாதிப் பிரச்சினை வந்துவிடும். சிலர் கோபம் கொண்டு தேவையற்ற விடயங்களைப் பேசுவார்கள். திருமணத்தினூடாக ஒன்று சேர்வது இரு மனங்களா அல்லது இவர்களின் ஜாதியா???

தொடர்ச்சி 30 ம் பக்கம்.








# இருமல்

Dr IN
டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

"ஓடினாள் ஓடினாள் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்.."

பராசக்தியில் சிவாஜி பேசியது. ஆனால் தொடர்வது வேறு கதை. "இருமினாள் இருமினாள். விழி பிதுங்கி மூச்சடைக்கும்வரை இருமியவள்.." கதை இது.

"என்னாலை ஒன்றுமே செய்ய முடியவில்லை.." அனுங்கிக் கொண்டே வந்த அந்தப் பெண்ணின் முகத்தில் சோர்வும், சோகமும் ஒட்டியிருந்தன. களைப் போடு வந்தவள் உட்கார்ந்து தன்னைச் சுதாகரித்துக் கொள்ள சில நிமிடங்களாயிற்று.
வயதானதால் ஏற்பட்ட களைப்பு அல்ல. இளம் பெண் 20-22 வயது மட்டுமே இருக்கும். சோர்ந்த கண்களைச் சுற்றி மடல்கள் சற்று வீங்கியிருந்தது. கண்களும் சற்றுச் சிவந்திருந்தது.
இரண்டு வாரங்களாக இருமலாம். மிகக் கடுமையான இருமல். இருமி இருமி முடியாமல் சத்தியிலும் முடிவதுண்டாம்.
இதனால் சாப்பிடுவதும் குறைவு. சற்று மெலிந்தும் விட்டாளாம்.

மருந்தெடுத்தும் குறையவில்லை இரண்டு வாரங்களுக்கிடையில் மூன்று வைத்தியர்களைக் கண்டும் குறையவில்லை.
சிறிய கட்டாக பரிசோதனை ரிப்போட்டுகளை என் முன் வைத்தாள்.
சரியாகத்தான் அவர்கள் ஆராய்ந்திருந்தார்கள். இரத்தம், சிறுநீர், சீனி, சளி, எக்ஸ்ரே என எதையும் விட்டு வைக்கவில்லை.
நிதானமாக அவற்றை ஆராய்ந்து பார்த்தபோது எந்த பிழைகளும் தெரியவில்லை. நியூமோனியா. சயரோகம், கட்டி, புற்றுநோய் எதற்கான அடையாளங்களும் கிடையாது.
மிகக் கடுமையான அன்ரிபயரிக்மருந்துகள், ஆஸ்த்மாவிற்கான மருந்துகள், ஸ்டீரொயிட் என்று சொல்லப்படும் மருந்துகள், பல வகை இருமல் சிறப் மருந்துகள் கொடுக்கப்பட்டிருப்பதை அவதானித்தேன்.

தொண்டை, சுவாசப்பை, மூக்கு, காது என முக்கிய உறுப்புகளைப் பரிசோதித்துப் பார்த்தபோது அவை யாவும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருப்பதை அறிய முடிந்தது.
"எவ்வளவு மருந்துகள் சாப்பிட்டு விட்டேன். ஒண்டும் பிரயோசனமில்லை. வயிறு ஊதி, வாய் கசந்து, சாப்பிட முடியாது போனதுதான் மிச்சம். வயிற்றையும் பிரட்டுகிறது. கொஞ்சமும் சுகமில்லை" என்றாள்.

உண்மைதான் மாறி மாறி மூன்று வகை அன்ரிபயோடிக் மருந்துகளையும் பிரட்னிசலோன் போன்றவற்றையும் உட்கொண்டால் வயிற்றில் குழப்பம் ஏற்படுவதை தடுக்க முடியாதுதான்.

மருந்துகளுக்கு மேலாக ஆஸ்த்மாவுக்கான இன்ஹேலரும் கொடுக்கப் பட்டிருந்தது. அதுவும் வேலை செய்யவில்லை.
ஆஸ்த்மா இருந்தால்தானே அது வேலை செய்யும்.

"இது என்ன வருத்தம்" அவள் கேள்வி எழுப்பினாள். வீங்கிய மடல்களும், கண்ணின் வெண் பகுதியில் இரத்தம் கசிந்திருந்ததும்,இருமல் வாந்தியில் முடிவதும், அது என்ன நோய் என்பதை எனக்கு ஓரளவு புலப்படுத்திவிட்டன. ஆயினும் நிச்சயப்படுத்தாது சொல்ல முடியாது.
நிச்சயப்படுத்துவதாயின் அவளது இருமல் எப்படியானது என்பதை அறியவேண்டும்.
"எப்படியானது உங்கள் இருமல்? தொடர்ந்து வருமா, திடீரென வருமா, வந்தால்" பீறிட்டு வந்தது இருமல். எனது கேள்வி முடிவதற்கிடையில் இருமினாள், இருமினாள், இருமிக் கொண்டேயிருந்தாள். விழி பிதுங்கி மூச்சடைக்கும்வரை இருமினாள். தொடர்ந்து இருமினாள்.

முகம் சிவந்துவிட்டது. கண்கள் பீறிட்டுப் பிதுங்கி வெளியே பாய்ந்து விடுமோ எனப் பயமுறுத்தியது. திடீரென ஒரு கேவல் சத்தம். உயிர் பிரியுமாற் போன்ற அவல ஒலி. நெஞ்சின் அடி ஆழத்திலிருந்து. பயப்படாதீர்கள்! எதிர்பார்த்ததுதான்.
இவ்வளவு நேரமும் சுவாசத்தை உள்ளெடுக்க முடியாது, இருமி இருமி வெளியே விட்ட காற்றைத் திடீரென ஒரே மூச்சில் உள்ளெடுத்ததால் பீறிட்டு எழுந்த சத்தம். Whoop அதுதான் அந்தச் சத்தம். அந்தச் சத்தத்தை வைத்துத்தான் அந்த நோயின் பெயரே வந்திருக்கிறது. அதை கொண்டே நோயை நிச்சயப்படுத்தவேண்டும். இருமல் எப்படியானது என்ற கேள்விக்கு விடை சொற்களாக அன்றி செயற்பாடாகவே வந்துவிட்டது.
எனது வேலை சுருங்கியது. நோய் தெளிவானது. Operation success. Patient dead என்பது போல். வூப்பிங் கொவ் (Whooping Cough) என ஆங்கிலத்தில் சொல்வது, மருத்துவத்தில் Pertussis ஆகும். தமிழில் குக்கல் என்போம். இப்பொழுது பெருமளவு காணப்படுவதில்லை. காரணம் சிறுவயதில் போடப்படும் முக்கூட்டு ஊசிதான். இந்நோய் குணமடை நீண்டகாலம் எடுக்கும். சுமார் 6 வாரங்கள் முதல் 2 மாதங்கள் எடுக்கும்.

ஆரம்பகட்டத்தில் மட்டுமே அன்ரிபயோரிக் மருந்துகள் உதவும். அதுவும் ஒரு குறிப்பிட்ட வகை அன்ரிபயோடிக் மட்டுமே. இவள் சாப்பிட்டதில் அது ,இல்லை. வீணாக ஏனையற்றை உண்டதுதான் மிச்சம். நீண்ட நாள் தொடரும் இந்நோயைப் பற்றி விளக்கி, அன்ரிபயோரிக் மருந்துகள் நிறுத்தி, இருமலைத் தணிக்கும் சாதாரண மருந்துகளை கொடுத்தேன்.
தேவையற்ற மருந்துகள் நீக்கப்பட்ட சந்தோசத்திலேயே அவளது வருத்தம் அரைவாசியாகக் குறைந்து விட்டது.
நன்றி: தமிழர் தகவல்

CENTURY Travels GmbH

Rheinische Strasse 29
44137 Dortmund

Steeler Strasse 150
45139 Essen

Emirates

Colombo
ab 699 €-799 €

Sommer Special JULI/ AUGUST


Fon: 0231 557 4319 / 0231 5896 557
Mob: 017621682149 Nishanthan

Emirates

Unsere Services
Mietwagen/ Versicherung/Pauschalreisen/Hotels/ Visum Service/Flughafen Abholung

Email: info@centurytravels.de

# குழந்தைகளையும் குறிவைக்கும் ஆப்ஸ் !



வெற்றிமைந்தன்



நம்முடைய குழந்தைகளை நாம் கவனிக்காவிட்டால் அவர்களை வேறு யாரோ கவனிப்பார்கள். குழந்தைகளை நாம் வனையாவிட்டால் அவர்களை வேறு யாரோ வனைந்து முடிப்பார்கள். அது அவர்களுடைய வாழ்க்கைக்கு மிகப்பெரிய பாதிப்பாகவும், அச்சுறுத்தலாகவும் மாறிவிடும்.

பிளே கிரவுண்ட் தெரியாது ! ஆனால் பிளே ஸ்டோர் தெரியும் !! இது தான் இன்றைய குழந்தைகளின் நிலை. இப்படி டிஜிடல் விளையாட்டுகளில் சிக்கிக் கிடக்கும் குழந்தைகளைக் குறிவைத்து தகவல் திருட்டுகள் நடக்கின்றன என்பது தான் இப்போதைய அதிர்ச்சித் தகவல். கூகிள் பிளேஸ்டோரில் உள்ள ஆயிரக்கணக்கான ஆப்-கள் அமெரிக்காவின் குழந்தைகள் தகவல் பாதுகாப்பு சட்டமான கோப்பா வை US Children's Online Privacy Protection Act (Coppa) மீறுகின்றன எனும் கண்டுபிடிப்பு மிகப்பெரிய சர்ச்சையாக உருமாறியிருக்கிறது. இந்தகண்டுபிடிப்பை நிகழ்த்தியிருப்பவர்கள் அமெரிக்காவின் கலிபோர்னியாவிலுள்ள இண்டர்நேஷனல் கம்ப்யூட்டர் சயின்ஸ் இன்ஸ்டிடியூர் ஆய்வாளர்கள்.

இன்றைய தொழில்நுட்ப உலகில் ஸ்மார்ட்போன் செலுத்தும் ஆதிக்கத்தைப் போல வேறெதுவும் செலுத்தவில்லை என்பது தான் உண்மை. பெரும்பாலான மக்களின் பொழுதுகள் குட்டிக் குட்டி வெளிச்சத் திரைகளில் அடங்கி விடுகின்றன.

எட்டு வயதுக்கும், பதிமூன்று வயதுக்கும் உட்பட்ட ஆறாயிரம் குழந்தைகளை வைத்து ஒரு ஆய்வு சமீபத்தில் நடத்தப்பட்டது. அதில் 54 சதவீதம் குழந்தைகள், தங்கள் பெற்றோர் தங்களைக் கவனிப்பதை விட அதிக நேரம் செல்போனே கதியென கிடப்பதாய் கவலை தெரிவித்திருந்தனர்.

"எங்கள் குழந்தைகளுக்கு நல்ல முன்னுதாரணமாய் தாங்கள் வாழவில்லை" என குற்ற உணர்வோடு இருக்கும் பெற்றோர் எண்பத்து இரண்டு சதவீதம் பேர் ! அதில் ஐம்பத்து இரண்டு சதவீதம் பேர், எத்தனை முயன்றாலும் இந்த ஸ்மார்ட்போன் அடிமைத்தனத்தை விட்டு வெளியே வரமுடியவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.

இருபத்து ஐந்து சதவீதம் பெற்றோர் தங்கள் குழந்தைகள் ஸ்மார்ட்போனுக்கு அடிமையாய் இருப்பதாகவும், எப்படியாவது அவர்களை வெளியே கொண்டு வரவேண்டும் எனவும் விரும்புகின்றனர். ஆனால் அவர்களால் முடியவில்லை.

எல்லாவற்றையும் விட கவலைக்குரிய விஷயம் இது தான். "ஸ்மார்ட் போனைத் தான் எங்கள் பெற்றோர் எங்களை விட அதிகம் நேசிக்கிறார்கள்" என முப்பத்து இரண்டு சதவீதம் குழந்தைகள் கவலையுடன் தெரிவித்திருக்கின்றனர். உண்மையிலேயே நமது உறவுகளின் நெருக்கத்தை உடைக்கும் அளவுக்கு டிஜிடல் வலிமை பெற்று விட்டதா ? குடும்பத்தை விட அதிகமாய் சமூக வலைத்தளங்கள் நம்மை ஆதிக்கம் செலுத்துகின்றனவா ?

அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று, "பத்து வயது குழந்தைக்கு சாதாரணமாக ஒரு ஸ்மார்ட் போன் சொந்தமாகிவிடுகிறது"

எனும் கண்டுபிடிப்பை வெளியிட்டது. இந்தியாவில் அந்த அளவுக்கு இல்லையெனினும், பெற்றோரின் ஸ்மார்ட்போன்களை சகட்டு மேனிக்கு பயன்படுத்தும் குழந்தைகளின் எண்ணிக்கை மிக அதிகம் ! ஒன்பது வயதுக்குட்பட்ட குழந்தைகள் சராசரியாக தினமும் சுமார் இரண்டரை மணி நேரம் போனில் விளையாடுகின்றன என்கிறது ஒரு புள்ளி விவரம்.

இந்த சூழலில் தான் கூகிள் பிளே ஸ்டோரின் பாதுகாப்பு விதி மீறல் அச்ச உணர்வை அதிகரித்திருக்கிறது. கூகிள் ஆப் Apps ஸ்டோரில் உள்ள குழந்தைகளுக்கான ஆப்ளிகேஷன்களை ஆய்வு செய்ததில் 57 சதவீதம் ஆப்கள் பாதுகாப்பு விதிகளை மீறியிருக்கின்றன. இவை குழந்தைகள் ஆன்லைனில் என்ன செய்கிறார்கள் என்பதைக் கவனிக்கின்றன. இது சட்ட விதிகளுக்கு எதிரானது.

சில ஆப்ளிகேஷன்கள் குழந்தைகளின் இருப்பிடத்தையும், தொடர்பு தகவல்களையும் திருடி அனுப்புகின்றன. சில ஆப்ஸ் தனிநபர் தகவல்களை திருடி வேறு இடங்களுக்கு அனுப்புகின்றன. சில ஆப்கள் விளம்பரங்களுக்காக தகவல்களை அனுப்புகின்றன. என நீள்கிறது இந்தப் பட்டியல். பிரபலமான, சுமார் ஏழரை இலட்சம் தடவைகளுக்கு மேல் தரவிறக்கம் செய்யப்பட்ட ஆப்கள் மட்டுமே இதில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டன என்பது குறிப்பிடத் தக்கது.


தொடர்ச்சி 23ம் பக்கம்








25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்




# சுண்ணாம்பு பூச்சுக்குள் மறைந்திருந்த உலகில் மிகப் பெரிய தங்கப் புத்தர்

சுவர்ண பூமி இது நாம் இறங்கிய விமான நிலையத்தின் பெயர். இது என்ன நம்ம ஊர் விமான நிலையமா! சுவர்ண பூமி என்றால் அது சொர்க்க பூமி என்பது பொருள். ஏதோ தமிழ் பெயர் போல் இருந்தாலும் அது ஒரு சமஸ்கிருதச் சொல். தமிழ் மொழி இன்று பல மொழிகளை உள்வாங்கியும் தன் தனித்தன்மை அழியாது இருக்கும் ஒரு மொழி.

விமான நிலையத்தில் இருந்து விடுதி செல்லும் போதே வாகனச் சாரதி இங்கு என்ன என்ன பாரர்க்கலாம் என்று ஒரு பெரும் லிஸ்டையே ஒப்படைத்தான்.
தங்கப் புத்தரை இன்றே பாருங்கள் நாளை மழை என்று வேறு குடைபிடித்தான் சாரதி. சரி hotel சற்று ஓய்வு எடுத்துவிட்டு புறப்பட்டோம். புத்தரை நோக்கி.
Golden buddha தங்கப் புத்தர். தாய்லந்தின் தலைநகரான பாக்ங்கொக்கில் அமர்ந்திருக்கிறார். உலகில் மிகப்பெரிய தங்கப்புத்தராக இருக்கிறார் இவர்.
இந்த ஆலயம் சைனாரவுணில் இருந்து மிக அண்மித்து உள்ளது. தங்கம் என்றால் தங்கம் சுத்தத்தங்கம்.83 வீதம் சுத்தத்தங்கத்தினால் ஆனது. அதாவது 18 கரட். இச்சிற்பம் 13ம் நூற்றர்டைச் சேர்ந்தது. 3 மீற்றர் உயரமான இச் சிற்பம் 5.5 தொன் எடையுடையது. இதன் இன்றைய மதிப்பு 28.05.மில்லியன் பவுண்ஸ்
இன்று இருக்கும் ஆலயம் 1955 ஆண்டே அமைக்கப்பட்டது. முன்பு வேறு நகரத்தில் இருந்தது. அங்கிருந்து இன்று இருக்கும் இடத்திற்கு சுண்ணாம்பு சீமெந்து கலவையால் ஆன புத்தர் சிலையை எடுத்துவரப்படும் பொழுது, அந்த புத்தர் சிலையில் வெடிப்புக்கள் தோன்ற அதனுள்ளே இடையே தங்கம் ஜொலித்தது. அதனைக்கண்டு மக்கள் அதிசயித்தனர். மீதிப்பகுதி சீமெந்து பூச்சை உடைத்து தங்கச் சிலையை வெளியில் எடுத்தார்கள். 700 வருடங்கள் பழமைவாய்ந்த இந்த தங்கச்சிலை இன்று எல்லோர் மனதிலும் ஒளிபரப்புகிறது.

**தகதக என தங்கம் ஒளிவீசியது.**

இப்படி சிமெந்தினால் மேற்புறம் பூசிமெழுக காரணம் அன்று தாய்லந்தில் நடந்த யுத்தமாகும். அந்நேரம் திருடகளிடம் இருந்து பாதுகாக்கவும் வேற்று நாட்டவர் கண்ணில் படாமல் இருக்கவும் இவ்வாறு மேற்பரப்பு சிமெந்தால் மறைக்கப்படது.





ஆலயம் அழகுற அமைந்திருந்தாலும் அதன் சூழல் அதாவது ஆலயத்தின் பின்புலம் புதிய பழைய கட்டிடங்கள் நிரம்பி ஆலயத்தின் அழகை கெடுக்கிறது. திரைப்படம் எடுப்பவர்கள் தமக்குத் தேவையான பகுதிகளை மட்டும் போக்கஸ் பண்ணி எடுத்துவிடுவார்கள். ஆனால் எமது விழிகள் அப்படி ஒரு பகுதியை மட்டும் எடுத்துவிடாதே. எமது கண்களும் கமராக்காண்கள் போல் அழகை மட்டும் இரசித்தால் ஆலயம் அற்புதமானதே! இந்த ஆலயத்தை பார்ப்பதற்கான நுழைவுக்கட்டணம் 100 Baht பாங்கொக் காசு.

**வீதியோரக்கடைகளை வாழவைக்கும் ஆலய ஆடை விதிமுறைகள்**

தினமும் ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர்கள் வந்து செல்கிறார்கள். அவர்கள் அரை குறை ஆடையுடன் வந்தாலும் வந்தார்கள் தெருவோரக் கடைகளுக்கு விற்பனையோ விற்பனை! என்னவென்று கேட்கின்றீர்களா.
மேலும் கீழும் ஆடைகள் மறைக்க, மறந்ததை மறைக்க, ஆடைகளை தெருவோரக்கடைகளில் விற்கிறார்கள். உடலை மறைக்காமல் ஆலயத்தினுள் செல்லமுடியாது. இது அங்கு எல்லா ஆலயங்களிலும் உள்ள பொதுவான விதிமுறை. இந்த விதிமுறை வீதியோரக்கடைகளை வாழவைக்கிறது.

**மாதவி**

ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் திருக்கோவில் - ஹம்
ஆலய தரிசன நேரம்:
காலை 9.00 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை 17.00 முதல் 20.00 வரை
பூஜை நேரம்: தினமும்:
காலை 10.00 மணி மாலை 18.00 மணி
Tel:02381 42 66 420
+49(09176 80 56 96 09
Sri Venkateswara perumal Temple.e.V
Nassauerstraße 20
59065 Hamm-Mitte/Germany
அடியவர் குறைதீர்க்கும் வெங்கடேஸ்வரப் பெருமானை வணங்கி உங்கள் குறைதீருங்கள்




# சுவிற்லாந்து செங்காளன் கதிர் வேலாயுதசுவாமி தேர்த்திருவிழா







செங்காலன் கதிர்வேலர் மகோற்சவம் சிறப்புடன் நிறைவு ஐரோப்பாவில் வெள்ளை மயிலை தன்னகத்தே கொண்டு பிரசித்தி பெற்ற சுவிற்லாந்து செங்காளன் சென்.மோர்க்கிறத்தன் கதிர் வேலாயுதசுவாமி ஆலயத்தின் வருடாந்த மரகோற்சவத்தில் தேர் உற்சவம் கடந்த சனிக்கிழமை (02-6-2018) பக்திபூர்வமோக நடைபெற்றது. சுவிஸ் நாட்டில் சகல மாநிலங்களில் இருந்தும் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் தேர் உற்சவத்தில் கலந்து கொண்டனர். நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பால் காவடி எடுத்தும் பிரதிட்டை செய்தும் கற்பூரச்சட்டி ஏந்தியும் அடி அழித்தும் தமது நேர்த்திகளை பூர்த்தி செய்தனர். தெய்வீகக்காட்சிகள் சில.

Temple Address/Adresse :
Arulmigu Kathirvelayutha suvami Ahlayam
Industrie Str.27 , 9430 St-Margretten/SG, Switzerland



# ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் அணுகுவதும், இணைவதும் முறையா!

கௌசி





ஒரு திருமண பந்தத்தின் சிறப்பு ஒரு உயிரை உலகத்திற்கு உருவாக்குதல். ஆணும் பெண்ணும் சேர்ந்து அற்புதமாக ஒரு குழந்தையை உலகத்திற்குக் கொண்டுவருகின்றார்கள். இது இயற்கையும் கூட. இந்த இயற்கையின் மூலமே இனவிருத்தி நடைபெற வேண்டும் என்பது நியதி. ஆனால், தற்காலத்தில் பரவலாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் விடயமாகக் கருதப்படுவது ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் சேருகின்ற ஓரினச் சேர்க்கை.

உலகத்தில் 20 வீதமானவர்கள் ஆணுக்கு பெண் தன்மையும் பெண்ணுக்கு ஆண் தன்மையும் உள்ள மாறுபட்ட குணமுள்ளவர் களாகத்தான் பிறக்கின்றார்கள். இவ்வாறு பிறப்பது இயற்கைக்கு மாறுபட்ட தாக இருந்தாலும். இது இயற்கைதான் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.


ஒரு தாயின் வயிற்றிலிருந்து ஒரு உருவம் பிறக்கின்றது. அது மனிதன் பிறப்பில் ஆணாகப் பெண்ணாகப் பெயர் பெறுகின்றது, ஆனால், இது ஆண் என்றும் பெண் என்றும் அடையாளம் கொடுத்தது மனிதனே என்பதும் உண்மை. வளர்ப்பில் வேறுபட்ட குணாதிசயங்களை ஊட்டி வளர்த்த போது அது பெண்ணென்றும் ஆணென்றும் தன்னை அடையாளப்படுத்துகின்றது.

ஒவ்வொரு ஆணுக்கும் சில பெண் தன்மைகள் இருப்பது இயற்கை அதுபோல், ஒவ்வொரு பெண்ணுக்கும் ஆண் தன்மை இருப்பதும் இயற்கை. வேலைத்தளத்திலே பொறுப்பான பதவியில் இருக்கும் ஒரு பெண் தன்னை ஒரு ஆண்போல் நடையுடை பாவனையில் காட்டிக் கொள்ளுவாள். சில ஆண்கள் வெட்கப்படுவதிலும் சில நடவடிக்கையிலும் பெண்போல் நடந்து கொள்வான். இது எப்படி ஏற்படுகின்றது என்றால், இயற்கையில் தாய் தந்தையிடம் இருந்து 23 குரோமோசோம் சோடி சேர்கின்ற போது ஒரு குழந்தை உருவாகின்றது. தாயின் XX என்னும் குரோமோசோம் தந்தையின் XY என்னும் குரொமோசோம் இணைந்து பிள்ளை வயிற்றில் உருவாகின்றது. இப்போது தாயிடமிருந்து X மட்டுமே வரும். தந்தையிடமிருந்து X அல்லது Y வரும். எனவே முதலில் அம்மாவிடம் இருந்து வரும் குரோமோசோம் வேலை செய்ய ஆரம்பிக்கின்றது. எனவே 42 நாட்கள் பெண்ணுக்குரிய உறுப்புகள் தோன்றுகின்றன. சூலகங்கள் கூடத் தோன்றி பின் வேறாகின்றது. பின்னரே ஆணாயின் ஆண்களின் உடல் உறுப்புக்களாக மாறுகின்றன. எனவே ஆரம்பத்தில் எல்லோரும் பெண்களாகவே உருவெடுக்கின்றார்கள் என்பது விஞ்ஞான ரீதியில் அறியப்பட்ட உண்மையாகும்.

இவ்வாறு இயல்பாகவே பெண் தன்மையைப் பெற்ற ஒரு ஆண் தன் நிலைமையை வெளியில் சொல்ல முடியாது வேதனையை அனுபவிக்கும் நிலமையும் முடியாத பட்சத்தில் தற்கொலை செய்து கொள்ளுகின்ற நிலைமையும் பண்பாட்டுப் போர்வைக்குள் கிடக்கும் மனிதர்களுக்கு பெரும் சவாலாக அமைகின்றன. இயற்கையை மீற முடியாது என்று சொல்லும் எம்மவர்கள் இவ்வாறான மனிதர்களை கண்டிப்பதும் அவர்களின் மனவேதனையை மேலும் தூண்டும் விதமாக வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதும் தவிர்க்கப்பட வேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு மனிதர்களும் தமக்கு இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் அல்லது தமது பிள்ளைகள் இவ்வாறான ஹோமோன்களின் மாற்றத்திற்கு ஆளாக் கப்பட்டிருந்தால் எப்படி இருக்கும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மகாபாரத யுத்த காலத்தில் யுத்தத்தில் பங்கெடுப்பதற்காக இலங்கை யிலிருந்து சென்ற மகாவீரன் அறவான் என்பவன் தன் வில்வித்தைச் சிறப்பை கிருஸ்ணரிடம் காட்டியபோது அவனது திறமையை உணர்ந்த கிருஸ்ணர் தனது சூழ்ச்சியைப் பயன்படுத்தி அறவானிடம் ஒரு கோரிக்கை வைக்கின்றார்.

தொடர்ச்சி 15 ம் பக்கம்




25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

Frankfurt நகரில்....

## புதுப்பொலிவுடன் மீண்டும் உங்கள் அபிமான ஸ்தாபனம்




# Jaffna Bazar

உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப்பொருட்களும் பசுமையான மரக்கறி
மற்றும் கடல் உணவு வகைகளும்
நம்மிடம் கிடைக்கும்

வாருங்கள் தாயகத்தில் நிற்கும் உணர்வை
நீங்கள் பெறுவீர்கள்




Kaiser Str.49 69329 Frankfurt Main



0049 69 25626353
0049 179 4792961

## யேர்மனியில் யூச்சன் ஸ்ரீ நவசக்தி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழாவில் முத்தேர் பவனி!




யேர்மனியில் யூச்சன் நகரில் இருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ நவசக்தி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழாவில் (03.06.2018 ஞாயிற்றுக்கிழமை) ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்துகொண்டனர். யேர்மனியில் இன்று தேர்த்திருவிழாவென்றால் அங்கு யேர்மனிர்களும் கலந்து கொள்ளும் ஒரு திருவிழாவாகிவிட்டது. இது அவர்கள் மதம் மாறுகிறார்கள் என்று பொருள் அல்ல, பிறமதங்களையும் நேசிப்பவர்கள் என்றே பொருள் கொள்ளவேண்டும். ஒரு சிலர் இந்து சமயத் தத்துவங்களால் ஈர்க்கப்பட்டு ஈசனடி பணிந்து வணங்குவொரும் உண்டு. இன்று தேர்த்திருவிழாக்களில் அந்த ஆலயம் அமைந்துள்ள நகரத்து நகரபிதா கலந்து சிறப்பிப்பது ஒரு மரபாகவே மாறிவிட்டது. அதில் மேலும் சிறப்பு என்னவென்றால், வெறும் ஒப்புக்காக அன்றி உளமார அவர்கள் ஆண்கள் வேட்டி கட்டியும், பெண்கள் சேலை உடுத்தியும் வெறுங்காலுடன் பல மையில் தூரம் தேரோடு வலம் வரும் காட்சி நாம் கற்கவேண்டிய பல செய்திகளைச் சொல்கின்றது. குறிப்பாக இன்று தேர் இழுப்பதில் முன்னுக்கு நிற்பவர்கள் பெண்கள் என்றே கூறவேண்டும். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் கனவு புலம்பெயர்தேசத்திலும் நனவாகியுள்ளது. படங்கள்: வெற்றிமணி-யேர்மனி


## எழுத்தாளர் கீதா பரமானந்தனின் சுவடுகள்,முகவரி இரு நூல்கள் வெளியீடு!



கடந்த 10.10.2018 ஞாயிற்றுக்கிழமை யேர்மனியில் கேவலார் நகரில் எழுத்தாளர் கீதா பரமானந்தனின் சுவடுகள் என்ற சிறுகதை தொகுதியும் முகவரி என்ற கவிதைத் தொகுதியும் வெளியீடு செய்யப்பபட்டது.பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக பேராசிரியை திருமதி அனுஷியா சத்தியசீலன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.சிறப்பு விருந்தினராக வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் கலந்து கொண்டார். நிகழ்ச்சிகளை ETR வானொலி அதிபர் அகரம் அகரதீபம் சஞ்சிகைகளின் பிரதம ஆசிரியர் த.இரவீந்திரன் தொகுத்து வழங்கினார்.சிறுகதை சுவடுகள் நூல் ஆய்வினை சி.கௌசி அவர்களும் முகவரி கவிதை நூல் ஆய்வினை திரு சபேசன் அவர்களும் சிறப்புற ஆற்றினர். எழுத்தாளர் திரு.ஏலையா முருகதாசன், எழுத்தாளர் புத்திசிகாமணி,மண் சஞ்சிகை ஆசிரியர் திரு.வ.சிவராஜா தமிழ்மணி இராஜகருணா ஆசிரியர் திரு. ஜீவகன் எழுத்தாளர் திரு.அம்பலவானர் புவனேந்திரன் திருமதி கலைவாணி ஏகானந்தராஜா இன்னும் பலர் வாழ்த்துரை வழங்கினர். படங்கள் வெற்றிமணி

### ஆணும் ஆணும் பெண்ணும் பெண்ணும்... 13ம் பக்கத் தொடர்ச்சி




உன்னுடைய இந்த அம்பைப் பயன்படுத்த முன் உன்னை நீயே கொல் என்று கூறுகின்றார். அதற்கு இறப்பதற்கு முன் எனக்குத் திருமணம் செய்யும் ஆசை இருக்கின்றது என்று அறவான் கேட்கின்றான். அதற்கு கிருஸ்ணர் மோகினி என்னும் பெண்ணாக மாறி அறவானைத் திருமணம் செய்கின்றார். இது மகாபாரத கதையில் இடம்பெற்ற ஒரு நிகழ்வு. இங்கு கிருஸ்ணர் பெண்ணாக மாறுகின்றார். இது ஒரு ஆண் பெண்ணாகத் தன்னை மாற்றிக் கொள்ளும் தன்மைக்குள் அடங்குகின்றது. இதுபோல் புராணக் கதைகளிலும் அறிந்திருக்கின்றோம். ஆகவே ஒரு ஆண் ஆணையே விரும்புவதும், ஆண் தனது உடல் உறுப்புக்களை மாற்றி பெண்ணாக மாறுவதும் தற்போது வெளிப்படையாக நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

எனவே இயற்கையை மீற முடியாது. அதற்கு இடம் கொடுத்தலாகாது என்பவர்கள் காலம் காலமாகக் கட்டிக்காத்து வந்த தமது பழக்கவழக்கங்களையே காலத்திற்கேற்ப மாற்றிக் கொள்வதைக் கண்கூடாகக் காண்கின்றோம். இயற்கையாகத் தோன்றுகின்ற நரையை மறைத்து "டை" போடுகின்றோம். இயற்கை நகத்திற்கு சாயம் பூசுகின்றோம். காதலுக்கு மறுப்புத் தெரிவித்து கடுமையாகக் கண்டித்த நாம், இப்போது காதல் திருமணத்தை ஏற்றுக் கொள்ளுகின்றோம். சாதிக்கட்டுப்பாடுகளுடன் வாழ்ந்த நாம், அதை மீறிப் சாதி, மத, இன பேதமின்றி பயணிக்கின்றோம். இவ்வாறு மாற்றத்திற்கு உள்ளான நாம், இயற்கையாகவே ஒரு மனிதனின் உடல்மாற்றத்தைக் கேவலமாக கருதுவது எந்தவிதத்தில் நியாயமாகின்றது.

ஒரு மனிதனின் இயல்பான ஆசாபாசங்களுக்கு இடையூறு ஏற்படுத்தாது ஒவ்வொரு மனிதர்களினதும் மன உணர்வுகளை அழிக்க நினைப்பதும் கொலைக்குச் சமனாகும்.

APIRAAMI ENTERPRISE

அபிராமி என்ரப்பிறைஸ்

இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

துரித பண மாற்றுச் சேவை!

Ria

VALUTRANS

Pferdemarkt 9 45127 ESSEN Tel.: 0201/236925

மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan

உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில்

A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen

Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888

Lise-Meitner-Str.20
45144 Essen




# தகவல் அறிவியல்

## சுயதொழில் புரிபவர்கள் கட்டாயம் அறியவேண்டியது!

சேவியர்.

## "வேலை காலியாக இருக்கிறது ! ஐம்பது இலட்சம் பேர் அவசரமாக தேவை"

இன்றைய சூழலில் இப்படி ஒரு விளம்பரம் வந்தால் ஆச்சரியப்படாமல் இருக்க முடியுமா ? உண்மையில் அப்படி ஒரு எண்ணிக்கையிலான அளவுக்கு 'தகவல் அறிவியல்' எனப்படும் டேட்டா சயின்ஸ் துறையில் ஆட்கள் தேவைப்படுவார்கள் என்பது தான் யதார்த்தம். அவ்வளவு ஆட்கள் ஏன் தேவை ? தகவல்களை வெச்சு அவ்ளோ விஷயம் நடக்குதா என்ன ? என மனதில் முட்டி மோதும் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டுமானால் முதலில், டேட்டா சயின்ஸினால் விளைகின்ற நன்மைகள் என்னென்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தகவல் அறிவியலின் பயன்பாடு இல்லாத இடம் என்று ஒன்று இனிமேல் இருக்கப் போவதில்லை எனுமளவுக்கு தகவல் அறிவியல் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கப் போகிறது.
உதாரணமாக ஒரு பெரிய சூப்பர் மார்க்கெட்டுக்குப் போகிறீர்கள் என வைத்துக் கொள்ளுங்கள். அங்கே நுழைந்தவுடன் உங்கள் கண்ணுக்குத் தெரியும் விதமாக சில பொருட்கள் இருக்கும். அதாவது கண்பார்வைக்கு நேரான உயரத்தில் ! சில பொருட்கள் கீழே இருக்கும், எளிதில் தட்டுப்படாது. இன்னும் சில பொருட்கள் உயரமான இடத்தில் இருக்கும் பெரியவர்களுக்கு மட்டுமே பார்க்க முடியும். இன்னும் சில பொருட்கள் 'பில்' போடும் இடத்துக்கு பக்கத்திலேயே இருக்கும் ! ஏன் இப்படியெல்லாம் அடுக்கி வைக்கிறார்கள் ? என எப்போதாவது யோசித்துப் பார்த்ததுண்டா ?

இவற்றையெல்லாம் முடிவு செய்வது 'டேட்டா சயின்ஸ்' தான் ! ஒரு கடையில் எந்தெந்த பொருட்கள் அதிகமாக விற்பனையாகின்றன ? எந்தெந்த பொருட்கள் குறைவாக விற்பனையாகின்றன ? எந்த பொருட்கள் தவிர்க்க முடியாதவை ? எந்த பொருட்கள் பில் போடும் நேரத்தில் கண்களைக் கவரும் ? என அனைத்து விஷயங்களையும் அலசி ஆராய்ந்து தான் இந்த அடுக்கி வைக்கும் முறையையே முடிவு செய்கின்றனர். இது வர்த்தகத்தைப் பெருமளவில் அதிகரிக்க உதவுகிறது.
அமெரிக்காவின் பிரபலமான வால்மார்ட் கடைகள் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். கடையே அரை கிலோமீட்டர் அளவுக்கு விரிந்து பரந்ததாய் இருக்கக் கூடிய கடைகள் அவை. அவர்கள் டேட்டா சயின்ஸை உதவிக்கு அழைத்து எந்தெந்த பொருட்கள் விற்பனையாகின்றன, எந்தெந்த பொருட்கள் விற்பனை குறைவாக இருக்கின்றன ? போன்ற தகவல்களைத் திரட்டினார்கள். அந்த ஆய்வின் அடிப்படையில் தான் பொருட்களை எங்கே வைக்கவேண்டும், எப்படி வைக்க வேண்டும், எவ்வளவு வைக்க வேண்டும் என்பதையெல்லாம் முடிவு செய்தனர். அதன் பின் அவர்களுடைய வர்த்தகம் வளர்ந்தது !
அதில் ஒரு சுவாரஸ்யமான விஷயத்தைம்யும் கண்டு பிடித்தனர். வெள்ளிக் கிழமைகளில் குழந்தைகளுக்கான டயாப்பர் அதிகமாக விற்பனையானது ! அதென்னடா விஷயம் வெள்ளிக்கிழமை என்பது புரியாத புதிராய் இருந்தது. அதே நாளில் பீர் விற்பனையும் அதிகமாய் இருந்தது ! இரண்டுக்கும் இடையே உள்ள தொடர்பை ஆராய்ந்து பார்த்தால், டயாப்பர் வாங்கும் நபர்களே பீரையும் வாங்குவது தெரிந்தது ! அது எல்லாமே ஆண்கள் தான் என்பதையும் அவர்களுடைய அலசல் காட்டிக் கொடுத்தது. அதன்பின் வால்மார்ட் நிர்வாகம் டயாப்பர் இருக்கும் இடத்துக்கு பக்கத்திலேயே பீர் வகைகளையும் அடுக்கி வைத்தது. இந்த இரண்டு விஷயங்களும் எளிதில் கண்ணுக்குத் தட்டுப்படும் வகையிலும் வைக்கப்பட்டது ! அதன் பின் விற்பனை இன்னும் அதிகரித்தது !டயாப்பருக்கும், பீருக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும் ? தகவல் அறிவியல் எனும் ஒரு நுட்பம் இப்படி அலசி ஆராய்ந்து சொன்னால் மட்டுமே இப்படி ஒரு தொடர்பு இருப்பதை அறிய முடியும். இல்லையேல் ஏதோ மொட்டைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போல சம்பந்தம் இல்லாத விஷயமாகவே தோன்றும்.

தொடர்ச்சி 17 ம் பக்கம்


உங்கள் தாய் மொழியில்....
Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU ASF FES இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

Chilli Mixx Catering

உங்கள் மங்கலகர வைபவங்கள் சுவைபெற எம்மை அழையுங்கள்!

திருமண விழாக்கள்
பூப்புனித நீராட்டு வைபவங்கள்
பிறந்த நாள் கொண்டாட்டங்கள்
ஒன்றுகூடல்கள் எதுவானாலும்
அறுசுவை படைக்க அழையுங்கள்



+49 176 41842298 +49 176 21303158


25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

## "வேலை காலியாக இருக்கிறது !

16 ம் பக்கத் தொடர்ச்சி









அதே போல அமேசான்.காம் உட்பட எந்த ஒரு வர்த்தகத் தளத்துக்குப் போனாலும் ஒரு பொருளை தேடுவீர்கள். உடனே கீழே, அதே போன்ற பல பொருட்களின் தகவல்கள் வரும். இரண்டு பொருட்களைச் சேர்த்து வாங்கினால் தள்ளுபடி விலையில் கிடைக்கும் என வரும். இன்னும் ஒரு படி மேலே போய், நீங்கள் எந்த விலையில் பொருட்களைத் தேடுகிறீகளோ அந்த விலையை ஒட்டிய பொருட்கள் மட்டுமே கண்சிமிட்டும். இதன் பின்னணியில் இயங்குவதெல்லாம் டேட்டா சயின்சின் ஏதோ ஒரு அம்சம் தான். அப்படியே விளையாட்டுப் பக்கம் போவோம் ! கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என வைத்துக் கொள்ளுங்கள். ரோஹித் ஷர்மா 50 ரன்கள் அடித்தால் உடனே கணினியில் ஏகப்பட்ட புள்ளி விவரங்கள் வரும். ரோஹித் எத்தனை முறை அரை சதம் அடித்திருக்கிறார், யாருக்கு எதிராய் அடித்திருக்கிறார், யாருடைய பார்ட்னர் ஷிப்பில் அடித்திருக்கிறார், எந்தெந்த கிரவுண்டில் அடித்திருக்கிறார், எந்த இன்னிங்சில் அடித்திருக்கிறார், எந்த ஆண்டு அடித்திருக்கிறார், இதே போல யாரெல்லாம் அடித்திருக்கிறார்கள், என நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு புள்ளி விவரங்களை திணறத் திணற அள்ளித் தெளிப்பார்கள்.

இந்த புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு எந்தெந்த களத்தில் எப்படிப்பட்ட ஸ்கோர் அடிக்கப்படலாம், களத்தின் தன்மையைப் பொறுத்து யாரெல்லாம் நன்றாக விளையாடலாம் களத்தின், எந்த பந்து வீச்சாளருக்கு எதிராக ரன்கள் எடுக்கப்படலாம் போன்ற பல விஷயங்களைக் கணிப்பார்கள். விளையாட்டுத் துறையில் நிறைய கணிப்புகளுக்கும், முடிவுகள் எடுப்பதற்கும் இத்தகைய தகவல்களே முதுகெலும்பாய் இருக்கின்றன. இந்த தகவல்களையெல்லாம் அள்ளி அள்ளித் தருவது சாட்சாத் டேட்டா சயின்ஸ் தான். விளையாட்டை விட்டு விட்டு மருத்துவப் பகுதியை எட்டிப் பார்த்தால், ஒரு மனிதனுடைய உடல் ஒரு நாளில் தருகின்ற தகவல்களின் அளவு சுமார் 2 டெரா பைட் என்கிறது தகவல் தொழில்நுட்பம். மனிதனுடைய இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம், மூச்சு, தூக்கம், நடை என எல்லா விஷயங களையும் கவனித்து தேவையான ஆலோசனை களையும், வழிகாட்டுதல் களையும் தரக்கூடிய பல கருவிகளையும், மென்பொருட் களையும் பிரபல நிறுவனங்கள் உருவாக்கியிருக்கின்றன. இப்படி மருத்துவத் துறையில் நோய்களைக் கணிக்கவும், அதன் மூலம் நோய்களின் தாக்கத்தைக் குறைக்கவும், மருத்துவ ஆராய்ச்சிகளை வலுப்படுத்தவும் தகவல் அறிவியல் பயன்படுகிறது.

அதே போல பழைய நுட்பங்களில் இருந்த தவறுகளைத் திருத்திக் கொண்டு, நோயாளிகளின் நோய்களை கனகட்சிதமாகக் கணிக்க டேட்டா சயின்ஸ் தான் பயன்படுகிறது. தனி நபருடைய மெடிகல் ஹிஸ்டரி, வாழ்க்கைச் சூழல் போன்றவற்றையெல்லாம் அலசி ஆராய முடிவதால் நபருக்கு ஏற்ற மருத்துவம் எனும் தளத்துக்கு மருத்துவ வளர்ச்சி இடம் மாறுகிறது.

இனி வரும் காலங்களில் 'காய்ச்சலுக்கு' மருந்து எனும் நோய் சார் நிலையிலிருந்து 'விஜயகுமார்' க்கு மருந்து எனும் நபர் சார் மருத்துவத்துக்கு மருத்துவத் துறை இடம்பெயரும். அதற்கு டேட்டா சயின்ஸ் தான் துணை செய்யும். அப்படியே திரும்பி காப்பீட்டுத் துறைக்குத் தாவினால் அங்கும் டேட்டா சயின்ஸ் கோலோச்சத் துவங்கியிருக்கிறது. கார் இன்சூரன்ஸ் பக்கம் இப்போது பரவி வரும் 'பே ஹவ் யு டிரைவ்' எனும் கான்செப்ட் தகவல் அறிவியலின் சிந்தனையில் உருவானதே. அதாவது ஒருவர் கார் ஓட்டுகின்ற ஸ்டைல் எப்படி இருக்கிறது என்பதற்கு ஏற்ப காப்பீடு நிர்ணயிக்கப்படும். அவருடைய காரோட்டும் குணாதிசயத்தை தகவல் அறிவியல் கணித்துச் சொல்கிறது. ஆளில்லாத கூகிள் கார் கூட டேட்டா சயின்சின் பிள்ளை தான். காரில் இருக்கின்ற பல்வேறு சிக்னல்கள் அள்ளித் தரும் தகவல்களின் அடிப்படையில் கார் பயணிக்கும். இதனால் விபத்துகள் குறையும். ஹெல்த் இன்சூரன்ஸ் பக்கம் போனால் ஒரு மனிதனுடைய உடல் நிலை, அவருடைய உணவுப் பழக்கம், அவருடைய குடிப்பழக்கம், அவருடைய உடற்பயிற்சி, தூக்கம் போன்ற பல்வேறு தகவல்களின் அடிப்படையில் இந்தக் காப்பீட்டின் மதிப்பு நிர்ணயம் செய்யப்படும்.வங்கித் துறையை எடுத்துக் கொண்டால் வாடிக்கையாளர்களுடைய தகவல்கள், அவர்களுடைய வங்கிக் கணக்குகள், அவர்கள் பணத்தைச் செலவு செய்யும் முறை என ஏகப்பட்ட விஷயங்களை டேட்டா சயின்ஸ் கணக்கில் கொண்டு வங்கிகளின் தரத்தை உயர்த்துகிறது. வங்கிகளில் நடக்கின்ற மோசடிகளைக் கண்டு பிடிக்கவும், வாடிக்கை யாளர்களை வசீகரிக்கும் திட்டங்களை உருவாக்கவும் டேட்டா சயின்ஸ் கை கொடுக்கிறது. இப்படி எந்த ஒரு துறையை எடுத்தாலும் தகவல் அறிவியல் தான் அதன் மையமாக நின்று செயல்படுகிறது. இதன் பல்வேறு அம்சங்கள் தான் மெஷின் லேர்னிங், பிக் டேட்டா, டேட்டா மைனிங் என பல பெயர்களில் உலா வருகிறது.

இது தான் டேட்டா சயின்ஸ் துறை அதன் ஸ்பெஷலிஸ்ட்களை வலை வீசித் தேடிக்கொண்டிருக்கக் காரணம். இந்தத் துறைக்கு நுழைய என்னென்ன தெரிந்திருக்க வேண்டும் ?

**அறிவியல் தொடரும்**










25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

அதிசய உலகம்

# இசையைக் கேட்டால் பூக்கள் வேகமாகப் பூக்குமா?



Dr.நிரோஷினின்

இசை பிடிக்காதவர்கள் இந்த உலகில் இருக்கவே முடியாது. சிலருக்குத் திரைப்பட பாடல்கள் பிடிக்கும், வேறு சிலருக்கு சங்கீதம் பிடிக்கும். ஆனால் உங்களுக்கு ஒன்று தெரியுமா? மனிதர்களாகிய நமக்கு இசை பிடிக்கும் என்பது பெரிய விஷயமே கிடையாது. ஆனால் பூக்களுக்கு இசை பிடிக்கும் என்று சொன்னால் உங்களால் நம்ப முடியுமா? அட, இது என்னடா புதுக் கதை என்று யோசிக்கின்றீர்களா? இதற்குப் பின்னால் அப்படி என்ன தான் இருக்கிறது என்று அறிய விரும்பினால் தொடர்ந்து படியுங்கள்.

சரி, பூக்களால் எப்படி இசையை ரசிக்க முடியும் என்று கேட்கிறீர்களா? பூக்கள் இசையை ரசிக்கின்றன என்பதை விட, இசையைக் கேட்டால் பூக்கள் வேகமாகப் பூக்கும் என்பது தான் இதில் உள்ள சுவாரசியமான விஷயம் ஆகும். இதை உங்களால் முடியவில்லை என்றால் நீங்களே இதை முயற்சித்துப் பாருங்கள்.
தாவரங்கள் இசை கேட்பதால் ஏதாவது பலன் உள்ளதா என்கிற கேள்வியை அடிப்படையாக வைத்து விதம் விதமான கருத்துகள் உலாவி வந்தன. ஆனால் அப்படிச் செய்வதால் உண்மையிலே பலன் உள்ளது என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்து விட்டன. 1848ம் ஆண்டில் ஜெர்மனியில் பேராசியராக இருந்த குஸ்டாவ் பெக்னர் (Gustav Fechner) என்பவர் Soul-Life of Plants என்கிற நூலை எழுதினார். அதில் அவர் உரையாடல்களால் தாவரங்கள் பலனை அடைகின்றன என்பதைக் கூறி இருக்கின்றார். அந்நேரத்தில் இருந்து இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு எண்ணற்ற நூல்கள் வெளியிடப்பட்டு பல்வேறான ஆய்வுகள் செய்யப்பட்டு வந்தன.

லுடுவிக் வான் பேத்தோவனின (Ludwig van Beethoven) இசையை வயல்வெளிகளில் இசைத்துப் பார்த்த கொரிய அறிவியல் ஆய்வாளர்கள், இந்த ஆய்வின் மூலம் தாவரங்களில் உள்ள கேட்கும் மரபணுக்களை (genes) கண்டறிந்தார்கள். அது எப்படி என்றால், சில குறிப்பிட்ட அலை வரிசைகளில் உள்ள இசையைத் தாவரங்களால் உணரமுடியுமாம். எனவே இசையின் உதவியுடன் பூக்களைப் பூக்கவைக்கவும் வளர்க்கவும் முடியும் என்று அந்த அறிவியலாளர்கள் கண்டு பிடித்துள்ளார்கள்.

சரி அப்படி என்றால் எந்த வகையான இசை பூக்களுக்கு மிகவும் ஏற்றது என்று தெரியுமா? விஞ்ஞானிகளின் கருத்துப் படி மேல்நாட்டுச் செந்நெறி இசை, அதாவது classical music மென்மையான இசையான ஜாஸ், ரிதம் அண்ட் புளூஸ், அதாவது சுருடீ போன்ற இசை இருந்தாலே போதுமாம்!
என்னைப் பொறுத்தவரை நாம் மேல்நாட்டு இசை ஒன்றையும் தேடிப் போகத் தேவையே இல்லை. நமது இசையில் கூட தாவரங்கள் நிச்சயமாக வளரக்கூடும்.

## ஏன் வயிற்றில் பட்டாம்பூச்சி பறக்கின்றது?

உங்களில் ஒவ்வொருவரும் இதை அனுபவித்து இருப்பீர்கள். உதாரணத்திற்கு நீங்கள் ஒரு வீதியில் நடந்து செல்கிறீர்கள் என்று எடுத்துக் கொள்வோம், அப்படிச் செல்லும் போது எதிரே தேவதை போல் ஒரு அழகான பெண் உங்களை நோக்கி வருகிறாள், அல்லது கதாநாயகன் போல் ஒரு அழகான ஆண் உங்களை நோக்கி வருகிறார் என்று எடுத்துக் கொள்வோம். அப்படி வரும் போது உதாரணத்திற்கு அந்தப் பெண் உங்களைப் பார்த்து அழகாகச் சிரித்து, உங்களை அந்த நொடியிலே மயக்கி விடுகின்றாள். வாவ்... அது எப்படி இருக்கும்? இப்படி ஒரு சம்பவம் நடைபெற்றால், உங்களுக்குள் முதலாவதாக என்ன தோன்றும்?
அப்படி ஒரு நேரத்தில் வயிற்றில் ஏதோ பட்டாம்பூச்சி பறப்பது போல ஒரு இன்பமான உணர்வை உணர்வீர்கள், சரி தானே? ஆனால் அந்தப் பட்டாம்பூச்சி உணர்வு வருவதற்கான உண்மையான காரணம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? இதற்குப் பின்னால் இருக்கும் அறிவியல் விளக்கத்தை நீங்களும் அறிய விரும்பினால் கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்!



பட்டாம்பூச்சி பறப்பது போன்ற உணர்வு வருவதற்குக் காரணம் வேறு ஒன்றுமே இல்லை, உங்கள் உள் மன அழுத்தத்திற்கு உங்கள் உடல் அளிக்கும் பதில் தான் அந்தப் பட்டாம்பூச்சி உணர்வு ஆகும். என்ன புரியவில்லையா? சரி உதாரணத்திற்கு உங்கள் மனதைக் கவர்ந்தவர் ஒருவர் உங்கள் அருகில் இருக்கும் போது, உடனடியாக நீங்கள் ஒரு விதமான மன அழுத்தம் கொண்ட நிலைக்குப் போய்விடுவீர்கள். மன அழுத்தத்தின் போது எங்கள் எல்லோருக்குள்ளும் 'எதிர்த்து நில், இல்லை ஓடி விடு அதாவது, fight-or-flight' என்கிற ஒரு உணர்வு ஏற்படுகின்றது.

இப்படியான மன அழுத்தம் இருக்கும் போது, உடல் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தும் கபச் சுரப்பி எனப்படும் Pituitary gland மற்றும் ஹைப்போதலமஸ் (Hypothalamus) என்று அழைக்கப்படும் மூளையின் அடிப் பகுதிக்கு சிக்னல்ஸ் அனுப்பப்படுகிறது. இந்தக் கபச் சுரப்பி அடுத்ததாகச் சிறுநீரகங்களுக்கு (kidney) மேலே இருக்கும் அண்ணீரகச் சுரப்பியை (Adrenal gland) தூண்டுகிறது.

தொடர்ந்து இந்த அண்ணீரகச் சுரப்பி இரத்த ஓட்டத்தில் அட்ரினலினையும், வேறு இரசாயனப் பொருட்களையும் விடுவிக்கின்றது. இந்த அட்ரினலின் இரத்த அழுத் தத்தையும், இதயத் துடிப்பையும், தசைகளுக்குச் செல்லும் இரத்த ஓட்டத்தையும் அதிகரிக்கிறது. இதன் விளைவாக நீங்கள் அந்த மன அழுத்தத்தின் காரணத்தைச் சமாளிக்கவோ அல்லது அங்கிருந்து விலகி விடவோ தயாராகிவிடுவீர்கள்.

ஆனால் இப்படி எல்லாம் நமது உடலுக்குள் நடைபெறும் போது கவனிக்க வேண்டிய ஒரு முக்கியமான விஷயம் என்ன தெரியுமா? தசைகளுக்கும், நுரையீரலுக்கும் அதிக அளவில் இரத்தம் செல்வதால், வயிறு உட்பட வேறு சில உறுப்புகளுக்குக் குறைவாக இரத்தம் கிடைக்கின்றது. நண்பர்களே, அப்படிக் குறைவாக இரத்தம் கிடைப்பதை நாம் எப்படி உணர்கின்றோம் தெரியுமா? ஆம் ஆம், வயிற்றில் பட்டாம்பூச்சிகள் பறப்பது போல் உணர் கின்றோம். இது தான் அந்தப் பட்டாம்புச்சிகளுக்குப் பின்னால் இருக்கும் அறிவியல் விளக்கம் ஆகும்.

அது சரி, கடைசியாக உங்களுக்கு எப்பொழுது வயிற்றில் பட்டாம்பூச்சி பறந்தது? இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!






**கே.எஸ்.சுதாகர் - அவுஸ்திரேலியா**

இலக்கியவிழா. திரு.சின்ராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராக ஈழத்திலிருந்து வருகை தந்திருந்தார். சின்ராஜ் பிரதேசச் செயலாளர், எழுத்தாளர், கல்விமான் என்ற மகுடங்கள் கொண்டவர். அவரது முகத்தைப் பார்த்த மாத்திரத்தில் எங்கோ நிரம்பப் பழகியவர் போன்றிருந்தது.

ஆம்! சின்ராஜ் வேறு யாருமல்ல. என்னுடன் பதினோராம் வகுப்பு வரையும் ஒன்றாக விஞ்ஞானம் படித்த சின்னராசாதான்.
நவீன தமிழ் இலக்கியம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார் சின்ராஜ். பேச்சினிடையே என் மனம் பள்ளிக்காலங்களுக்கும் போய் வந்து கொண்டிருந்தது.

பரமேஸ்வரி ரீச்சர்! அப்பொழுது எங்களுக்கு பௌதிகம் படிப்பித்தார். பொல்லாத ரீச்சர். ஆண்டு இறுதிப் பரீட்சைக் கொப்பிகள் திருத்தப்பட்டு மேசையில் அடிக்கி வைக்கப்பட்டிருந்தன. எழுபத்தைந்திற்கு மேலே எடுத்தவர்களுக்கு ஏச்சுடன் பிழை திருத்தமும் சொல்லி கொப்பியளை கையிலை தருவார் ரீச்சர். ஐம்பதுக்கும் எழுபத்தைந்துக்கும் இடையில் என்றால் "ம்" என்ற பெருமூச்சுடன் மேசையிலை கொப்பியளைப் போடுவா. நாங்கள் போய் எடுக்க வேண்டும். ஐம்பதுக்கும் குறைய எடுத்தா ரீச்சருக்குக் கிட்டப் போகத் தேவையில்லை. நாங்கள் கொப்பிகளை எடுக்கப்போகும் பாதி வழியிலேயே பறந்து வரும் கொப்பிகள்.

"சின்னராசா 43. ஏன் தான் படிக்க வாறியோ தெரியேல்லை. உங்களுக்கு இந்தப் படிப்பு ஏறாட்டில் வேறை ஏதாவது துறைகளிலை எடுத்துப் படிக்கலாம். வீட்டிலை அம்மா அப்பாவுக்கு உதவியா இருக்கலாம். அப்பாவுக்கு ஒத்தாசையா இருந்து தோட்டம் செய்யலாம், கள்ளுச் சீவலாம், விறகு கொத்தலாம். இப்பென்ன சயன்ஸ் படிச்சு நாஷாவிலை வேலை செய்யப் போறியளோ?" இறக்கைகள் அறுந்த கோழி போலப் பறந்து வந்த கொப்பி சின்னராசாவின் முகத்தினைப் பதம் பார்த்தது. அவனின் பொய்மூக்கு உடைந்து இரத்தம் வந்தது.

"ரீச்சர் சின்னராசாவுக்கு மூக்காலை ரத்தம் வருது"
ரீச்சர் காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. அடுத்தடுத்த கொப்பிகள் எல்லாம் நாலாபுறமும் பறந்தன.
"நான் இனிப் பள்ளிக்கூடம் வரமாட்டன்" சொல்லிக் கொண்டே மதியத்துடன் சின்னராசா வீட்டிற்குப் புறப்பட்டான்.
அடுத்தநாள் சின்னராசாவின் அப்பா பள்ளிக்கூடம் வந்து போனார். அதன்பிறகு சின்னராசா சொன்னபடி, அவன் பள்ளிக்கூடம் வரவில்லை.

காலம் விரைகின்றது. எங்களுடைய பன்னிரண்டாம் வகுப்புப் பரீட்சை முடிவுகள் வந்தன. நாற்பது பேரிலை இரண்டு பேர் மாத்திரமே பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானோம். எல்லாரும் பரமேஸ்வரி ரீச்சருடன் எங்களுடைய எதிர்காலம் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தோம். திடீரென்று சின்னராசா அதிபருடன் தோன்றினான்.

"ரீச்சர், இவன் உங்களிட்டை முந்திப் படிச்ச மாணவனாம். பிறைவேற்றா பன்னிரண்டாம் வகுப்புப் பரீட்சை எடுத்திருக்கின்றான். பரீட்சையிலை கலைப்பிரிவிலை கம்பசிற்கு எடுபட்டிருக்கிறான். ஒரு "ஏ"யும் மூண்டு "பி"யுமாம். உங்களைச் சந்திக்க எண்டு வந்திருக்கிறான்" மகிழ்ச்சி வெள்ளத்தில் அதிபர். அதிபருக்குப் பின்னாலே ஒட்டிக் கொண்டு நின்றான் சின்னராசா. அதிபர் போய் விட்டார். பரமேஸ்வரிச் ரீச்சர் சின்னராசாவைப் பார்த்துவிட்டு மௌனமாக தன் வேலையைத் தொடர்ந்தார்.


"ரீச்சர்! என்னைப் படுமொக்கு எண்டியள். இப்ப என்ன சொல்லுறியள்?" சின்னராசா வீறாப்புடன் ரீச்சரைப் பார்த்துக் கேட்டான். ரீச்சர் தனக்குள் சிரித்தார்.
"இப்பவும் சொல்லுறன். நீ சயன்ஸ்சிலை படுமொக்குத்தான். சின்னராசா நீ இந்த வகுப்பிலை இருக்கேக்கை எத்தினையாம் பிள்ளையாய் வாறனி?"
சின்னராசா தலை குனிந்து கொண்டு நின்றான்.
"சொல்லு சின்னராசா. எத்தினையாம் பிள்ளையாய் வாறனி?"

"இருபது ரீச்சர்"
"இந்த வகுப்பிலை இருக்கிற நாப்பது பேரிலை இரண்டுபேர் தான் யூனிவசிட்டிக்கு எடுபட்டிருக்கினம். இருபதாம் பிள்ளையாய் வாற நீர் எடுபட்டிருக்கிறீர் எண்டால் அதுக்குக் காரணம் நான் பேசின பேச்சுத்தான். உனக்கு ரோசம் வந்துது. வேற துறையை எடுத்துப் படிச்சாய். பாஸ் பண்ணினாய். இஞ்சை இன்னும் முப்பத்தெட்டுப் பேர் சூடு சுரணை இல்லாமல் நாடி நரம்பெல்லாம் செத்துப் போய்...."
ரீச்சர் சொல்லிக் கொண்டே போனார்.

"ரீச்சர் என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ" சொல்லிவிட்டு விறுவிறெண்டு போய்விட்டான் சின்னராசா.
அந்தச் சின்னராசா இன்று "சின்ராஜ்" ஆக மாறி இலக்கியத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தான்.








# குமாரஸ்தவம் சண்முக கவசம் ஆகியன பதிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இலங்கையில் மூன்று பழம்பெரும் கோவில்களில் திறந்து வைக்கப்பட்டன.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளது பாடல்கள குமாரகுருதாச சுவாமிகள் அருளிய குமாரஸ்தவம் சண்முக கவசம் ஆகியன பதிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இலங்கையில் மூன்று பழம்பெரும் கோவில்களான மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், வவுனியா கந்தசாமிகோவில், நீராவியடி பிள்ளையார் கோவில்களில் பக்திபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாம்பன் சுவாமிகளின் சமாதிக்கோவில் பூஜாதுரந்தரர் குகத்திரு துரைக்கண்ணுதயாளன் இனுங்கித்தோட்டம் கந்தசாமிகோவில் திருபணிச்சபை செயற்பாட்டாளர் சின்னத்தம்பி சீவரட்ணராஜா ஆகியோரால் இக் கல்வெட்டுக்கள் திறந்து வைக்கப்பட்டன.

நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய ஞானதேசிகசம்பந்த சுவாமிகள், செங்காலன் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத் தலைவர் வேலுப்பிள்ளை கணேசகுமார் ஆகியோரும் பல அந்தணர்களும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

## ஆலயத்தில் அன்னதானமாக இருந்தாலும் சமைப்பவர்கள் மருத்துவச் சான்றிதழ் பெறவேண்டும்!




யாழ்ப்பாணம் தென்மராட்சியில் கோவில்களில் அன்னதானம் வழங்குவது குறித்துச் சுகாதார நடைமுறை பேணப்படுகின்றது. சமையலில் ஈடுபடுபவர் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருப்பதுடன் சுத்தமான உடை அணிந்தவராக இருக்க வேண்டும். அவசியம் மேலங்கி (சேட்) அணிந்திருக்க வேண்டும். அத்துடன் ஏப்பிரனும் (உணவு தயாரிப்பாளரின் மேலங்கி) அணிந்திருக்க வேண்டும். சுற்றாடல் சுத்தமாக பேணப்பட வேண்டும்.

இத்தகைய வழிகாட்டல்களை ஏற்று எங்கள் சரசாலை வீரமாகாளி அம்மன் கோவிலில் திருவிழாக் காலத்தில் தினமும் அன்னதானம் இடம்பெறுகின்றது. அன்னதானத்திற்கெனச் சமைக்கப்பட்ட சோற்றை இறக்கிப் பரப்புவதற்கு ஏற்றவாறு நிலத்தில் இருந்து ஒரு அடி உயரத்தில் எவர்சில்வர் கொள்கலம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயம் யாவருக்கும் பொதுவான இடம் ஆனாலும் இங்கும் மனமும் உடலும் சுத்தமாக இருந்தால் யாவரும் நலம்பெறுவார்கள். மக்கள் கூடும் இடம் எப்போதும் சுகாதார வசதியுடன் இருத்தல் உடல் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாததாகும் நன்றி:லலீசன்..



# யேர்மனி ஹம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழா 24.06.2018

படங்கள் : நந்தபாலன்





பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி வழிபடும் தலமாகத் திகழ்கிறது, யேர்மனி ஹம் காமாட்சி அம்பாள் ஆலயம். பல நாடுகளில் இருந்தும் அடியவர்கள் யேர்மனிக்கு வந்து வழிபடுகிறார்கள் .ஆலயத்தோடு கூடிய அங்காடிகள், அன்றையதினம் உறவுகள் கூடும் இடமாவும் அமையும்.



வெற்றிமணி யோர்மனியில் 25ம் ஆண்டில் (16.06.2018) தடம் பதித்த விழாவில் தடம்பதித்த இளம் மணிகள்!

றஜீனா தர்மராஜா

இன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் வெற்றிமணியின் அகவை விழாவில் கலந்து என்னையும் உரை செய்ய வைத்த வெற்றிமணி ஆசிரியர் திரு. சிவகுமாரன் மாமா அவர்களுககு எனது நன்றிகள். இவ்விழாவில் உரை செய்வதற்கு எனக்கு என்ன தகுதி என நினப்பீர்கள். எனக்கு நடைமுறையாக இயல்பாக எழுதும் தன்மை உண்டு என நினைத்தே, என் நடன அரங்கேற்றத்தில் இனங் கண்டு, புலம்பெயர் மண்ணில் பிறந்து வாழும் பிள்ளைகளின் எண்ணங்கள் வெளிவர வேண்டும் என எண்ணி, என்னையும் கட்டுரைகள் எழுத வைத்த வெற்றிமண ஆசிரியருக்கு மீண்டும் எனது நன்றிகள். இக் கட்டுரைகள் என் தமிழ்மொழியினை வளர்ப்பதற்கு நல்ல பயிற்சியாக அமைகின்றன.

இவ்வேளை நான் தமிழ் மொழி கற்க வேண்டும் என நினைத்து தமிழாலயங்களுக்கு அழைத்துச் சென்ற எனது பெற்றோருக்கும் தமிழ்மொழியினைக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகள் கூற ஆசைப்படு கின்றேன்.

வெற்றிமணி என்றாலே தெரியாதவர்கள் எவரும் இல்லை. முன் அட்டைப் படத்தைப் பார்த்தாலே போதும் முழுப் பத்திரிகையையும் வாசிக்கத்தோன்றும்.

வர்ண இதழ் உலகம் உழாவி இலை மறையாய் மறைந்து நிற்கும் கலைஞர்களையும், படைப்பாளர்களையும், சாதனையாளர் களையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரும் பணியில் அகவை யை நிறைவு செய்து இருக்கும் வெற்றிமணி ஆசிரியரை வாழ்த்தி பாராட்டுவோம்.

இவரின் பணி மென்மேலும் வர்ண பூக்களாய் பூத்துக் குழுங்கி மணம் வீச, வெற்றிமணியின் ஓர் மணியாய் ஒலிக்கும் மணி மகளின் வாழ்த்துக்கள்.நன்றி





## குழலோசை

இளம் கலைச்செல்வன் வர்ணன் சுரேஷ்குமார் மோசிங் வாசிப்பதில் வல்லவர். இன்று புல்லாங்குழல் வாசிப்பதில் தன் ஆற்றலை வெளிப்படுத்தி வருகிறார். வெற்றமணி விழாவில் பலரையும் கவர்ந்த புல்லாங்குழல் ஓசைக்கு பக்கமாக இருந்து கீபோட்வாசித்தவர் A.றுவின் அவர்கள். பாராட்டுக்கள்

Foto:Koness Fotos




தனசேகர் பிரபாகரன்

வெற்றிமணி யேர்மனியில் 25 ஆவது வருடத்தில் காலடியெடுத்து வைக்கிறது இந்த தருணத்தை கொண்டாடும் நிகழ்வில் அன்னைத் தமிழ் மொழியின் சிறப்புக்கள் சிலவற்றை எடுத்துரைக்கும் வாய்ப்பு கிடைத்தது, உலகில் பல மொழிகள் இருப்பினும் சில மொழிகளே செம்மொழி என்ற பெருமையை பெற்றிருக்கின்றன, அவற்றுள் இன்றைக்கும் நமது நாவில் ஒலிக்கும் தமிழ் "வாழும் செம்மொழியாக" திகழ்கிறது, தமிழின் பெருமையை சொல்லி மாளாது, சங்க இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரை தொடர்ந்து சுமார் 2000 ஆண்டுகால இலக்கிய வரலாறு நமது தமிழுக்கு உண்டு. சங்க இலக்கி யங்களை படித்தால் தமிழரின் வீரமும், காதலும், கொடைத்தன்மையும் பக்தியும் விளங்கும், இந்த இலக்கியங்கள் தான் நமது இனத்தின் அடையாளம். போர்க்களத்தில் தனது மகன் புறமுதுகிட்டன் என்றதை கேள்வியுற்று வெகுண்ட வீரத்தாய், செல்வங் களை இழந்தும் காதலை இழக்காத கோவலனும் கண்ணகியும் மதுரை செல்லும் காட்சி, நாலாயிர திவ்யப்ரபந்தத்தில் பத்தே பத்து பாடல்களை தீந்தமிழில் யாத்து இறைவனடி சேர்ந்த திருப்பாண் ஆழ்வார் போன்ற எடுத்துகாட்டுத்துளிகள் இவற்றை பறைசாற்றும்.

குடும்பத்தின் சொத்து எப்படி அதன் தலைவரால் பாதுகாக்கப்பட்டு வாரிசுகளுக்கு தரப்படுகிறதோ அது போல நாம் இந்த இலக்கிய செல்வங்களை நமது அடுத்த தலைமுறைக்கு கண்டிப்பாக கொண்டுசேர்க்க வேண்டும் அது நமது கடமையும் கூட. குறைந்த பட்சம் திருக்குறளையும் தமிழரின் முத்தமிழ் காப்பியமாம் சிலப்பதிகாரத்தையும் நமது குழந்தைகளுக்கு அறிமுகப் படுத்து வோம். தமிழரின் குரலாக ஒலிக்கும் வெற்றிமணி இந்த தமிழ்ப்பணிக்கு நம்மையும் நமது அடுத்த தலைமுறையையும் இட்டுச் செல்லும் என்று வாழ்த்துகிறேன் !

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



சுவிஸ்நாட்டு விளம்பரதாரர்கள்
இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
உடன் தொடர்பு கொள்ளவும்.

வெற்றிமணி
WhatsApp 0049 163 199 2333
vettimaniy@hotmail.com

25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

## வேட்டைத் திருவிழா






யேர்மனி டோட்மூண்ட் சாந்தநாயகி சமெத சந்திர மௌலீசர் ஆலய வேட்டைத் திருவிழாவின்போது ( 23.06.2018)





சிவன் ஆலயம் அமைந்துள்ள நகரத்தின் நகரபிதா



வீதி உலா மடை





தேர்த் திருவிழா
24.06.2018





படங்கள் : வெற்றிமணி




தமிழர் கலாச்சார நற்பணிமன்றம் எசன் e.V
*Tamilischer Kultur und Wohlfhartsverein essen e.V*
*AmRingofen.21, 45355 Essen.*
யேர்மன் அரசால் அங்கீகரிக்கப்பட்ட
நுண்கலைக்கல்லூரி -எசன் நடாத்தும்
TCFA GERMANY வருடாந்தப் பரீட்சை-2018

LANDES MUSIK AKADEMIE NRW

அறிமுறைத் தேர்வு
01.7.2018 ஞாயிறு காலை 9.30 மணிமுதல் சகல நுண்கலைகளுக்குமானது.
செய்முறை: 07.7.2018 சனிக்கிழமை காலை: 9.30 சங்கீதம் , வீணை
வயலின் கீபோட்: 08.07.2018 ஞாயிறு காலை 9.30 மிருதங்கம் பரதம்
மண்டபம்: Friefdrich-Lang Str.3-4 54356 Essen ( Straßenbahn.Bocholder.str.)
மேலதிக விபரங்களுக்கு 0176 55 77 87 52



வியாபாரம் பெருக விளம்பரம் செய்க
சுவிஸ்நாட்டு விளம்பரதாரர்கள்
இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
உடன் தொடர்பு கொள்ளவும்.

வெற்றிமணி
WhatsApp 0049 163 199 2333
vettimaniy@hotmail.com




25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட இணைப்புச் சந்தா
£/€69
SET TOP BOX INCLUDED
புதுப்பித்தல்
£/€49
14 மாதங்கள்
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
விஜய்
தமிழ்
KTV
ஆதவன் HD
JAYA TV HD
TENT KOTTA
1000க்கும் அதிகமான தமிழ்த் திரைப்படங்கள்
4K / HD / 5.1 DOLBY தரத்தில் திரைப்படங்கள்
SUN NXT
4000 + திரைப்படங்கள்
DOWNLOAD VIDEOS
Look for this symbol to Download TV episodes to watch on the go without using data
MOBILE & TABLET
App Store
Google Play
OFFLINE VIEWING FEATURES
நிகழ்ச்சிகளை DOWNLOAD செய்து, INTERNET இணைப்பின்றி உங்களுக்கு விரும்பிய நேரத்தில் பார்க்கும் வசதி
* Selected channels only
UNITED KINGDOM
0207 132 2727
GERMANY
069 1200 7102
FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.
www.lycatv.tv




# யேர்மனியில் 25 வது வருடத்தில் தடம் பதிக்கும் வெற்றிமணியின் வெற்றிவிழா



படங்கள் :செந்தில் கோணேஸ்

வெள்ளிவிழா வெற்றிமணியின் 25 ஆவது ஆண்டு வெள்ளிவிழா கொண்டாட்டம் 16.06.2018 அன்று ஜேர்மனியில் Dorfgemeinschafts House, Provinzial Str.01, Hückelhoven, Dovern என்னும் இடத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் னுச. நிரோஷன் தில்லைநாதன் பிரதமவிருந் தினராகக் கலந்து கொண்டார். பரதநாட்டியம், திரையிசை நடனம், திரையிசைப்பாடல்கள், புல்லாங்குழல் இசை, வீணை இசை என கலைநிகழ்வுகள் மிகச் சிறப்பாக இடம்பெற்றன. இந்நிகழ்ச்சிகள் அத்தனையையும் இளந்தலைமுறையினர் மிகச்சிறப்பாக அரங்கத்தில் வெளிப்படுத்தியமை பார்வையாளர்களைக் கவர்ந்தது. வெற்றிமணியின் அன்றும் இன்றும் என்னும் தலைப்பில் ஜேர்மனியில் அன்று வெற்றிமணி எவ்வாறு வெளிவந்தது என்றும், இன்று ஜேர்மனியில் வெற்றிமணி எவ்வாறு வெளிவருகின்றது என்றும் வெற்றிமணி வாசகப் பெருமக்கள் மிகச்சிறப்பாக தமது உரையில் எடுத்துரைத்தனர். வெற்றிமணி ஆசிரியரின் புதல்வன் சஞ்ஜே சிவா அவர்களுடைய வடபழனி என்னும் குறுந்திரைப்படமும் சிவவிநோபன் அவர்களுடைய குறுந்திரைப்படமும் ஒளிபரப்பப்பட்டது. சகநாயகன் சி.சக்திவேல் அவர்களும் இளையவர் செல்வி. லுட்ஷிகா இளங்கோவன் அவர்களும் நிகழ்ச்சித் தொகுப்பினைச் செய்திருந்தனர். சிறப்புரையினை நெதர்லாந்தில் இருந்து வருகை தந்திருந்த வெற்றிமணியின் இளம் எழுத்தாளர் தனசேகரன் பிரபாகரன் அவர்கள் வழங்கியிருந்தார். எப்படி எக்காலத்துக்கு எவ்விதமாக படைப்புக்கள் கொடுக்கலாம் என்று தேடித் தேடிச் செல்லும் வெற்றிமணி ஆசிரியரின் ஞானமே இப்பத்திரிகையின் வெற்றிக்குக் காரணமாகும் எனவும் எதிர்கொள்ளும் நாட்களுக்கு முகங்கொடுக்கும் இளையோர்களின் படைப்புக்களின் அவசியம் கருதி இன்று பல இளையோர்களின் படைப்புக்களைத் தேடிப் பெறுகின்றார் என்னும் விடயத்தையும் வாழ்த்துரை வழங்கிய எழுத்தாளப் பெருமக்கள் எடுத்துரைத்ததுடன் ஆசிரியரின் அயராத உழைப்பினையும் அழகு வடிவத்துடன் பத்திரிகையை வெளியிடுகின்ற அபாரத்திறமையினையும் வாயாரப் புகழ்ந்துரைத்தனர். பேச்சாளர்களையும் கலைஞர்களையும் வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்களும் அவரது பாரியாரும் கௌரவித்ததுடன் விளம்பரதாரர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் ஆசிரியர் நன்றி தெரிவித்தார். மண்டபம் நிறைந்த கூட்டத்துடன் மனநிறைவைத் தந்த வெள்ளிவிழாக் கொண்டாட்ட ஆரம்ப நிகழ்வும் மக்கள் மனதில் நீங்கா நினைவுகளைப் பதித்திருந்தது. கௌசி-யேர்மனி




25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்




25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

10ம் பக்கத் தொடர்ச்சி

## குழந்தைகளைக் குறிவைக்கும் ஆப்ஸ் !

இவையெல்லாம் குழந்தைகளுக்கான ஆப்ளிகேஷன்கள் என்பது தான் கவனிக்கவேண்டிய விஷயம். குழந்தைகளுக்கு கல்வி, பொழுதுபோக்கு, சிந்தனை திறன் வளர்த்தல் என வசீகரிக்கும் ஆப்களின் நிலை தான் இது என்பது கவலையளிக்கிறது.

ஏற்கனவே கூகிள் நிறுவனம் தனிநபர் தகவல்களை மிகப்பெரிய அளவில் சேகரிக்கிறது எனும் சர்வதேச சர்ச்சை உயிர்ப்புடன் இருக்கிறது. அவர்களுடைய பல்லாயிரம் கோடி ரூபாய் பிஸினசின் அடிப்படையே இப்படி சேகரிக்கும் தகவல்கள் தான்.

பாதுகாப்பு விதி முறைகளை மீறும் ஆப்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என கூகிள் நிறுவனம் இப்போது உறுதியளித்திருக்கிறது. குழந்தைகள், குடும்பங்கள் இவற்றின் பாதுகாப்பின் மீது எந்த விதமான தளர்வுக்கும் இடமில்லை என அது தெரிவித்திருக்கிறது. இருந்தாலும் இது எந்த அளவுக்கு சாத்தியம் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

நமது பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் கடமை நம்முடையது. குழந்தைகளுக்கு ஸ்மார்ட் போன் பயன்படுத்தக் கொடுப்பதை முடிந்தவரை தடை செய்வது நல்லது. முடியாத பட்சத்தில் சில விதிமுறைகளையேனும் வைக்க வேண்டியது அவசியம்.

1. குழந்தைகள் சமூக வலைத்தளங்களில் இருக்கின்றார்கள் எனில், யாருடன் தொடர்பில் இருக்கிறார்கள் ? என்னென்ன உரையாடல் நடத்துகிறார்கள் என்பதைக் கவனிப்பது அவசியம். எக்காரணம் கொண்டும் தனிப்பட்ட தகவல்களைப் பகிரக் கூடாது. தனிப்பட்ட படங்களையும் பகிரக் கூடாது எனக் கட்டுப்பாடு விதியுங்கள். யாரேனும் வழக்கத்துக்கு மாறாகவோ, தவறாகவோ பேசினால் பெற்றோரிடம் தெரியப்படுத்த வேண்டும் என்பதை குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுங்கள்.

2 லொக்கேஷன் சர்வீஸ், ஜிபிஎஸ் போன்றவற்றை ஆ.்.ப் செய்து வைத்திருக்க வேண்டும். நமது இடத்தை பளிச் எனக் காட்டும் சர்வீஸ்களை தேவைப்படும் போது மட்டும் ஆன் செய்வது உசிதம். செக்யூரிடி செட்டிங் சரியாக இருக்கிறதா என்பதை பெற்றோர் ஊர்ஜிதப்படுத்த வேண்டும். குழந்தைகளின் போன் செயல்பாடுகளைக் கவனிக்கும் ஆப்களையும் நீங்கள் பயன்படுத்தலாம்.

3. குழந்தைகள் ஸ்மார்ட்போனில் பார்க்கும் விஷயங்கள், பகிரும் விஷயங்கள் சரியானவை தானா என்பதைக் கவனிக்க வேண்டும். பாலியல் விஷயங்களைத் தாண்டி வெறுப்பை வளர்க்கும் விஷயங்கள், பிரிவினையை உருவாக்கும் விஷயங்கள், பாகுபாடு உருவாக்கும் விஷயங்கள் போன்றவற்றுக்கும் குழந்தைகளைத் தள்ளியே வையுங்கள். ஸ்மார்ட்போன் பயன்படுத்தும் குழந்தைகள் மிக விரைவாக மன அழுத்தத்துக்குள் விழுந்து விடுவார்கள் என்கின்றன மருத்துவ ஆய்வுகள்.

4. குழந்தைகள் போன் விளையாட ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்க வேண்டும். அந்த நேரம் தவிர பிற நேரங்களில் டிஜிடல் பொருட்களை அவர்களிடம் கொடுக்கக் கூடாது. பெற்றோரும் குழந்தைகள் இருக்கும் போது போனை கொஞ்சம் ஒதுக்கியே வைக்க வேண்டும். இரவு எட்டு மணிக்கு மேல் எக்காரணம் கொண்டும் போனைப் பயன்படுத்த அனுமதிக்காதீர்கள். காலை 10 மணிக்கு மேல் மாலை எட்டு மணிக்குள் ஒரு குறிப்பிட்ட நேரத்தை அவர்களுக்கு ஒதுக்கலாம்.

5 சமூக வலைத்தளங்கள், ஆப்கள் மூலமாக வருகின்ற ஆபத்துகள் என்னென்ன என்பதை குழந்தைகளுக்கு விளக்கமாகச் சொல்லி விடுங்கள்.

இப்படி சின்னச், சின்ன விஷயங்களில் கவனமாக இருந்தால் பெரிய பெரிய ஆபத்துகளில் விழாமல் குழந்தைகளைக் காப்பாற்ற முடியும். விழிப்பாய் இருப்போம், விழாமல் தடுப்போம்.

## ஒரு ஒத்திகையின் அழகு



யேர்மனி ஆடற்கலாலய மாணவர்கள் திறந்த வெளியரங்கில் வெற்றிமணி வெள்ளிவிழா ஆரம்ப நிகழ்விற்கு (16.06.2018) ஒத்திகை பார்த்தபின் எடுக்கப்பட்ட படம் அல்ல ஓவியம் இது. படம் செந்தில் கோணேஸ்







25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்




# நின்னைச் சரணடைந்தேன்

சித்த சாகரத்தை மொத்தமாய் தத்தெடுத்தவன்
எத்தை கண்டு எப்பொழுது அவனுள் வீழ்ந்தேனோ?

நுண்ணறிவால் தீண்டினாலும் தீராது கொட்டிக்கிடக்கும் அவன் திறனை சொல் சீசாவில் அடக்கி விடமுடியுமா? முடியாது என்று தலையசைத்த என் இதயத்தின் நிலைமை கருதி மீண்டும் தொடர்கிறேன் நின்னை சரணடைந்தேன் ....!
மண்ணின் மடியில் கலை பயிலும் கடலலை போல் ,
புல்லாங்குழல் கண்களை மூடி உதடுகளை யாசிப்பது போல்,
தடாக தாமரையைச் சுற்றி வட்டமிடும் வண்டினம் போல் இயல்பாகவே இயற்கையாய் கரைகிறேன் கரை புரண்டோடும் அவன் எண்ணங்களில்.
அவனை ரசித்தால் இன்பம் தோன்றும்
அவனை புரிந்தால் தெளிவு தோன்றும்
அவனை உணர்ந்தால் உள்ளம் உலையாகும்.
மாய கிறுக்கன் அவன் மனம் தனில் தனி அரசாட்சி நடத்துகிறாள் மாகாளி மஹா சக்தி ! ஏதோ ஏதோ சொற்களை சொந்தமாக்கி கொண்டு என் சொந்த நாயகன் பாரதியை மேலே சொல்ல முயன்றேன் ! மீண்டும் தோற்றேன் !
தோற்றேன் என நீ உரைத்திடும் பொழுதில் வென்றாய் என்கிறான் அந்த சித்தன். அதாவது எங்கணும் எதிலும் அந்த பரம் பொருளே உள்ளான். தன்னை இழந்திடும் நிலை வரும் போது , " நான் " என்பதை இழக்கும் போது ,அதுவே வெற்றியின் ஒரே மார்க்கம் என்கிறார் அந்த ஞான மார்க்கண்டேயர்.

"கரணமும் தனுவும் நினக்கென தந்தேன்
காளி நீ காத்தருள் செய்யே "

படைப்பின் பொருள் உணர்ந்த பாரதி , அகத்தினையும் புறத்தினையும் பகுத்தறியக்கூடியவன் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.அந்த வகையில் மஹாசக்தி பஞ்சகம் என்னும் பாடலிலும் என் மனத்தினையும், புற உடலையும் உனக்காகவே தந்தேன் காத்தருள் காளி என்று குறிப்பிடுகிறார். கரணம் என்றால் மனம், தனு என்றால் உடல். என்னிடம் ஒன்றும் இல்லை யாவும் அந்த சக்தி லீலை என்று சரணடைந்தால் , வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொரு விடயங்களும், கண பொழுதும் , அன்பின் ஊற்றாய் ஆனந்தமாய் வழிந்து பாயவல்லன.
மரணமும் அஞ்சேன் நோய்களை அஞ்சேன்
மாரவெம் பேயினை அஞ்சேன் "
மரணத்திற்கோ, நோய்களிற்கோ ,மன்மத வேலைக்கோ அஞ்சிட போவதில்லை என்கிறார் வாழ்வை புரிந்த நாயகன், உயர் உத்தமன்.
படைத்தவனும் படைப்பும் உயிர் எடுப்பதை பார்த்து கொள்ளும். நம் வேலையாவும் கணமும் இன்புற்று புரிந்து தெளிந்து முழுமையாய் அனுபவித்து வாழ்தல் • மட்டுமே . அவ்வாறான ஆனந்த வாழ்வில் எந்த நோயும் கூட நம்மை அணுக வாய்ப்பில்லை . அது மட்டும் அல்லாது நோய்களில் கொடியது என்று நம் சங்க இலக்கியங்கள் கருதும் உடலையும் உள்ளத்தையும் சிதைக்க கூடிய மன்மதன் தரவல்ல விரக மயக்க நோய்களிற்கும் கூட அஞ்சிட தேவை இல்லை.
காதலும், காமமும், எந்நிலை மயக்கமும் பரமானந்த ஞானத்தை உணர முன் உள்ள வாழ்க்கையின் ஒவ்வொரு அத்தியாயம் என்ற புரிதல் கிடைக்கும் போது நாம் அவற்றிலிருந்து விலகி நிற்க வேண்டும் என்று இல்லை. கடந்து செல்லும் வழி கிடைக்கும்.
"இரணமும் சுகமும் பழியும் நற் புகழும்
யாவும் ஓர் பொருளெனக் கொள்ளேன்"
இரணம் என்றால் துன்பம். துன்பம் இல்லை, துயர் இல்லை என்று பல முறை கவி பாடிய பாரதி , துன்பம் என்றாலும் சுகம் என்றாலும் இல்லை பழி வந்தாலும் புகழ் வந்தாலும் எதையுமே நான் ஒரு பொருட்டாக கருத போவதில்லை ஏனெனில் யாவுமே ஒரு பொருள் தான் என்று எங்கும் விரிந்து பரவும் சக்தியின் வடிவை காண்கிறார்.
"சரணம் என்றுனது பாதமலர் பணிந்தேன்
தாய் என்னை காத்தல் உன் கடனே

இவ்வண்ணம் வாழ சக்தி தாயே உன்னுடைய பூ போன்ற பாதங்களை பணிந்தேன். நீயே சரணம் என்று முற்று முழுதாய் உன் காலடியில் வீழ்ந்தேன் . என்னை காப்பாற்ற வேண்டியது உன்னுடைய கடமை என்று மஹாசக்தியிடம் இறைஞ்சுகிறார். தான் என்னும் மாயை இழந்த பாரதியின் அதி அற்புத தன்மைகளில் ஒன்று சரணடைதல்.






## சிவத்தமிழ் விருது 2018

வெற்றிமணி பத்திரிகை யேர்மனியில் 16.06.2018 நடத்திய வெற்றிமணி ஆரம்ப நிகழ்வில் தெய்வீக நிகழ்வுக்ளை ஆலயங்களில் ஒளிப்பதிவு செய்து உலகெங்கும் பரவிட உழைக்கும் தொண்டர் **தமிழ்மணி திரு.சி.இராஜகருணா** அவர்களுக்கு
வெற்றிமணி சிவத்தமிழ் விருது 2018 வழங்கிக் கௌரவித்தது.
வெற்றிமணி பத்திரிகை சிவத்தமிழ் ஆன்மீகச் சஞ்சிகையை கடந்த 14 வருடங்களாக சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நல்லாசி பெற்று இன்றுவரை தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.
இது ஒரு இலவச வெளியீடு.





25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்




சிவவினோபன்

# உங்கள் ஏழாவது தலைமுறையின் தலையெழுத்து!

அறிவியல் வளர்ந்து வரும் இந்த அகிலத்தில் இலகுவாக எதிர்காலத்தைக் கணித்துவிட முடிகின்றது. ஆனால் கணிப்புக்கள், கணித்தபடி நடக்குமா என்றால், இதோ வாருங்கள் பார்ப்போம் எங்கள் ஏழாவது தலைமுறை எப்படி இருக்கும் என்று.

2000ஆம் ஆண்டில் இணையத்தளம் பிரபல்யமடையும் போது எவரும் எதிர்பார்த்திகருக்கமாட்டார்கள், காசை விடப் பெறுமதியானது கணனியில் சேமிக்கப்படும் எம் தகவல்கள் என்று. ஆம் இந்த இலத்திரனியல் உலகில் எமக்கு எத்தனையோ ஆடம்பர பொருட்கள் மலிவாகவோ அல்லது இலவசமாகவோ கிடைத்துவிடுகின்றது. ஆனால் இலவசமாகக் கொடுப்பவர்கள் எப்படி சம்பாதிக்கின்றார்கள் என்று தெரிந்துகொண்டீர்கள் என்றால் எந்த இலவசத்தையும் இனிமேல் பயன்படுத்தவே மாட்டிர்கள். இலவசமாகக் ஒரு பொருள் கிடைக்கின்றது என்றால், அந்தப் பொருளை பெற்றுக்கொள்ளும் நீங்கள் அங்கே உங்களை விற்கிறீர்கள் என்பது தான் உண்மை.

இலவசத்திற்கும் இந்தத் தலைப்பிற்கும் ஏழாவது தலைமுறைகும் என்ன தொடர்புண்டு என்று ஆச்சரியமாகப் பார்க்கும் உங்களுக்கு ஒரு அதிர்ச்சித் தகவல் காத்துள்ளது. ஏழாவது தலைமுறையில் செலவு செய்ய காசே இருக்காது என்பது தான் அந்த அதிர்ச்சி. அதை புரிந்து கொள்ள 2000ஆம் ஆண்டில் இருந்து இப்போது வரை ஏற்பட்டுள்ள மாற்றத்தை கோர்வையாக கோர்த்துக் கவனிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

ஒரு சில அதி புத்திசாலிகளுக்கு மட்டும் தோன்றும் சிந்தனை எதுவெனில் ஏழாவது தலைமுறையில் நாமே இருக்க மாட்டோமே பின்பெதற்கு இதை எல்லாம் பற்றி நாம் சிந்தித்து சலித்துக் கொள்ளவேண்டும், என்று சிந்திக்கும் நபரில் நீங்களும் ஒருவரா? இல்லை இந்தச் சிந்தனை உள்ள நபர் உங்கள் அருகில் உள்ளாரா? இருந்தால் அவரின் காதில் திருகி அருகில் அமர்த்தி மேற்கொண்டு வாசிக்க ஆரம்பிக்கவும்.

பணம் எவ்வாறு உருவானது என்று தெரிந்து கொண்டால் பணம் எவ்வாறு அழியப் போகின்றது என்று புரிந்துகொள்ள முடியும். ஆரம்ப காலத்தில் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு சிறப்பிருந்தது. ஒரு நாட்டில் உணவு, இன்னொரு நாட்டில் உடை, ஒரு நாட்டில் அணிகலன் இன்னொரு நாட்டில் ஆயுதம் என்று இப்படி ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு சிறப்புகள் இருந்தன. ஆதிகால மனிதனுக்கு அடுத்தவர் பொருள் மீது ஆசை வந்தால் உடனடியாக போர்புரிந்து ஆசைப் பட்டதை அடைந்து மகிழ்ந்தான். அதன் பின் அறிவு வளர, இருந்த சிறப்புகளை மற்றவர்களிடம் பகிர்ந்து வாழ்ந்துவந்தனர் அதனால் பொருட்களின் பெறுமதி என்று ஏதும் கிடையாது, யாருக்கு எது தேவையோ அதை பெறுவதற்கு தன்னிடம் உள்ளதைக் கொடுத்து பரிமாற்றிக் கொண்டனர் அதுவே பண்டமாற்று என்று பேர்பெற்றது. இந்தப் பாண்டமாற்றுத் தான் உலகின் முதல் வர்த்தகத்திற்கு வழிவகுத்தது. அதைத் தொடர்ந்து உலோகத்தில் மோகம் கொண்ட மனிதன் உலோகத்தை உருக்கி அதை ஒரு அடிப்படை பொருளாக்கி நாணயப் பரிமாற்றை கண்டுபிடித்தான். இப்படித்தான் காசு என்ற காலன் உருவானான். காலனுக்கு காலனாக வந்த புதிய பொருள் தான், கணனி என்பதை அறிந்திடாத எம் பாட்டன் செய்த அதே தவறை நீங்களும் செய்யாதிருக்கவே இந்த எச்சரிக்கைக் கட்டுரை உருவாக்கியுள்ளேன்.

ஒரு காலத்தில் உணவை மட்டும் எதிர்பார்த்து ஓடிய மனிதன் இன்று உலகில் எதை நோக்கி ஓடுகின்றான் என்று தெரியாமலேயே ஓடும் நிலை உருவாகியுள்ளது. எமக்குத் தேவையானதை நாமே உருவாக்குவோம் என்று உலகிற்கு முறையான விவசாயத்தை அறிமுகம் செய்தான் தமிழன். உலகின் மற்றைய பகுதியின் உணவுமுறையையும் தமிழர்கள் வாழும் பகுதியில் உள்ள உணவுமுறையையும் கவனித்துப் பார்த்தால் இந்த உண்மை புரிந்து கொள்ளக் கூடிய வகையில் இருக்கும்.

தமிழரும் மனிதர்கள் தானே!, மனிதர்களின் குணம் மாற்றத்தை எதிர்பார்ப்பதும், அதற்கேற்றால்ப் போல் தன்னை மாற்றிக் கொள்வதும். அதனால் தான் இன்று விவசாயிகளின் நிலை தற்கொலையில் வந்து நிற்கின்றது. ஆனால் இந்த நிலையும் இப்படியே நின்றுவிடாது. மாறிக்கொண்டே வரும் உலகில், இன்றிலிருந்து ஏழாவது தலைமுறையில் இந்த உலகில் எவர் கைகளிலும் காசிருக்காது. ஆகவே உங்கள் கொள்ளுப் பேரனுக்கோ அல்லது பேத்திக்கோ உதவ விரும்புகின்றீர்களா? பணத்தைச் சேர்த்து வைக்காதீர்கள், படிப்பைச் சேர்த்து வையுங்கள். அதாவது ஒருவனின் கல்வி காலங்கள் தாண்டிப் பேசும் என்று தமிழர்கள் சொன்னதை இன்று விஞ்ஞானி ஆராய்ந்து கண்டு பிடித்துச் சொல்கின்றான் DNA என்று ஒன்று உண்டு அதன் மூலம் 7 தலை முறை தகவல்கள் ஒவ்வொரு மனிதனின் உடலிலும் உண்டு என்று கூறப்படுகின்றது.

அது எப்படி சாத்தியம் என்றால், இதிகாசக் கதைகளை எடுத்துக் பாருங்கள் புயபலம் பொருந்திய ஒரு ஆண்மகன் சுமார் ஆறடி உயரம் கொண்டவனாக இருப்பான் என்று கூறப் படுகின்றது. ஆனால் ஒரு மகன் தந்தையை விட உயர்வாக இருப்பான். இப்படி இருக்கையில் நீங்கள் இப்போதும் எப்படி அதே ஆறடி உயரத்திலேயே இருப்பீர்கள். குறைந்தது 5000 ஆண்டுகளுக்கு முன் நடந்த கதைகளில் உள்ளவர் 6 அடி உயரம் இருந்திருந்தால் இப்போது இருக்கும் மனிதர்கள் குறைந்தது 9 அடி உயரமாவது வளர்ந்திருக்க வேண்டாமா? ஆனால் இப்போதும் அதே உயரத்தில் இருப்பதற்கு இந்த DNA தான் காரணமாக உள்ளது. ஆகவே ஏழாவது தலைமுறையில் பிறக்கவுள்ள உங்க 6 வது தலைமுறைக்கு உதவ நினைக்கும் நீங்கள் செய்ய வேண்டிய ஒரே வேலை தினமும் ஏதாவது ஒன்றைக் கற்றுக் கொள்ளுங்கள். அதை மனதில் தெளிவாகப் பதிந்து கொள்ளுங்கள். அவை அனைத்தும் உங்க எதிர்கால சந்ததியிற்கு உதவியாக இருக்கும். இப்போது புரிகின்றதா நீங்கள் பள்ளியில்ப் படிக்கும் போது, உங்கள் வகுப்பில் இருக்கும் ஒரு சில மாணவர்கள் மட்டும் ஆசிரியர் சொன்னவுடனடியாக அதை புரிந்து சரியான பதிலை கூறுவார்கள் அதற்கு ஒரே காரணம் அவரின் DNA இல் உள்ள மூதாதயரின் அறிவு ஞானம்.

தொடர்ச்சி 26 ம் பக்கம்



# மாந்தோப்புக் குயில்தானோ?



படம்: கோணேஸ் செந்தில்

ஒரு புகைப்படக் கலைஞனுக்கு வேண்டியது அபூர்வமான அவதானிப்புத் திறன். தான் அவதானித்ததை கணநேரத்தில் சிறைப்பிடிக்கும் வல்லமை. பெண்ணையும், ஆணையும், மாறி மாறி, எடுக்கும் கண்கள், சற்று விரிந்து இயற்கையை கண்டு வியந்து அதற்குள் கரைவது மகிழ்ச்சியான தருணங்களாக அமைவதுடன், காலாதி காலமாக அனுவும், குறையாது அந்த மகிழ்வை அப்படியே பிறருக்கும் வழங்கும் பேறு பெற்றுவிடுகிறது. அப்பேற்பட படம்தான் உங்கள் கண்முன்னே இறக்கை கட்டிப்பறக்கிறது.

சுவிஸ் நாட்டில் புகைப்படக் கலைஞர் திரு கோணேஸ் செந்தில் அவர்கள் **(Koness Fotos )**பயணம் சென்றபோது ஒரு திராட்சைத் தோட்டத்தில் பழங்களை உண்ண வந்த பறவைகளை, இவை. தாய் மண்ணில் மாந்தோப்பில் வாளி கட்டி மணிபோல் அடித்து பறவைகளையும் அணில்பிள்ளையையும் விரட்டுவது போல் இங்கும் பறவைகளை விரட்டுவர். அந்த விரட்டும் கணத்தில் கச்சிதமாக எடுத்த படம் இது. இப்படத்தை பார்ப்பவர்களுக்கு பறவைகள் கரும் புள்ளிகளாகக்கூடத் தெரியலாம். சற்று கலை நயத்தோடு பார்த்தால் புள்ளிகள் எல்லாம் உயிர்பெற்று பறப்பதைக் காணலாம். அலங்காரம் மட்டும் அல்ல அழகு. எந்த இடத்தையும் அழகுக் கோணங்களில் பார்த்தால் அசிங்கம் என்று ஏதும் இல்லை. இன்று நாம் பார்க்கும் திரைப்படங்கள் மற்றும் படங்கள் யாவும் இயல்பாகவே நூறு வீதம் அழகானவை அல்ல. ஆனால் கலைஞன் என்னும் பிரமனின் படைப்பால் அந்த அழகு குவிகிறது. உங்கள் கைகளில் இருக்கும் கமராக்கள் கொண்டு அமரகாவியம் படையுங்கள். கலைஞர் கோணேஸ் செந்தில் படங்களைச் செதுக்குவதில் வல்லவர் அவருக்கு வெற்றிமணியின் வாழ்த்துக்கள்.

**25 ம் பக்கத் தொடர்ச்சி....**

ஏழாவது தலைமுறையில் ஒவ்வொரு மனிதனின் நோக்கமும் உணவு சேர்ப்பதாக மட்டுமே இருக்கும். இப்போது கணனி மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் அனைத்தும் மனிதர்களையும் வீட்டினுள் அடைத்து வைத்து ஆட்சி செய்வதற்கு ஒரே காரணம், பணம் ஒன்று மட்டும் தான். அது எப்படி என்றால், பெரிய நிறுவனங்கள் பணம் சம்பாதிக்க உங்களிடம் தங்கள் பொருட்களை விற்கின்றது, ஆகவே விற்கும் நிறுவங்களிற்கு உங்களின் விருப்பு வெறுப்பு எது வென்று தெரிய வேண்டும் அதைத் தெரிந்துகொள்ளவே செயல்திறன் கூடிய இலத்திரனியல் சாதனங்களை உங்கள் வீடிற்கு அனுப்பியது, இப்போது உங்கள் உடலிலேயே பொருத்திவிட்டது. Smartwatch. Smartphone, Smartback, Smartcarன எல்லாப் பொருட்களின் பெயரையும் பார்த்தீர்கள் என்றால் Smart என்று இருக்கும் அதாவது பொருட்கள் எல்லாம் Smart ஆகிவிட்டன மனிதர்கள் நாம் முட்டாள் ஆகிவிட்டோம். பணம் என்ற ஒன்றின் அழிவில் இந்த அகிலமே மீண்டும் ஆரம்ப காலத்தை நோக்கிச் செல்லப்போகிறது.

கச்சாய் எண்ணெய் தீர்ந்தவுடன் தொழிற்ச்சாலையும் வாகனங்களும் அழிந்துவிடும். தாவரங்களை அழித்து வீடு கட்டும் போது வெப்பநிலை அதிகரித்து உணவும் உயிர்களும் அழிந்துபோகும், இவை அனைத்தைம் பார்த்து வேதனைப்பட்டு, மகாபாரதத்தில் தர்மருக்கு சொர்க்கத்தில் கிடைத்த தண்டனை போல இறுதியாக மனித இனம் அழியத் தொடங்கும். மனிதர்களின் எண்ணிக்கை குறைவடைய புதிதாய் பிறக்கும் மனிதர்களுக்கு விமானம் தொழிற்சாலை போன்றவை எல்லாம் DNA களின் உதவியால் மட்டுமே தெரியவரும். அப்படி உணரும் மனிதர்கள் வான்மீகி இராமாயணம் எழுதியதுபோல, அகத்தியர் ஏட்டுச் சுவடிகள் எழுதியது போல கற்பனையில் அனைத்தையும் எழுதிவைத்து விட்டுச் செல்வார்கள். அதைத் தொடர்ந்து அதிக தாவரங்கள் வளர, புழு பூச்சி தொடங்கி விலங்குகளும் உருவாக மீண்டும் பிறப்போம் 5000 ஆம் ஆண்டில் மனிதர்களாக. வாழ்க்கை ஒரு வட்டம்.வட்டத்தின் புள்ளியே,விட்டத்தின் தொடக்கம்.





# திருமந்திரமும் வாழ்வியலும் 28

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## நடராஜ தத்துவம் திருக் கூத்து (திரு நடனம்)

இறைவன் "சிவாயநம" என்கின்ற திருவைந்தெழுத்துக்களையே தனது திருமேனியாகக் கொண்டு உயிர்களின் பிறவித்துயர் நீங்குவதற்காக நடனம் புரியும் தோற்றமே நடராஜர் தோற்றமாகும். தூல ஐந்தெழுத்தில் (நமசிவாய) ந திருவடி, ம திருவயிறு, சி திருத்தோள், வ திருமுகம், ய திருமுடி. சூக்கும ஐந்தெழுத்தில் (சிவாயநம) சி உடுக்கை எந்திய திருக்கரம் படைத்தலையும், வா வீசிய இடது திருக்கரம் அருளலையும், ய வல (து அபய கரம் காத்தலையும், ந நெருப்பை ஏந்திய இடது திருக்கரம் அழித்தலையும், ம முயலகனைக் கீழே அழுத்தும் திருவடி மறைத்தலையும், திருவாசி "ஓம்" என்னும் பிரணவத்தையும், அதில் உள்ள ஒளிச்சுடர்கள் "ஓம்" என்ற நாதப்பிரம்மத்தின் விரிவான 51 எழுத்துக்களையும் குறிக்கும்.

நடராஜரின் நடனத் தோற்றங்கள் நான்குவித ஆன்மாக்களுக்காக நடாத்தப்படும் நடனத் தோற்றங்களைக் குறிக்கின்றன.

1. ஊனநடனம் (மோக காமிகளுக்காக நிகழ்த்தப் பெறுவது) இதில் படைத்தல் உடுக்கை ஏந்திய திருக்கரம், காத்தல் அமைந்த திருக்கரம், அழித்தல் அக்கினி ஏந்திய திருக்கரம், மறைத்தல் அழுத்தமாக ஊன்றிய திருவடி, அருளல் தூக்கிய திருவடி ஆகியவற்றால் குறிக்கப்படுகின்றன.

2.ஞானநடனம் (முத்தி காமிகளுக்காக நிகழ்த்தப் பெறுவது) இதில் உடுக்கை ஏந்திய திருக்கரம் மாயாமலத்தை நீக்குவதற்கும், அக்கினி ஏந்திய திருக்கரம் கன்ம மலத்தைச் சுடுவதற்கும், ஊன்றிய திருவடி ஆணவமலத்தை அடக்குவதற்கும், தூக்கிய திருவடி பேரின்பம் அருளுவதற்கும், அமைந்த திருக்கரம் பேரின்பத்தில் ஆன்மாவை அழுத்தம் செய்வதற்கும் பயன்படுகின்றன,

3.ஆனந்தநடனம் (மும்மலம் நீக்கி வீடு பேறு அளிக்கும்) இதில் டமருகம் ஏந்திய திருக்கரம் துடியை அசைத்தல் பக்குவம் எய்திய ஆன்மாவின் உணர்விலிருந்து மாயையை உதறி விலக்குவதையும், ஓம அங்கி எனப்படும் அக்கினியை ஏந்திய திருக்கரம் ஆன்மாவின் தொல் வினைகளாகிய கன்மவினைகள் முளையாதவாறு சுடுவதையும், ஊன்றிய திருவடி ஆணவம் மேலிடாமல் அதன் இரு ஆற்றல்களான ஆவாரக சக்தியையும் (ஆணவம் ஆன்மாவை மறைக்கும் செயலையும்) அதோநியாமிகா சக்தியையும் (கீழ் வீழ்த்தும் செயலையும்) கெடுத்து ஆணவ ஒடுக்கம் ஏற்படச் செய்வதையும், தூக்கிய திருவடி சகல, கேவல நிலைகளில் சுழன்று வந்த உயிரை அதிலிருந்து விடுவித்து அதில் மீளாதபடி துரிய அருள் நிலைக்கண் தூக்கி நிறுத்தி உய்விப்பதையும், அவ்வெடுத்த திருவடியின் குஞ்சித (வளைந்த) நிலையும் அதற்கொப்ப அப்பாதத்தைக் காட்டும் திருக்கையும், நில் என்னும் பாணியிலும் உடனாக அருகிருக்கிறேன் என்ற பாணியிலும் அமைந்த அபய கரமும், துரியாதீதம் என்னும் ஆனந்த நிலையில் ஆன்மாவை அழுத்தும் குறிப்பாக அமைந்து பெருங்கருணைப் பெருக்கால் அபயகரத்தால் பேரானந்தக் கடலில் ஆன்மா மூழ்கடிக்கப்படுவதையும் பாவனை செய்கிறது.

4.பெருநடனம் (சீவன் முத்தருக்காக நிகழ்த்தப் பெறுவது) பிறப்பறுப்பதற்காக நிகழ்த்தப்பெறுவது.

திருநடனக் காட்சி பற்றிய சில அருளாளர்களின் கூற்றைப் பார்ப்போமானால் சேக்கிழார் பெருமான்

"கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி."

அப்பர் பெருமான்

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்தசடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே."

மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்தில் இடையில்

..நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே ...

திருமந்திரத்தில் ஆனந்தநடனம் பற்றிய பாடல் 77

"மாலாங்கனே இங்கு யான் வந்த காரணம்
நீலாங்க மேனியன் நேரிழையாள் ஒடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே."

மாலாங்கனே நான் இவ்வுலகிற்கு வந்த காரணம் நீலவண்ண நேரிழையாள் சக்தியுடன் உலகத் தோற்றத்திற்கு மூல காரணமாம் ஆனந்த நடனத்தின் அரும் பொருளாய் வந்த ஞான வேதத்தைச் சொல்வதற்காகத்தான்.

திருமந்திரம் பாடல் 2722

"எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி
எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்
எங்கும் சிவமாய் இருத்தலால் எங்கெங்கும்
தங்கும் சிவன்அருள் தன் விளையாட்டதே"

சிவபெருமானுக்குத் திருமேனி, சிவசக்தி. விண்ணும் மண்ணும் என எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது சிவசக்தி சொரூபமே. எனவே காணும் இடமெல்லாம் சிவசக்தி தோற்றம். எங்கும் சிவசக்தி ஆனதால் எல்லா இடமும் சிதம்பரமே. எங்கும் இறைவன் திருநடனமே. இப்படி எங்கும் சிவசொரூபமாக இருப்பதால் எங்கும் எல்லாவற்றிலும் பொருந்தியிருக்கும் சிவபெருமான்தன் அருள் விளையாட்டு (திருநடனம்) படைத்தல், காத்தல், அருளல், அழித்தல், மறைத்தல் என்னும் ஐந்தொழிலுமே அத்திருக்கூத்து. சிதம்பரம், இறைவன் ஓயாது நடனமாடிக்கொண்டிருக்கும் இடம் இருதயஸ்தானம் என்றும் கூறுவர்.

திருமந்திரம் பாடல் 2723

"சிற் பரஞ்சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற் பதமாம் அந்தச்சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனை பொன்தில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யார் அறிவாரே"

ஞானத்திரு உருவாகவும், சோதி ஒளி வடிவாகவும் உள்ள சிவப்பரம்பொருள், அருள் விளையாட்டாக ஐந்தொழிலும் புரிவதுபோல, உலக இயக்கம் ஒழுங்குற நடைபெற ஐவகைக் கூத்தினையும் நிகழ்த்துகின்றான். அவை சிவானந்தத்தைச் சீவன்களுக்கு அருளும் கூத்து. சொல்லும் பொருளாக உள்ள "ஓம்" எனும் பிரணவ ஒலியில் விளங்கும் அழகியல் கூத்து. பொற்பதியாகிய சித்தாகாசத்தில் விளங்கும் கூத்து. பொன்னம்பலமான தில்லைப் பொன்னம்பலத்தில் ஆடும் அம்பலப் பரவெளிக் கூத்து. ஆருயிர்கள் எல்லாம் கண்டு களித்து இன்புற ஆடும் அற்புதமான ஆனந்த நடனம் என்னும் நடனங்களாகும். இப்படி மன்றிலும், மனதிலும், வெளியிலும், ஒளியிலும், உயிரிலும் கலந்து நடனமிடும் கூத்தன், சிவப்பரம்பொருளின் அளப்பரிய ஆற்றலை அறிந்துணர யாரால் இயலும்?.

ஓம் பூரணம் ஓம்

மானுடம் முழுமை பெறும் பூரணம்

பூரண ஆச்சிரமம்

சுவிற்சர்லாந்து


0041 79 839 27 73

உடலினையும் மனதினையும் உறுதி செய்து
வாழ்வினை வெற்றி கொள்வோம்

யோகா, தியானம், மன ஒருங்குவிப்பு, உடல் உள நல பயில்வு, ஜபதப சாதனைகள்

Purna Ashram Gotthelfstrasse 44, 3400 Burgdorf Switzerland 0041 34 413 02 65

# அவர்களுடைய உலகம்



ஏலையா க.முருகதாசன்

ஒவ்வொரு தனிமனிதனும் தனியாகவும் குழுமமாகவும் தனக்கான உலகத்தை உருவாக்கி வைத்திருக்கிறான்.அது போன்றதே பாலியல் தொழிலாளிகளும் தமக்கான உலகத்தை உருவாக்கி வைத்துள்ளனர்.
வருவாயைக் கொடுக்கும் தொழில்கள் பல இவ்வுலகில் இருக்கின்றன. புனிதமற்ற தொழில் என நியாயப்படுத்தப்பட்ட தொழில்களும் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் நான் பார்த்த பாலியல் தொழில் புரியும் பெண்கள், அரவாணிகளின் உலகம். இலக்கியத் தமிழில் சொல்ல வேண்டுமானால் இது பரத்தையர் உலகம்.இச்சொல்லை அத்தொழிலை இழிவாக கருதி இதை நான் இங்கு பரத்தையர் என பதியவில்லை.பரத்தையர் என்ற சொல்லாடல் தமிழரின் பழந்தமிழ் இலக்கியங்களில் உண்டு.

நான் சிங்கப்பூரில் வேலை செய்த போது சிங்கப்பூரின் அதிரடியான நவீன முன்னேற்றம் பற்றி நேரிடையாகவே கண்டிருக்கிறேன்.சுத்தமான சிங்கப்பூரை உருவாக்குவதற்கு ஆரம்பத்தில் நடைபாதைகளிலோ தெருக்களிலோ கண்ட கண்ட இடங்களில் குப்பை போட்டால் தண்டனைப் பணம் செலுத்தும் முறையை சிங்கப்பூர் அரசு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

சட்டங்கள் மூலம் மக்களை இசைவாக்கத்திற்குள் கொண்டு வருவதும் பின்னர் சுத்தமான நாடு எமது சிங்னகப்பூர் என சிங்கப்பூரியர்களை பெருமிதம் கொள்ள வைக்கின்ற மனநிலையை தனது மக்களிடம் ஏற்படுத்துவதும் ஒரு நுட்பமான சட்டமுறையாகும்.இந்த நிலையானது ஒரு ரொபியின் மேலுறையைக்கூட குப்பைத் தொட்டியைத் தவிர்ந்த வேறு இடங்களில் போடக்கூடாத மனநிலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது.இது சிங்கப்பூர் அரசின் நுணுக்கமான சமூக ஒழுங்கமைப்பின் உள் கட்டமைப்பிற்கான ஒரு உதாரணமாகும். அந்த நுணுக்கமான தூர நோக்குடன் சிங்கப்பூர் அரசால் ஏற்படுத்திய ஒரு தொழில் பிரிவே பாலியல் தொழில் மையம் அல்லது பாலியல் தொழிலாளிகளின் இல்லமாகும்.

சிங்கப்பூரில் புளுபிலிம் என்று அழைக்கப்படும் பாலியல் படங்களைப் பார்ப்பது சட்டப்படி குற்றமாகும்.புளுபிலிமை பார்ப்பவர்கள் காவல்துறையினரால் பிடிக்கப்பட்டால் சட்ட ரீதியான தண்டனைக்குட்படுவார்கள்.
சிங்கப்பூரில் வேலை பார்ப்பதற்காக வெளிநாட்டிலிருந்து சென்றவர்கள் தமது அறைகளில் படங்களைப் பார்த்தார்கள் என்பதற்காக அவர்களை உடனடியாகத் திருப்பி அனுப்பிய சம்பவங்களும் உண்டு.

ஒரு நவீனமான நாட்டில் பாலியல் படங்களைப் பார்ப்பதற்கு தடை ஏன் எற்பட்டது என்பதை பல்வேறு பார்வையூடாக பார்க்கப்பட்ட போதும் பாலியல் படங்களைப் பார்க்கும் ஒருவரிடம் ஏற்படும் அளவுக்கு மீறிய காம உணர்ச்சி காமவெறியாக மாறி பாலியல் வன்புணர்வை ஏற்படுத்தக்கூடிய சாத்தியத்தை உருவாக்கலாம் என்பதற்காகவே இச்சட்டம் அமுலில் இருப்பதாகவும் கொள்ளலாம்.
மாடிவீடுகளைக் கொண்ட சிங்கப்பூரில் பல்கலாச்சார மக்கள் ஒரே கட்டிடத்தில் வாழும் சூழல் உண்டு.பாலியல் படங்களைப் பார்க்கும் ஒருவன் காம உந்துதலினால் நடமாடும் இடங்களில் தறிகெட்டுத் தடுமாறி ஒரு பெண்ணை தவறான நோக்குடன் பார்த்து தனது காம இச்சையைத் தீர்த்துக் கொள்ள முயல்வானானால் அது பல வன்முறைகளுக்கு ஊக்கம் கொடுப்பதற்கு வாய்ப்பளித்துவிடும்.

அதனால்தான் பாலியல் படங்களைப் பார்ப்பதற்கு தடை அங்கு உண்டு என்பதும் ஒரு காரணமாகும்.

அதன் காரணத்தால் தமது பாலியல் இச்சையைத் தீர்த்துக் கொள்வதற்காக பாலியல் தொழிலாளர்களின் இல்லம் அங்கே இருக்கின்றது.நானும் என்னுடன் வேலை செய்த நண்பனுமாக அந்த இல்லங்களைப் பார்ப்பது என்று முடிவெடுத்த போது எனது மனம் சங்கடப்பட்டது.ஏனெனில் நான் திருமணம் செய்தவன் என்ற காரணந்தான்.
ஆனாலும் சிங்கப்பூரில் டெஸ்கா வீதியில் இருக்கும் அந்த இல்லத்தைப் பார்ப்பதற்காக போயிருந்தோம்.அந்தப் பகுதிக்குள் நாமிருவரும் நுழைந்த போது அது ஒரு புதிய உலகமாக இருந்தது.

பல அறைகள் இருந்த அந்த இடத்தில் சில அறைகள் மூடியிருந்தன. அதற்குள் ஆட்கள் இருப்பதற்கான சத்தம் கேட்டது.பல பெண்கள் அறை வாசல்களில் கதிரை போட்டு உட்கார்ந்திருந்தனர். ஒரு பக்கத்தில் அரவாணிகள் நிறையப் பேர் நின்றிருந்தனர்.சில ஆண்கள் அவர்களிடம் பேரம் பேசிக் கொண்டிருந்தனர்.அரவாணிகள் உரத்த குரலில் எதற்காக வாக்குவாதப்பட்டார்களோ தெரியாது அங்கு சலசலப்பாக இருந்தது.
சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு நடந்து கொண்டிருந்த எனக்கு வரக்கூடாத இடத்திற்கு வந்துவிட்டேனோ என்று மனம் குறுகுறுக்கத் தொடங்கியது. காமத்தின் வடிகாலாக இருக்கும் அந்த இடமும் ஒரு நாட்டிற்கு அமைதியைக் கொடுக்கும் இடமாக ஏற்படுத்தப்பட்டிருந்தது.

தொடர்ச்சி 30 ம் பக்கம்

Nabil Party- food
Catering Service
உங்கள் இல்ல வைபவங்களுக்கு
அறுசுவைதரும் உணவுச் சேவை!
Menu:
Vegetable biriyani
Beef biriyani
Chicken biriyani
Vegetable,Mutton & beef Kotthurotti
Short eats Rolls,Samosa,Patties & more
Special Fisch Dishes and Roasted Fisch
M.Nazeer Tel:02451 72 578 / 0157 70 77 3416

இலங்கைக்கு பார்சல் அனுப்ப விரும்புகிறீர்களா?
TAMIL-PARCEL.de
ஒரு பாசல் ஆனுப்பும்
கட்டணம் 55€ மட்டுமே!
PARCELS TO COLOMBO ONLY 50 €
Our partners near you
Arnsberg. Bochum. Bonn. Brüggen.Dortmund.Duisburg. Essen.Frankfurt.Heideelberg. Heilbronn.Hornberg.Herne. Hückelhoven.Krefel. Mannheim.Mönchengladbach. Neuss.Mörfelden-Walldorf.Mühlacker. Mühlheim. Solingen.Stuttgart.Wuppertal
✓ 60 x 40 x 40 cm அளவு பெட்டிகள்
✓ பெட்டியின் உள்ளடக்கம் 40Kg
✓ பெட்டி மற்றும் டேப் ரோல் இலவசம்
✓ நீங்கள் வெளிநாடுகளில் இருந்து அனுப்பும் பார்சல்கள் தாயகத்தில் உள்ள உங்கள் இல்லங்கள் தேடி நேரடியாக கொடுக்கப்படும் (Door-to-Door Delivery)
Best Price Promiser
மக்கள் தொடர்பு:
www.tamil-parcel.de 0176 56841676 0176 24889539
ஒவ்வொரு பார்சலும் 300€ காப்புறுதியுடன் அனுப்பப்படும்
3 பார்சல்கள் அனுப்பினால் 4ஆவது பார்சல் இலவசம்




தொகுப்பு: ஆன்மீகத் தென்றல் த.புவனேந்திரன்

**கிறீவில்ட் ஸ்ரீ நாகபூசணிஅம்பாள் ஆலயம்**
கொடி 23.06.2018 Girmesgath 95 02151 565 00 45
தேர் 01.07.2018 47803 Krefeld.

**கொமஸ்பாக் ஸ்ரீ குறிஞ்சிக்குமரன் ஆலயம்**
கொடி 23.06.2018. Industrie Str 7 02261 913 133
தேர் 01.07.2018 51643 Gummersbach.

**எசன் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்**
கொடி 07.07.2018 Kloster Str 49a 0201 806 74 33
தேர் 15.07.2018 45149 Essen.

**ஹம் ஸ்ரீ திருநல்லூர் ஆறுமுகவேலழகர் ஆலயம்**
கொடி 14.07.2018 Roon Str 2a 02381 291 03
தேர் 22.07.2018 59065 Hamm.

**கிஸ்கெம் ரெக் ஸ்ரீ கனகதுர்க்கை அம்பாள் ஆலயம்**
உற்சவம் 14.07.2018 Alleen Str 18-20 07021 807 43 99
தேர் 22.07.2018 73230 Kirchheim u.Teck

**சுட்காட் ஸ்ரீ விநாயகர் ஆலயம்**
கொடி 20.07.2018 Waiblinger Str 30 0711 11 3281
தேர் 29.07.2018 70372 Stuttgart.

**சுவெட்ரா ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்**
கொடி 21.07.2018 Robertkoch Str 5a 02304 16721
தேர் 29.07.2018 58239 Schwerte..

**ஹம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்**
கொடி 28.07.2018 Ferdinand Poggel Str 25 02381 162 686
தேர் 05.08.2018 59065 Hamm.

**ஹனோபர் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம்**
கொடி 10.08.2018 Carl-Buderus Str 3a> 0511 471 149
தேர் 18.08.2018 30455 Hannover.

**பெர்லின் ஸ்ரீ மயூரபதி முருகன் ஆலயம்**
கொடி 16.08.2018 Blaschko Allee 48 030 694 6900
தேர் 08.09.2018 12355 Berlin.

## Holand

**அருள்மிகு லிம்பேர்க் முருகன் ஆலயம் நேதர்லாந்து**
கொடிஏற்றம் **30-06-2018**
தேர்த்திருவிழா **08-07-2018**
Litscherveldweg-15, 6413 3A Heerlen, Nederlands





நாதஸ்வர தவில் மங்கள இசை
ஆலய உற்சவங்கள் உங்கள் இல்லத்தின் மங்கள வைபவங்கள் அனைத்துக்கும்
இந்தியாவின் தலை சிறந்த நாதஸ்வர தவில் கலைஞர்கள் வருகை தந்துள்ளார்கள்
தவில் வித்துவான் கலைமாமணி கோவிலூர் KG கல்யாணசுந்தரம்
நாதஸ்வர வித்துவான் இசைஞான சிகரங்கள்
நாதஸ்வர வித்துவான் திருக்கோவிலூர் TSE பாபு
நாதஸ்வர வித்துவான் திருக்கோவிலூர் TSA குமார்



தொடர்பு:
ஐரோப்பிய தவில் சக்கரவர்த்தி தவில் வித்துவான் KP செல்வநாயகம், அவரின் சகோதரர் தவில் வித்துவான் KP கேசவன்
02271 988485 / 0177 4695057

# கலைகளிலே அவள் ஓவியம்

## லண்டனில் நடைபெற்ற லலியின் ஓவியக்கண்காட்சி

தனக்காக ஓவியம் வரந்தாலும், ஒவ்வோர் மனநிலையையும் சரியாகப் புரிந்து கொண்டுள்ளார். அதாவது தனது போக்கில் தனது எண்ணத்திற்குரிய ஓவியங்களையும் படைத்துக்கொண்டு. அதில் எந்தக் கலப்படமும் செய்யாமல். பிறர் மனதைப் புரிந்து அவர்களாகவே தன்னை நினைத்துக்கொண்டு அவர்களாகவே ஓவியங்களைக் கொடுத்தும் உள்ளார்.







Colombo
Samudara art Gallery
1979

கடந்த 19.06.2018 முதல் 30.06.2018 வரை (Bourne hall Spring street,Ewell-Surrey KT17 1 UF) லண்டன் நகரில் திருமதி சந்திரவதனி ஸ்கந்தகுமார் அவர்களுடைய ஓவியக்கண்காட்சி இடம் பெற்றது. (அவரது ஓவியப் பெயராக லலி என்று குறிப்பிடுகின்றார்.) ஓவியக் கண்காட்சியினை Eposom and Ewell நகர பிதா Neil Dallen அவர்கள் திறந்து வைத்தார்கள். காலங்களில் அவள் வசந்தம் கலைகளிலே அவள் ஓவியம் என்று ஒரு பழையபாடல் இன்று கேட்டாலும் அது மனதை வருடியே செல்லும். பாடலின் இசை அப்படி. கலைகளிலே அவள் ஓவியம் என்று சொன்னது பெண்ணின் அழகை சொல்வதற்கென்றே அதை வைத்துக்கொண்டோம்.

இன்று சந்திரவதினி ஸ்கந்தகுமார் அவர்கள் வரைந்த ஓவியங்களைப் பார்த்தபோது பெண்ணே ஓவியமானாள் போல் இருந்தது. தனது நேரத்தின் பெரும் பகுதியை ஓவியத்திற்குள் கரைத்திருந்தாள்.

ஒருவன் தனது உடல் நலத்திற்கா ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடம் வரை நடந்து திரும்புவான். அப்படி நடக்கும்போது தான் சென்று திரும்பும் இடத்தையே நினைத்துக்கொண்டு நடப்பானாகில் அது அவனுக்கு ஒரு வேலைபோல் சலிப்பைத்தரும். அதுவே அவன் ஒவ்வொரு அடிவைக்கும் போதும் அக்கம் பக்கம் உள்ள இயற்கை அழகை இரசித்தவண்ணம் நடப்பானாகில் அவன் செல்வேண்டிய இடம் விரைவாக வந்துவிட்டதே என்றும் எண்ணத் தோன்றும். சலிப்பாகவும் இருக்காது.

அதுபோலவே இங்கு ஓவியர் வதனி குமார். தனது ஓவியங்களை ஒவ்வொரு கணமும் இரசித்து இரசித்து படைத்தமையால் அவருக்கு அது ஒரு சலிப்பைக் கொடுக்கவும் இல்லை அதனால் நேரம் தெரியவில்லை. அதனாலே அவரால் குறுகிய காலத்திற்குள் நூற்றுக்கு மேற்பட்ட ஓவியங்களை காட்சிப்படுத்த முடிந்தது.


இது தன் எண்ணத்தை பிறரிடம் திணிக்கும் எண்ணம் அற்ற ஒரு ஓவியர் என்று இவரை எடுத்துக்கொள்ளலாம். திணிப்பு எந்தவகையிலும் ஓவியனுக்கு பிடிக்காத ஒன்று. அவன் சுதந்திரமானவன். அதேபோல் பிறர் சுதந்திரத்தையும் நேசிப்பவன்.அவரது ஓவியங்களின் சிறப்பிற்கு இவையும் ஒரு காரணமே.

மனித வடிவங்களையே தினம் சுற்றாமல் புறவைகள் மலர்கள் மான்கள் யானைகள் என மாறி மாறி தனது படைப்புக்களை முன் வைத்துள்ளார்.

இவர் இலங்கை களனி பல்கலைக்கழகத்தில் 1979 ஆண்டு ஓவியத்தில் பட்டப்படிப்பை முடித்தவர். கொழும்பில் அன்று 01.2.1979 ஆண்டு வியாழக்கிழமை கொழும்பு ( Samudara art Gallery ) சமுத்திரா கலைச்சாலையில் ஓவியக்கண்காட்சியை நடத்தி புகழ்பெற்றவர். அன்று அதனைத்திறந்து வைத்தவர் தாய்லாந்து ஸ்தானிகர் செல்வி அம்பா பத்திரா ஆவார். ஓவியர் என்றால் ஆண் என்றே இருந்த கலத்தில் துணிச்சல்மிக்க ஒரு பெண் ஓவியரா வதனி குமார் உருவானார். இவரது வெற்றிக்கு அவரது கணவரது பங்கும் அதிகமாக உண்டு. வதனி குமாருடன் நானும் பல்கலைக்கழகத்தில் ஒன்றாக ஓவியம் கற்றோம். நம்மோடு கற்றவர்களில் இன்று லண்டனில் மிகவும் பிரபலமாக உள்ள ஓவியர் கே.கே.ராஜா அவர்களும் ஒருவர். அவரது ஓவியங்கள் யாவரும் அறிந்ததே. அவை தனித்துவமானவை.

அவரையும் 18 ஆண்டுகளுக்குப்பின் நேரே இந்த ஓவியக் கண்காட்சியில் காணும் வாய்ப்புக் கிடைத்தது. பல்கலைக்கழகத்தில் கற்றது ஒரு புறம் இருக்க காலம் கற்றுக்கொடுத்தவை அதிகம். கற்றுக்கொண்டே இருப்பவன் தான் கலைஞன். இந்த வகையில் வதனி குமார் இன்றும் கற்றுக்கொண்டே இருக்கும் ஒரு கலைஞர். அதனால் அவளே ஒரு ஓவியம்.

கண்ணா





# யேர்மனி மணிச் செய்திகள்!

வ.சிவராஜா

## யேர்மனியில் பாலியல் கொலைகள் குறைகின்றன சபாஷ்!



உலகில் பணம், பொருள், ஆட்சி அதிகாரம், பாலியல், மதம், நிறம், கட்சி, அரசியல் எனக் கொலைச்சம்பவங்கள் தினமும் நடைபெற்றே வருகின்றன. யேர்மனியைப் பொறுத்தளவில் இச்சம்பவங்கள் இங்குள்ள சனத்தொகை விகிதாசாரத்தின்படி பார்த்தால் குறைவான சம்பவங்களே நடைபெற்றுள்ளன.

பாலியல் கொலைகள் சம்பந்தமாக யேர்மனியில் 1997ம் ஆண்டில் 58 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகவும் 2017ம்ஆண்டில் 9 கொலைச்சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன. இந்தப் புள்ளிவிபரத்தை வைத்துப் பார்க்கும் போது கொலைச் சம்பவங்கள் இங்கு குறை வடைந்துவருவதாகப் பாதுகாப்புப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். ஆனால் நமது சிறிய நாடான இலங்கையை எடுத்து நோக்கினால் பாலியல் கொலைகளின் எண்ணிக்கை தினமும் நடைபெற்றுக்கொண்டெ இருப்பதாகத் தெரியவந்துள்ளது. ஒவ்வொரு நாட்டின் சட்ட திட்டங்களும் நீதித்துறையும் எடுத்துவரும் கடும் நடவடிக்கைகள்தான் இப்படியான கடும் குற்றங்களுக்குத் தீர்வு வழங்கும் எனக்கருதலாம்...

## கடந்த ஆண்டு கார் லைசன்ஸ் பறிமுதல் ஆனவர்கள் அதிகம்!!!



உலகில் வாகனங்கள் உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்த வேளை விபத்துக்களும் அதிகரித்துவருகின்றன. இந்த விபத்துக்களைக்கட்டுப் படுத்த யேர்மனிய பொலிசார் பல நடவடிக்கைகளைக் கையாண்டு வந்தாலும் வாகன ஓட்டுநர்களின் கவலையீனத்தால் பல சம்பவங்களும் உயிரிழப்புக்களும் நிகழ்ந்தவண்ணமே இருக்கின்றன.

அப்படியாகப் பல சட்டங்களையும் கட்டுப்பாட்டையும் மீறி வாகனம் ஓடி பொலிசாரால் பிடிபட்டு ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை (லைசன்ஸ்) இழந்தவர்களோ அதிகம்பேர் அந்த வகையில் அனுமதிப் பத்திரங்களை (பறிகொடுத்தவர்கள்) இழந்தவர்களின் எண்ணிக்கையைப் பார்ப்போம்.

2011 ஆண்டில் 4.31.632பேர்
2012- ஆண்டில் 4.44.405பேர்
2013-ஆண்டில் 4.42.146 பேர்
2014- ஆண்டில் 4.04.839 பேர்
2015-ஆண்டில் 4.01.785பேர்
2016- ஆண்டில் 3.76.462 பேர்
2017- ஆண்டில் 4.51.687 பேர்

ஆகவே கார் போன்ற வாகனங்களை ஓட்டுபவர்கள் மிகவும் கவனமாக அதாவது இந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கு உங்கள் வாகனங்களை ஓட்டுங்கள். மீறினால் தண்டப்பணமும் செலுத்தி அனுமதிப்பத்திரத்தையும் இழக்கவேண்டி நேரிடலாம். ஏனெனில் தற்போது யேர்மனியில் சட்டம் இறுக்கமாக்கப்பட்டிருப்பதுடன் தண்டப்பணமும் அதிகரித்துள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளுங்கள்.

## வேலை இழக்கக் காரணங்கள்...



வேலையும் மனித வாழ்வும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்ததாகும். அதுவும் வெளிநாடொன்றில் முறைப்படி பதிவுசெய்து வேலை செய்தால்தான் எல்லாவற்றிற்கும் நன்மை என்று கூறுவார்கள். உண்மைதான் வேலை செய்வதால் உடலும் ஆரோக்கியம் பெறுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இப்படியாக வேலை செய்தாலும் நோய்கள் நம்மை நெருங்கிவிட்டால் எல்லாம் அதோ கதிதான். யேர்மனியைப் பொறுத்த அளவில் குறித்த காலத்திற்குமுன்பாக வேலை இழப்போரின் காரணங்களைத் தொழில்திணைக் களம் அறிவித்துள்ளது. அதன் விபரங்களைப் பார்த்தால்....01-உள் உறுப்புக்களில் ஏற்படும் நோய்களால் வேலை இழப்பவர்கள் 4% பேர். 02-புற்றுநொய்களால் வேலை இழப்போர் 9% பேர்03-இதய நோய்களால் வேலை இழப்போர் 09% பேர் 04-விபத்துக்களால் பாதிக்கப்பட்டு வேலை இழப்போர் 14%பேர் 05-கால் கை உபாதைகளால் வேலை இழப்போர் 25% பேர் 06-நரம்புத்தளர்ச்சி மற்றும் நரம்பு வியாதிகளால் வேலை இழப்போர் 35%பேர்






25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

## அவர்களுடைய உலகம் 28ம் பக்கத் தொடர்ச்சி

ஒரு அறையில் சேலை உடுத்திருந்த ஒரு தமிழ்ப் பெண் உட்பட நால்வர் உட்கார்ந்திருந்தனர்.உள்ளே சென்ற ஒரு தமிழ் இளைஞன் அந்த தமிழ்ப் பெண்ணிடம் ஏதோ கதைத்தான் அவளும் ஏதோ கதைத்தாள்.அவள் எழுந்து அறைக்குள் செல்ல இளைஞனும் உள்ளே சென்றான்.இளைஞனின் கையில் பயணப்பை இருந்ததையும் கண்டேன்.வேலைக்காக வந்த இலங்கைத் தமிழர்களில் அந்த இடத்திற்கு போனவர்களையும் அறிந்திருந்தேன்.

அதையும் தாண்டி நடந்த பொழுது ஆணுறைகளை விறபவர்கள் பலர் மேசைகளில் அவற்றை வத்திருந்தனர். அத்துடன் பிளாஸ்ரிக்கிலான ஆணுறுப்புகளும் அங்கிருந்தன.சில வேளை ஆணுறுப்புகளில் ஆணுறைகளை எப்படி போடுவது என்பதை காட்டிக் கொடுப்பதற்காக பிளாஸ்ரிக்கிலான ஆணுறுப்புக்கள் இருந்திருக்கலாம் என நினைத்துக் கொண்டேன்.
இந்தக் காட்சிகள் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு வெளியே வந்த போது இவ்வளவு நேரமும் மூச்சுமுட்டியிருந்த சுவாசம் அந்த இடத்தை விட்டகன்று வந்ததும் சுவாசிப்பதற்கு இலகுவாகவிருந்தது.

நண்பனுக்கு இது பாதிப்பை ஏற்படுத்தவில்லை.அவன் அவர்களை நினைத்து பரிதாபப்பட்டதுடன் சிரிக்கவும் செய்தான்.என்னுடன் வந்ததால் அவன் என்னுடனேயே திரும்பி வந்தான்.சில வேளை அவன் தனியாக போயிருந்தால்.........அவன் திருமணமாகாத இளைஞன்.
அறைக்கு வந்ததும் முதல் எனது உடைகளை களைந்து சவர்க்காரத்தூள் போட்டு தோய்ப்பதற்காக வாளிக்குள் ஊற வைத்தேன்.பைப்பில் கனநேரம் குளித்தேன். உடலைச் சுத்தமாக்கிக் கொண்டேன். மனம் சங்கடப்பட்டது ஏன்தான் அங்கு போனேனென்று.

ஆனால் போனதால்தான்
இப்படி அவர்களுடைய உலகம்
இருப்பதையும் அறிந்து கொண்டேன்.
சிங்கப்பூரில் டெஸ்கா வீதியென்றால்
அது பரத்தையர் இல்லங்களால்
பிரபல்யமான வீதிதான். பரத்தையர்
இல்லங்களைப் பற்றி ஆயிரமாயிரம்
கருத்துக்கள் இருக்கலாம் வியாக்கியானங்கள்
இருக்கலாம் கலாச்சாரம் சீரழிந்து
போய்விட்டது ஒழுக்கம் சிதைந்து
போய்விட்டது என பொங்கி யெழலாம்.ஆனால்
ஒரு நாடு தனது நாட்டின் குடிமக்கள்
அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு
சில வழிமுறைகளை கயாளுகின்றது.
அத்தகு வழிமுறைதான் இந்த பாலியல் தொழிலாளர்களின் இல்லங்கள். மனிதனுக்கு தாகம் பசி இருப்பது போல காம உணர்ச்சியும் ஒரு பசிதான்.ஆனால் பசியையும் தாகத்தையும் தீர்ப்பதற்கும் காம உணர்ச்சியைத் தீர்ப்பதற்கும் பாரிய வேறுபாடு உண்டு.
ஆனால் ஒழுங்கமைக்கப்படாத காம உணர்ச்சி சந்தர்ப்ப சூழ்நிலையால் காம வக்கிரமாகவும் காமவெறியாகவும் மாறி வன்புணர்வு மிருகங்களை உருவாக்குவதுடன் இனவாதத்தையும் சமூக வன்முறைகளையும் கொலைகளையும் பொருளாதாரச் சேதங்களையும் ஏற்படுத்திவிடும்.ஒரு ஆணுக்கு ஏற்படும் காம உணர்ச்சியை தீர்த்துக் கொள்ள பண்பாட்டு ரீதியில் அது சரியா பிழையா என்பதற்கப்பால் உனது பசியைத் தீர்த்துக் கொள்ள சட்டத்திற்கு உட்பட்ட தொழிலான பாலியல் தொழிலாளர்கள் உண்டு என்பதே இந்த இடமாகும்.

## அன்பு நிறைய உள்ளவர்கள் மேலோர். 08 பக்கத் தொடர்ச்சி


இரண்டு குடும்பங்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய பிள்ளைகளின் திருமணம் நடைபெறுவதற்கு தயார் செய்துகொண்டிருக்கும் வேளையில் மற்றவர்கள் மற்றவர்களுடன் இவர்கள் என்ன ஜாதி என்று பெண்குடும்பத்தாருக்குத் தெரியுமா என்று கேட்கிறார்களாம். உங்களுக்கு எதற்கு?
மேல் ஜாதியைச் சேர்ந்த ஓர் ஆண், கீழ் ஜாதியைச் சேர்ந்த ஒரு பெண்ணிடம் காம எண்ணத்தில் பழக ஆரம்பிக்கிறான். ஆம் காமத்துக்கு ஜாதி தேவையில்லை. அது சரி. ஒரு நாள் இரவு ஆகிவிட்டது நடு வீதியில் அப் பெண்ணை விட்டு வீடு சென்றானாம். தொடருந்தில் தனியாக அவள் வீடு சென்றாள். அக்கறை இருப்பவன் போல் வீடு சென்ற பின் எனக்கு செய்தி ஒன்று எழுதி அனுப்பு என்றானாம். இவர்களுக்கு நடு வீதியில் விட்டுச் செல்வது புதிது அல்ல!

ஆனால் இக்கீழ் ஜாதிப் பெண் அவளின் நேரத்தை ஒதுக்கி அவனுக்கு நிறைய உதவிகளும் செய்து இருக்கிறாள்.
அப் பெண் ஒருமுறை திருமணம் பற்றி உரையாடியபோது அவன் கூறியது, நான் உன்னைத் திருமணம் செய்து கொண்டால், எனது தாய் உன்னுடன் உரையாடவே மாட்டார். ஒரு பெண்ணாக இருந்து மற்றைய பெண்ணுடன் இப்படி நடந்து கொள்ளலாமா? இது தான் உயர்ந்த ஜாதியா?

வீட்டுக்கு வரும் மருமகள் நல்லவளோ கெட்டவளோ பிரச்சினை இல்லை. ஆனால் எங்களில் ஒருவராக இருக்க வேண்டும். எங்களின் மகனைக் காதலிப்பவளாக நல்லதொரு மனைவியாக இருக்காவிட்டாலும் தவறு இல்லை.

இவர் கூறுகிறாராம் என் அம்மாவுக்காக நான் உயர்ந்த ஜாதிப் பெண்ணை மட்டுமே திருமணம் செய்துகொள்வேன் என்று. ஆம் ஆம் வேறு ஒரு செயலும் அம்மா சொல்வதுபோல் செய்வதில்லை.
அடுத்த நபர் ஒருவர் ஒரு பெண்ணுடன் பழகி வருகிறார். பழகும்போது கூறுகிறாராம் எனது பெற்றோர் மிகவும் கடினமானவர்கள், உன்னுடன் பழகுவது தெரிந்தால் பெரும்கோபம் அடைவார்கள்.
அப்பெண் என்ன செய்தாள், மேற்கொண்டு கதைப்பதையே நிறுத்திவிட்டாள். அவளை நான் ஏன் இப்படி செய்தாய் என்று கேட்ட பொழுது, அவள் கூறியது: நான் ஓர் ஆண்மகனைத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறேன். ஆண் என்பவன் ஒரு பெண்ணைப் பாதுகாப்பவனாக இருத்தல் வேண்டும். எனது கண்களில் இவன் கோழையாகத் தெரிகின்றான். தன் கணவனாக ஒரு கோழையை எவளும் ஏற்றுக்கொள்ளவேமாட்டாள்.

சமுதாயத்துக்காகவும் உறவினருக்காகவும் பயந்து ஒரு பெண்ணின் வாழ்வை கெடுக்கும் இவன் கோழை! அல்லமால் வேறு என்ன!
பெற்றோர் தவறு செய்தால் பிள்ளைகள் அவர்களுக்கு அறிவுரைகள் கூறுவது தவறு இல்லை.
ஆணோ பெண்ணோ காதலித்தவரை ஜாதிக்காக விட்டுச் செல்வது, ஏமாற்றுவது சரியா? இதுதான் நல்ல ஜாதியின் இலட்சணமா?
இரு மனங்கள் ஒன்று சேர்ந்த பின் ஜாதி எதற்கு என்று தூக்கி வீசி, திருமணம் செய்து கொண்டவர்கள் மீது பெரிய மரியாதை இருக்கின்றது.
ஆணோ பெண்ணோ ஜாதியைக் கேட்டு அறிந்து, தன்னுடைய உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர் என்று தெரிந்தபின் அவர்கள் மீது வரும் காதல் உண்மையா???
ஏன் எதற்கு என்று தெரியாமல் வருவது தான் காதல். இவர்களைப் போல் ஜாதி பார்த்து வருவது காதல் இல்லை!!!
எல்லோரையும் தவறாக குறிப்பிடவில்லை. ஒரு சிலராக இருந்தாலும் அது அது ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் என்று ஆகிவிடாதா?
சிலர் செய்யும் கொடூரச்செயல்களை கண்டு கலங்காது உங்கள் வாழ்வை நீங்கள் உயரத்த வேண்டும்.
நல்ல ஜாதியில் பிறந்தால் மட்டுமே நன்மை இல்லை. மனிதநேயத்துக்கு எதிராக வாழும் மனிதன் உயர்ந்த ஜாதியில் இருந்து என்ன பயன். நற்பண்புகளுடன் வாழப்பழகிக்கொள்ள வேண்டும்.


ஸ்ரீ கனகதுர்க்கா
அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941

Milin Impex GmbH
எமது விலைகளை அறிய
எமது இணையத்தளத்தை
பார்வையிடவும்

Web :www.milinimpex.de
எமது நிறுவனம் Mo-Sa 10.00 இருந்து 18.00 வரை உங்களுக்காகத் திறந்திருக்கும்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288

25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

# படைப்பாளியுடன் அமர்ந்து படைப்பை இரசிப்பது பேரின்பம்






ராமேஸ்வரம்

படைப்பாளியுடன் அமர்ந்து படைப்பை இரசிப்பது பேரின்பம்-அது, உப்பின் உவர்ப்பது,தேனின் இனிப்பதில் கரைவது போன்ற பேரானந்தம்.

அன்லொக் (UNLOCK) என்றொரு குறும்படம் பற்றி அதிக செய்திகள் சமூக வலைத்தளங்களில் வலம் வந்த போது அப்படத்தைப் பார்க்க வேண்டுமெனும் ஆவல் மேலிட்டது.
ஒரு குறும்படம் உலகத்திலேயே பாரிஸில் உள்ள பெரும் திரையில் காட்டப்பட்டதும்,அதனைக் கண்டு களிக்க வந்த பார்வையாளர்களின் எண்ணிக்கையின் சாதனையும் புலம்பெயர் படைப்பாளிகளின் வீச்சை வியந்து பார்க்க வைத்தது.
கலாபக்காதலா,ராமேஸ்வரம்,போன்ற திரைப்படங்களின் இசையமைப்பாளரும் மூங்கில் நிலா எனும் இசை அல்பத்தின்
இசையமைப்பாளருமான "நிரு"அன்லொக்கின் இயக்குனர் என அறிந்த போது ஆவல் மேலும் அதிகரித்தது.
கடந்த 19.06.2018 இல் இந்தக் குறும்படத்தை சிறு திரையில் நிருவுடன் அமர்ந்து பார்த்தேன். தேனின் இனிப்பது,உப்பின் உவர்ப்பாய் காட்சிகள் விரிய அந்தர வெளியில் அனாதையாய் உணர்த்தி முடிந்தது படம்.
எனக்குள் பல ஆயிரம் வார்த்தைகள்,ஆனால் நிருவுக்கு எனது மௌனத்தையே பரிசளித்தேன்.
தனது கலை ஆளுமையை உணர்த்த எடுத்த படம் அல்ல அது,மாறாக எமது அல்லது உலகமெல்லாம் யுத்தத்தால் சுற்றி வளைக்கப்பட்டு வாழ்வு பறிக்கப்பட்ட,பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களின் குரலாக ஒளித்தது படம்.
அணுகுண்டுக்கு எதிராக அடிக்கப்பட்ட ஒரு கல் இது என்றாலும், எதிர்காலத்தில் இதுபோல் உருவாகும் பல கற்கள் அணுகுண்டையே உலகிலிருந்து அழித்து,உண்மையான,அமைதிக்கான, உலக ஒழுங்கிற்கான ,அமைப்பின் அவசியத்தைக் குறியீட்டால் உணர்த்தியது.
ஈட்டிகள்,கவசங்கள்,படைகள்,கொண்டு சொற்களாலும் கேவலப்படுத்திய கோலியாத்தை டேவிட்(தாவீது)கவண் கொண்டு ஒரு கல்லால் வீழ்த்தியதைப் போன்ற கதையாக அன்லொக் இல்லாமல் இருக்கலாம்,ஆனால் குறைந்த பட்சம் இந்த உலகைப் புரிந்து கொண்டோம் என்பதற்கு இந்த UN LOCK முதல் சாட்சியமாகியுள்ளது.
புலம் பெயர் தமிழர்களது மறு பெயர்தான் உலகத் தமிழர்கள், இவர்களிடமிருந்து முகிழ்ந்துள்ள புதிய ஆளுமையானது,நாளைய உலகுக்கு வழிகாட்டும்,நவீன சினிமாக்களின் தளமானமுள்ளிவூட்டை (Mulliwood) ஹொலிவூட்டுக்கும் மேலாகப்படைப்பார்கள் எனும் நம்பிக்கையைத் தருகிறது நிருவின் UN LOCK எனும் குறும் படம்.
-கல்லாறு சதீஷ் - சுவிஸ்- 079 8000 100

# செய்யும் கடமையையே ஏதோ தியாகம் என்று நினைக்கிறார்கள்!

பிக் பாஸ் நிகழ்ச்சியில் அரசாங்கங்கள் ஊழலாவது ஏன் என்று விளக்கம் அளித்தார் கமல் ஹாஸன். பிக் பாஸ் 2 நிகழ்ச்சி வார இறுதி நாட்களில் தான் சூடுபிடித்தது. அதற்கு காரணம் கமல் ஹாஸன் வருகை. அவர் அரசியல் பேசி கைதட்டல்களை அள்ளினார். நிகழ்ச்சி கமல் செய்தவை,
பாடல் வைஷ்ணவி கேட்டுக் கொள்ள மாருகோ மாருகோ பாடலை பாடினார் கமல். மனிதர் அந்த பாடலை பாடியபோது அவர் கண்களே கதை பேசியது. கமல் பாடியதை கேட்டு போட்டியாளர்கள் அனைவரும் குஷியாகி எழுந்து நின்று கை தட்டினார்கள்.
கடவுள் பாதி மிருகம் பாதி கலந்து செய்த கலவை நான் என்று பாடிய கமல் ஹாஸன் அந்த பாடல் வளர்ந்த விதத்தை சொல்லி அந்த குடும்பம் எங்களுடைய பிக் பாஸ் என்று கூறி மகிழ்ந்தார்.

பிக் பாஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குவது தனக்கு கிடைத்த பாக்கியம் என்றார் கமல். கடமையை செய்வதை ஏதோ தியாகம் மாதிரி நினைப்பதால் தான் பல அரசுகள் ஊழலுக்கு ஆளாவதற்கு காரணம். செய்யும் கடமையையே ஏதோ தியாகம் என்று நினைப்பது தான் என்றார் கமல். விஸ்வரூபம் 2 படத்தின் ஒரு பாடலை பிக் பாஸ் மேடையில் வெளியிட உள்ளேன் என்று தெரிவித்தார் கமல்.

வெற்றிமணி விழாவை வெற்றிவிழாவாக்கிய
ஆசியா சமுத்திரத்திற்கும்
ஏனைய ஆதரவாளர்களுக்கும்
எங்கள் நன்றி








## வராது! ஆனால் வரும்....

சர்க்கா படம் வெளிவரும் ஆனால் அதற்கு முன் அரசு தடைபோடும். அது மட்டுமல்ல அதன் கதை எனது என்று இருவர் வழக்குப் போடுவார்கள் பின்பு படம் வெளிவரும் முதல் நாள் சமரசமாகும். படம் வெளிவரும் வந்த தடைகள் படத்திற்கு ஆன பெரும் விளம்பரமாகவே அமையும்.



ஆசியா சமுத்திரம்
Asiatischer super markt

தரமும் மலிவும் நிரந்தரம்!

ஆசிய ஆபிரிக்க மற்றும், இலங்கை, இந்திய
பலசரக்குப் பொருட்கள்,மரக்கறி வகைகள்,
கடல் உணவுவகைகள், அனத்திற்கும், எம்மை நாடுங்கள்.

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Mönchengladbach
Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan

துரித பணமாற்றுச் சேவை
Hückelhoven




உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
# EurAsian - Tours
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS MONEY TRANSFER
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
இந்தியா- இலங்கை- விசா பெற்றுத்தரப்படும்!


# Jasmine Silk House
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen



# ASIA BAZAR
துரித பண மாற்றுச் சேவை!
Ria Money Transfer
MoneyGram
VALUTRANS MONEY TRANSFER
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
உரிமையாளர்:
பா. கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


Stuttgart நகரில்...
# Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
0170 334 4059
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976


Photography Video Filming Album Making Graphic Desiging
Your Dreams Comes True
# AKR Visualizers
professional photography & cinematography
BOOK A SESSION NOW AT
0049 231 5897 7140
0049 162 803 1647
Rheinische Str. 56
44137 Dortmund
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com

# SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN

069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main

India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.

# StaR - Impex
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்
யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Rabeena
இலங்கையில் தயாரிக்கப்பட்ட
Rabeena தயாரிப்புக்களின்
யேர்மனிக்கான ஏக விநியோகஸ்த்தர்


Kipper Str.3 44147 Dortmund Germany